MADRAS GOVERNMENT ORIENTAL SERIES

Published under the authority
of the
Government of Madras

General Editor:
T. CHANDRASEKHARAN, M.A., L.T.,
Curator, Government Oriental Manuscripts Library,
Madras.

No. CXIV

மகாபரத சூடாமணி

நான்காம் அத்தியாயம்

சங்கீதாதி ராக மேள லட்சணம்

MAHĀBHARATA CHŪḌĀMAṆI

CHAPTER FOUR

SAṄGĪTĀDI RĀGA MĒḶA LAKṢAṆAM

Editors :

SAṄGĪTA KALĀNIDHI
MUDIKONDAN VENKATARAMA AIYAR
&
R. VISVANATHAIYAR

Published by :

Mahāmahopādhyāya Doctor V. Swaminathaiyar Library,
Adyar, Madras 20.

1955

INTRODUCTION

The Government of Madras took up for consideration the question of publication of the various manuscripts in different languages on subjects like Philosophy, Medicine, Science, etc., early in May, 1948. Important Manuscripts Libraries in the Madras Presidency were requested to send a list of unpublished manuscripts with them for favour of being considered by the Government for publication. The Honorary Secretary of the Tanjore Maharaja Serfoji's Sarasvathi Mahal Library, Tanjore, alone complied with this request. This list as well as a similar list of unpublished manuscripts in the Government Oriental Manuscripts Library, Madras, were carefully examined and a tentative selection of manuscripts suitable for publication was made. The Government in their Memorandum No. 34913/48-10, Education, dated 4-4-1949, constituted an Expert Committee with the Curator of the Government Oriental Manuscripts Library, Madras, as the Secretary, for the final selection of manuscripts suitable for printing and for estimating the cost of publication.

The following (persons were appointed as) the members of the Committee :—

1. Sri T. M. Narayanaswami Pillai, M.A., B.L.
2. ,, R. P. Sethu Pillai, B.A., B.L.
3. ,, C. M. Ramachandra Chettiar, B.A., B.L.
4. ,, R. Krishnamoorthy, (Kalki).
5. Dr. N. Venkataramanayya, M.A., Ph. D.
6. Sri M. Ramanuja Rao Naidu, M.A.
7. ,, V. Prabhakara Sastri.
8. ,, N. Venkata Rao, M.A.
9. ,, H. Sesha Ayyangar.
10. ,, Masti Venkatesa Ayyangar.
11. ,, M. Mariappa Bhat, M.A., L.T.
12. Dr. C. Achyuta Menon, B.A., Ph. D.

13. Dr. C. Kunhan Raja, M.A., D. Phil.
14. ,, A. Sankaran, M.A., Ph.D., L.T.
15. Sri Polakam Rama Sastri.
16. ,, S. K. Ramanatha Sastri.
17. Dr. M. Abdul Haq, M A., D. Phil., (Oxon.)
18 Afzul-ul-Ulama Hakim Khader Ahamed.
19 Sri P. D Joshi.
20. ,, S. Gopalan, B.A., B.L.
21. ,, T. Chandrasekharan, M.A., L.T.

With the exception of Sri Masti Venkatesa Ayyangar, and Dr. C. Kunhan Raja, the above members continued to be members of the Expert Committee for 1950-51 also to which the following gentlemen were added in Government Memorandum 7297-E. 50-3, Education, dated 19th May 1950 and Government Memorandum No. 15875-E 50-4, Education 7th September 1950.

1. Dr. A. Chidambaranatha Chettiar, M.A., Ph. D.,
2. Sri S. Govindarajulu, B.A., B.L., LL.B., Bar-at-law.
3. Capt. G. Srinivasamoorthy, B.A., B.L., M.B., and C.M.
4. Dr. Muhammad Hussain Nainar, M.A. Ph. D.,
5. Sri T. V. Subba Rao, B.A., B.L.,
6. Principal, College of Indian Medicine, Madras.

The members of the Committee formed into Sub-Committees for the various languages, Sanskrit, Tamil, Telugu, Kannada, Malayalam, Mahrathi and Islamic Languages. They met during the month of May, 1949, at Madras and at Tanjore to examine the manuscripts and make a selection. The recommendations of the Committee were accepted by the Government and they decided to call these publications as the "MADRAS GOVERNMENT ORIENTAL SERIES," and appointed the Curator, Government Oriental Manuscripts Library, Madras, as the General Editor of the publications under this series.

The following manuscripts were taken up for publication during 1949-50.

"A" FROM THE GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY, MADRAS.

TAMIL

1. Kappal Śāttiram
2. Anubhava Vaiddiya Muṟai
3. Āttānakōlāhalam
4. Upadēśa Kāṇḍam
5. Cōḷaṉ Pūrva Paṭṭayam
6. Śivajñāna Dīpam

TELUGU

1. Auṣadha Yōgamulu
2. Vaidya Nighaṇṭuvu
3. Dhanurvidyā Vilāsamu
4. Yōga Darśana Viṣayamu
5. Khaḍga Lakṣaṇa Śirōmaṇi

SANSKRIT

1. Viṣanārāyaṇīyam—(Tantrasārasaṇgraha)
2. Bhārgava Nāḍikā
3. Hariharacaturaṅgam
4. Brahmasūtravṛtti—Mitākṣarā
5. Nyāyasiddhānta Tattvāmṛtam

MALAYĀLAM

1. Garbha Cikitsa
2. (a) Vāstulakṣaṇam
   (b) Śilpaviṣayam
3. Mahāsāram
4. Kaṇakkusāram
5. Ḳriyākramam
6. Kaṇakkusāram—(Bālaprabōdham)

KANNADA

1. Lōkōpakāram
2. Raṭṭamatam
3. Aśvaśāstram
4. Vividha Vaidya Viṣayagaḷu
5. Saṅgītaratnākara
6. Sūpaśāstra

ISLAMIC LANGUAGES

1. Jamil-Al-Ashya
2. Tibb-E-Faridi
3. Tahqiq-Al-Buhran
4. Safinat-Al-Najat

"B" FROM THE TANJORE MAHARAJA SERFOJI'S SARASVATHI MAHAL LIBRARY, TANJORE

TAMIL

1. Śarabendra Vaidya Muṟai (Diabetes)
2. Do. (Eyes)
3. Do. (Anaemia)
4. Do. (Svāsakāsam)
5. Agastiyar
6. Koṅkaṇaṟśarakku Vaippu
7. Tiruccīṟṟambalakkovaiyār with Padavurai
8. Tālasamudram
9. Bharatanāṭyam
10. (a) Paṇḍikēḷi Vilāsa Nāṭakam
    (b) Purūrava Cakravarti Nāṭakam
    (c) Madana Sundara Vilāsa Nāṭakam
11. Percy Macqueen's Collection of Folklore in the Madras University Library
12. Rāmaiyaṉ Ammāṉai

TELUGU

1. Kāmandakanītisāramu
2. Tāladaśāprāṇapradīpikā
3. Raghunātha Nāyakābhyudayamu
4. Rājagōpāla Vilāsamu
5. Rāmāyaṇamu by Kaṭṭa Varadarāju

MAHRATHI

1. Nāṭyaśāstra Sangraha
2. (a) Book of Knowledge
   (b) Folk Songs
   (c) Dora Darun Veṇi Paddhati
   (d) Asvasa Oatula Dumani
3. (a) Pratāpasimhendra Vijaya Prabanda
   (b) Sarabhendra Tirthāvali
   (c) Lāvaṇi
4. Devendra Kuravanji
5. Bhakta Vilāsa
6. Sloka Baddha Rāmāyana

SANSKRIT

1. Aśvaśāstra with Tricolour illustrations
2. Rajamṛgānka
3. Ānandakandam
4. Āyurvedamahodadhi
5. Gita Govinda Abhinaya
6. (a) Coḷacampū
   (b) Sahendra Vilāsa
7. Dharmākūttam—Sundara Kāṇḍa
8. Jātakasāra
9. Viṣṇutattvanirṇaya Vyākhyā
10. Sangita Darpaṇa
11. Bijapallava

During 1950, only the Sub-committee for TAMIL, TELUGU and KANNADA met in the month of July 1950 at Madras.

The following manuscripts were taken up for publication in the various languages during 1950–51 :—

TAMIL

1. Daṭcanāyaṉār-Vaiddiya-Aṭṭavaṇal
2. Vaiddiyak Kalañciyam
3. Anubhava Vaiddiya Muṟai, Vol. 3

TELUGU

1. Śaivācārasaṅgrahamu
2. Anubhava Vaidyam
3. Abhinayadarpaṇamu

SANSKRIT

1. Ārogyacintāmaṇi
2. Tattvasāra WITH Ratnasāriṇī
3. Sūtrārthāmṛtalaharī
4. (a) Ratnadīpikā
   (b) Ratnaśāstra

MALAYĀLAM

1. Aśvacikitsa
2. Phalasārasamuccaya

KANNADA

1. Vaidya Sāra Saṅgraha

During 1951–52, only the Sub-Committees for TAMIL, TELUGU and MALAYĀLAM met in the month of April 1951. The following manuscripts were taken up for publication in the various languages :—

TAMIL

1. Saptariṣināḍi Vol.I–Mēsalagnam.
2. Karnāṭakarājākkaḷ Savistāra Caritram
3. Bharata Siddāntam
4. Pillaippiṇivākaṭam
5. Anubhava Vaittiyam Vol. 4
6. Māṭṭuvākaṭam

TELUGU

1. Brahmavidyā Sudhārṇavamu
2. Rāgatāḷacintāmaṇi
3. Vaidyacintāmaṇi
4. Kumārarāmuni Kathā
5. Kāṭamarāju Kathā

SANSKRIT

1. Devakeralam—Candrakalā Nāḍi
2. Pātañjala Yogasūtra Bhāṣya Vivaraṇa by Sri. Śaṅkarācārya

MALAYĀLAM

1. Kiḷivaṇḍusamvādam
2. Advaita Vedāntam
3. Bārhaspatyasūtra WITH Malayālam commentary
4. Karaṇapaddhati

KANNAḌA

1. Sadgururahasyam

ARABIC

2. Shawakil-Ul-Hur

In Government memorandum No. 18947 - E/52-2. Education dated 7th August, a few changes were made in the personnel of the Expert Committee.

The names of the following members were deleted :

1. Sri V. Prabhakara Sastri.
2. ,, C. Achyuta Menon.
3. ,, M. Abdul Haq.

The following gentlemen were included as members of the Expert Committee :—

1. Sri M. Somasekhara Sarma.
2. Dr. V. Raghavan, M.A., Ph. D.,

3. Dr. R. Nagaraja Sarma, M.A. Ph. D.,
4. „ S. Krishna Nayar, M.A., Ph. D.,
5. Professor S. A. Bukhari, M.A.

The Sub-Commitees for all the languages met during September 1952 for selecting manuscripts for publication.

The following manuscripts were taken up for publication during 1952-53 :—

TAMIL

1. Saptarişināḍi Volume II - VṚṢABHA LAGNA.
2. Temple Inscriptions of South India. Vol. I.

TELUGU

1. Śārīramu.

KANNADA

1. Bijjalarāya Carite.
2. Vaidyasāra Saṅgraha Volume II

MALAYĀLAM

1. Vidyāmādhavīyam.
2. Sarvasādhāraṇa Cikitsa.
3. Viṣa Cikitsa AND Viṣappāṭṭusāram.

SANSKRIT

1. Nyāyaratnam with the commentary Dyutimālikā.
2. Cikisātilakam.
3. Nṛttaratnāvali.

The Government in their G. O. Ms. No. 1820 Education dated 4th August sanctioned a grant of rupees 9,000 to the Dr. V. Swaminatha Iyer's Tamil Library, Adyar, towards the publication of the following manuscripts as part of the "Madras Government Oriental Series":—

1. Tiruvācaka Vyākhyānam
2. Mahābhārata Cūḍāmaṇi

Of these two works, *Tiruvācaka Vyākhyānam* was completed in 2 parts, the first part in January 1954 and the 2nd part in December 1954. The fourth chapter of *Mahābhārata Cudāmani* which deals about Carnatic Music and entitled *Saṅgītādi Rāga Mēla Lakṣaṇam* has been now edited by Sri Saṅgīta Kalānidhi Mudikondan Venkatarama Aiyar and Sri R. Visvanathaiyar. The other chapters which deal about dance are in press.

The following manuscripts were taken up for publication during 1953-54 :

TAMIL

1. Saptariṣināḍi - Volume III - Mithuna Lagna.
2. Temple Inscriptions of South India - Volume II.

TELUGU

1. Bhāratasārasaṅgrha.

KANNADA

1. Manmathavijaya.

MALAYALAM

1. Jñānapīyūṣam.

SANSKRIT

1. Daivajñābharaṇa.

PERSIAN

1. Baharisthan Sukhan.

Out of the seven manuscripts taken up for publication, five manuscripts excepting one in Telugu and one in Persian were printed during the year.

The following manuscripts were taken up for publication during 1954-55.

TAMIL

1. Piḷḷaippiṇivākaṭam - (on infantile disease) Volume II.
2. Saptariṣināḍi. Volume IV.—Kaṭaka Lagna.
3. Pērūr Kōvai.
4. Siddhāntaviḷakkam.
5. Sāmudrikalakṣaṇam.
6. Ānandaraṅga Kōvai.
7. Temple Inscriptions of South India—Volume III.

KANNADA

1. Abhidhānaratnamāla.
2. Vyavahāragaṇita.

MALAYALAM

1. Vētālapañcaviṁśati.
2. Yudhiṣṭhiravijayam.

SANSKRIT

1. Ābhoga, a commentary on the kalpataru.
2. Aumāpatam.
3. Mahābhāskarīyam.

PERSIAN

1. Nuskha-e-Shajahani.

On account of the separation of the Andhra State, the printing of the Telugu manuscripts could be undertaken only in consultation with that state. But as the concurrence of that state has not been received so far, no work in Telugn was taken up for publication although three works namely Bobbiliyuddhakathā, Haider Caritramu and Āryabhaṭiya Siddhānta Vyākhyā were selected for publication during 1954–55.

It is hoped that the publication of most of the important manuscripts will be completed within the next few years.

Some of the manuscripts taken up for publication are represented by single copies in the Library and consequently the mistakes that are found in them could not be corrected by comparing them with other copies. Tho editors have, however tried their best to suggest correct readings. The wrong readings are given in round brackets and the correct readings have been suggested in square brackets. When different readings are found, they have been given in the footnote except in the case of a few books in which the correct readings have been given in the footnote or incorporated in the text itself.

The Government of Madras have to be thanked for financing the entire scheme of publication although there is a drive for economy in all the departments. My thanks are due to the members of the Expert Committee who spared no pains in selecting the manuscripts for publication. I have also to thank the various editors, who are experts in their own field, for readily consenting to edit the manuscripts and see them through the press. The various Presses that have co-operated in printing the manuscripts in the best manner possible also deserve my thanks for the patience exhibited by them in carrying out the corrections made in the proofs.

Madras,
15—1—1955

T. CHANDRASEKHARAN,
General Editor,
Madras Government Oriental Series.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

மகாபரத சூடாமணி

என்னும்

பாவ ராக தாள சிங்காராதி அபிநயதர்ப்பண விலாசம்

நான்காம் அத்தியாயம்

சங்கீதாதி ராக மேள லட்சணம்

பதிப்பாசிரியர்கள் :

ஸங்கீத கலாநிதி
முடிகொண்டான் வெங்கடராம ஐயர்
&
ரா. விசுவநாதையர்

[ரூ. 5—0—0]

மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

1955

உ

திருச்சிற்றம்பலம்

முகவுரை

பண்ணின் இசையாகி நின்ருய் போற்றி
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்துஞ் சொல்லானுய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனுந்தீ யானுய் போற்றி
மேலவர்க்கும் மேலாய் நின்ருய் போற்றி
கண்ணின் மணியாகி நின்ருய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

திருச்சிற்றம்பலம்

—திருநாவுக்கரசு

ஸ்ரீ ஐயரவர்கள் அரிதில் முயன்று தேடி வைத்த அருநிதிகளுள் **மகாபரத சூடாமணி** என்னும் பாவ ராக தாள சிங்காராதி அபிநய தர்ப்பண **விலாசம்** என்ற பெயருள்ள நூலும் ஒன்ருகும். இது, (1) நாட்டியோபயோக அவயவ பேத விநியோக லட்சணம், (2) முகூர்த்தாதி எழுவகைத் தோற்ற அபிநய லட்சணம், (3) சபாநாயகாதி சர்வ வாத்திய பாத்திர லட்சணம், (4) சங்கீதாதி ராக மேள லட்சணம், (5) தாளாதி மாத்திர கணித லட்சணம் என்ற ஐந்து அதிகாரங்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. இவற்றுள் ஐந்தாவது அதிகாரம் கிடைக்கவில்லை. எஞ்சிய நான்கு அதிகாரங்களிற் காணப்படும் செய்யுட்களின் தொகை ஏறக்குறைய 1288 ஆகும்.

இந்நூலின் நான்காவது அதிகாரமான சங்கீதாதி ராக மேள லட்சணம் என்ற பகுதி (1) சங்கீதம்—பொது, (2) புருஷராகங்கள் முதலியன, (3) மேளராக லட்சணம் என்ற பொருள்களை தம்முட் கொண்ட மூன்று பிரகரணங்களில் 243 செய்யுட்களைக் கொண்டுள்ளது. இதனையே இப்பொழுது அச்சிட்டுப் பிரசுரிக்கின்ருேம்.

கர்னுடக சங்கீதம் மிகப் பழங்காலந்தொட்டே தமிழகத்தில் வளர்ந்து வரும் செய்தி யாவரும் அறிந்ததே. வடமொழி, தெலுங்கு, தமிழ் ஆகிய மும்மொழிகளிலும் இக்கலைக்குரிய நூல்கள் ஆன்ருேரால் எழுதிக் கையாளப்பெற்று வருகின்றன என்பதையும் யாவரும் அறிவர். ஆனுல், இந்நூல் தான் எழுந்தகாலத்தில் கிடைக்கக்கூடிய பல நூல்களையும் ஆராய்ந்து தன் காலத்தில் கலை

வாணர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மைகளைத் தெரிவிக்க எழுந்ததாகக் காண்கிறது. இதன் முதல் இரண்டு பிரகரணங்களும் ஸங்கீதத்தைப் பற்றி எழுந்த பல்வேறு பொது உண்மைகளைப் பல நூல்களினின்று திரட்டி ஒருங்கே அமைத்தனவாகக் காண்பதால், அவற்றைப் படிப்பவர்கள் பல ஸங்கீத நூல்களிற் காணப்படும் ஸங்கீத லட்சணங்களை ஒருங்கே காண்பதாக உணர்வார்கள். உதாரணமாக, முதற்பிரகரணம் சிறப்பாக வடமொழியிலுள்ள ஸங்கீத ரத்நாகரத்தின் மொழிபெயர்ப்பாகவே பெரும்பாலும் அமைந்திருப்பினும் அப்பெரு நூலில் காணப்பெறாத பல விஷயங்கள் இதனுள் காணப்படுகின்றன. இரண்டாவது பிரகரணத்தின் தன்மையும் பெரும்பாலும் அத்தகையதே. மேளராக லக்ஷணங்களைப் பற்றிக் கூறும் மூன்றாவது பிரகரணம் காலந்தோறும் வளர்ந்துகொண்டு வரும் ஸங்கீதக் கலையின் ஒரு கண்ணாடிபோல் அமைந்திருக்கிறது. அபூர்வ இராகலக்ஷணங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்வார்க்கு இப்பகுதி பயன்படும் என்று கூறுவது மிகையாகாது.

பண்டைப் பெருநூல்கள் இசையையும் நாடகத்தையும் ஒருங்கே கூறிச் செல்வதுபோல மகாபரத சூடாமணி என்னும இந்நூல் அமைந்திருக்கிறது. பரதத்தை மூலமாகவும் இசையை அதன் அங்கமாகவும் கொண்டு இந்நூல் செல்வது இதன் அமைப்பால் தெரியவரும். எனினும், சுருங்கிய அளவில், கர்ணாடக ஸங்கீதத்தைப் பற்றிய விஷயங்களையெல்லாம பெற்றிருப்பது இதன் சிறப்பாகும்.

இந்நூலாசிரியரின் பெயர் முதலியன தெரியவில்லை. ஆனால், நூலின் தொடக்கத்தில் அமைந்துள்ள கடவுள் வாழ்த்துப் பாடல்கள் முதலியவற்றால், இவர் பாண்டிநாட்டைச் சார்ந்தவராயிருக்கலாமென்றும், இராகலட்சணங்கள் கூறும் முறைகளினின்று அவருடைய காலம் ஏறக்குறைய இன்றைக்கு 200 ஆண்டுகளுக்குமுன்பாக இருக்கலாமென்றும் ஊகிக்கக் கூடியதாகவிருக்கிறது. இந்நூலின் 104 ஆம் செய்யுளில் 'உமைக்கு ஈசனுரைத்த வாறே பண்டு நாரதன் சார்ங்க தேவனுக்குச், சொலுமிந்தப் படியறிந்த சோமநாதன் தொல்லுலகோர்க் கறிவித்தான் றுலங்கத் தானே' என்றமையினால் நூல் வந்தவழியும் ஒருவாறு புலப்படுகின்றது.

சுவடி கிடைத்த வரலாற்றினையறிய, 'இவை இராமநாதபுர ஸமஸ்தான வித்துவான் சாரந்தா நாயக்கர் புத்தகம் பார்த்து எழுதப்பட்டது; ஸ்ரீமுக வருஷம் சித்திரை மாதம்; 2வது மேளகர்த்தா ஜன்யங்கள் சவுடாற்பட்டி கோபாலையர் புத்தகம் பார்த்து எழுதப்

பட்டது. 'ஈசுவர வருஷம் சித்திரை மாதம்' என்ற குறிப்புக்கள் பயன்படுகின்றன.

இந்நூலாசிரியர் பரதசாஸ்திரத்தில் சிறந்த தேர்ச்சியுடையவராகக் காணப்படுகிறார்; ஸங்கீதத்தில் சாஸ்திர நூல்களை நன்ருகப் பயின்று தம்மால் கூடியவரையில் சிறந்ததொரு நூலை இயற்ற வேண்டுமென்ற முயற்சியுடையவராகவும் காண்கின்றார். சிற்சில இடங்களில் அவர் மயங்கிக் கூறினவற்றையும் எழுதுவோரால் விளைந்திருக்கக் கூடிய வழுக்களையும் அடிக்குறிப்புக்களில் ஒருவாறு சுட்டியிருக்கிறோம்.

ஏடுகள்சிதைந்தும், சீர்கள் பிறழ்ந்தும், சொற்கள் கிராமியங்களாகப் பலவிடங்களில் அமைந்தும் இருந்தனவாகையால் மூலத்திற்குச் சிறிதும் வேறுபாடாகாமல் பெயர்த்தெழுதி அச்சிடுதலிலும், ஸங்கீ வித்யார்த்திகளுக்குப் பயன்படும்படியாய் மேற்கோள்கள், மாறுபாடுகள், உண்மை லட்சணங்கள் முதலியவற்றை அமைத்து அடிக்குறிப்புக்கள் எழுதுதலிலும், அச்சிடுங்காலத்து உதவிபுரிந்தும், இவ்வாறு இப்புத்தகம் உருவாவதற்குப் பூரண உதவியைச் செய்தளித்து, நூலுக்கு ஓர் ஆராய்ச்சி முன்னுரையையும் எழுதி உதவிய பெருமை **ஸ்ரீ ஸங்கீத கலாநிதி முடிகொண்டான் வெங்கடராமையர் அவர்களுக்கே உரியது.** இந்நூலின் பகுதிகளுக்கு மூலங்கள் யாவையாகலாம் என்று அவ்வப்பகுப்பு முகவுரைகளிலே அவர் காட்டியிருக்கின்றார்; இன்னும் அவருடைய ஆராய்ச்சியினால் கண்ட முடிவுகளையும் அங்கங்கே குறித்திருக்கிறார். இவ்வாறு இப்பதிப்புக்கு அன்புடன் உதவியருளியவரும் ஸங்கீதக் கலையில் தலைசிறந்து விளங்குபவரும், ஸ்ரீ ஐயரவர்களிடம் மிகுந்த மதிப்புடையவருமான அப்பெரியார்க்கு இந்நூல் நிலையத்தினுடைய நன்றி மிகப் பெரிதாகும்.

ஒரே ஒரு சுவடியே நிற்க, அதனிலும் கடைசி அத்தியாயமான தாளப்பகுதியும் காணமற்போக, இவ்வருந்தனத்தைத் தமிழகம் இழக்கலாகாதென்ற ஆர்வத்தினால், எங்கள் குறைவையும் கருதாமல் இதனைப் பிரசுரிக்கின்றோம். இதனை இன்னும் நன்முறைக்குக் கொணர, அறிஞர்கள் காட்டும் திருத்தங்களை அன்புடன் ஏற்று, அவற்றை அடுத்த பதிப்பில் பயன்படுத்தலாகும் என்பதையும் விஞ்ஞாபித்துக் கொள்கிறோம். இதன் முற்பகுதிகள் விரைவில் வெளிவர முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

இந்நூல் சென்னை அரசாங்கக் கீழ்த்திசை நூல்வரிசையில் வெளியாகிறது. இதன் செலவுக்கு அரசியலார் பேருதவி புரிந்துள்ள

ஷர். அவர்களுக்கும், இவ்வரிசை நூல்களின் பொதுப்பதிப்பாசிரியரான உயர்திருவாளர் T. சந்திரசேகரன், M.A., L.T., அவர்களுக்கும் இந்நிலையம் என்றும் கடமைப்பட்டுள்ளது.

வழக்கம்போல் இந் நூல்நிலையப் பிரசுரங்களுக்கு உடனிருந்து உதவி வருபவர்களான வியாகரண சிரோமணி ஸ்ரீ தி. இராமாநுஜ ஐயங்கார் அவர்களுக்கும் சிரஞ்சிவி வைத்தியநாதன் அவர்களுக்கும், இந்நூலை விரைவாகவும் அழகாகவும் அச்சிட்டுக்கொடுத்த இரத்தினம் (பிராஞ்சு) அச்சுக்கூடத்துக்கும் எம் நன்றி உரியன.

இந்நூல் நிலையத்தின பணிகளை உலகம் ஏற்று இதனை இன்னும் பயன்படச் செய்யவேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனின் திருவடிகளில் வணங்குகிறேன்.

நூல் நிலையம்,
14—1—55.

ரா. விசுவநாதன்,
கௌரவ அமைச்சர்.

ஆராய்ச்சி முன்னுரை

தமிழில் மிகப் பழங்காலம் முதல் இயல், இசை, நாடகம் என்ற முப்பிரிவுகளும் செழித்தோங்கி வந்துள்ளன. ஆனால் காலவடைவில் இசை, நாடகம் என்ற இரு பகுதிகளிலுமுள்ள தமிழ் நூல்கள் வழக்கொழிந்து மறைந்து விட்டமையால், இக்கலைகளின் வடமொழியில் செழித்திருந்த முறைகளே இங்கும் கையாளப்படலாயின. இந்நிலையில் பழையனவும் புதியனவுமான ஸம்ஸ்க்ருத நூல்கள் அவ்வப்படியேயும் மொழிபெயர்ப்பிலும் ஸம்ஸ்க்ருதத்திலும், ஸம்ஸ்கிருதலிபியையே முற்றிலும் தன்லிபியாகக் கொண்ட தெலுங்கிலும் அதிகச் சுலபமாக அப்படியே கையாளப்பட்டு வரலாயின. ஸம்ஸ்க்ருத ஒலிகள் தமிழில் வழங்காமையால், தமிழ்க் கலைஞர்கள் ஸம்ஸ்க்ருதத்திலிருந்தும் தெலுங்கிலிருந்தும் அந்தக் கலைகளைப்பற்றிய லக்ஷ்ய லக்ஷணங்களைத் தமிழிலேயே எழுதி வந்தார்கள். இவ்வாறு செய்ததில் பல தவறுகளும் நேர இடமுண்டாயிற்று. இவற்றைச் சமாளிப்பதற்குச் சில தமிழ் வித்வான்கள் தெலுங்குலிபியையே தாங்களும் கையாண்டு வந்தார்கள். இக்காரணங்களால் தமிழிலேயே விரிவான சங்கித நூல்கள் சென்ற சில நூற்றுண்டுகளாக எழுதப்படாமல் போய்விட்டன எனலாம். இக்குறையை இப்பொழுது வெளியாகும் **மகாபரத சூடாமணியின் நான்காம்அத்தியாயமான சங்கீதாதி ராக மேள லக்ஷணம்** என்ற இந்நூல் ஒருவாறு நீக்கிவிட்டது என்று கூறலாம்.

இப்பிரசுரத்திற்கு மூல காரணராயிருந்தவர், காலஞ்சென்ற மகாமகோபாத்யாய டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்களாவர். அப்பெரியார் தமிழிலக்கியவுலகிற்குச் செய்த சேவை யாவருமறிந்ததே. இந்நூலின் மூலம் ஸங்கிதத்திற்கும் அவர் சேவை செய்தவராகிறார். தமிழ்த் தெய்வம் என்று சொல்லக் கூடிய அவருடைய வாழ்நாளில் அவருடைய பெருமுயற்சியினால் அரியசுவடிகளைத் தேடிச்சேர்த்ததின் பயனாலன்றோ இப்பொழுது அவர் பெயர்கொண்ட நூல் நிலையத்தில் ஓர் புதையல் போல நமக்கு இந்நூல் கிடைத்துள்ளது? இதனை எடுத்துச் சீர்ப்படுத்தி அச்சிட்டு வெளிப்படுத்த பெரு முயற்சி எடுத்துக்கொண்ட அருமை, அதன் கௌரவ அமைச்சரான தமிழ்ப் பேராசிரியர் ரா. விசுவநாதையர் எம். ஏ., அவர்களைச் சேர்ந்ததே. ஸங்கித உலகம் என்றும் இவரிடம் நன்றி பாராட்டற்குரியதாகும்.

இந்நூலின் கைப்பிரதியின் கடைசியில், "ராமநாதபுரம் ஸமஸ்தானவித்வான் சாரங்கா நாயக்கர் புத்தகம் பார்த்து எழுதப்பட்டது;

ஸ்ரீமுக வருஷம் சித்திரை மாதம்", என்றும், "மேளகர்த்தா ஜன்யங்கள் சவுடாற்பட்டி கோபாலையர் புத்தகம் பார்த்து எழுதப்பட்டது; ஈசுவர வருஷம் சித்திரை மாதம்" என்றும், எழுதப்பட்டிருப்பதை நோக்கும்பொழுது, இன்றிருந்து சுமார் ஏறக்குறைய 80 வருடங்களுக்கு முன்பு இது பிரதி செய்யப்பட்டது என்பது தெரியவருகிறது. அதற்குமுன் வெகுகாலமாக இந்நூல் இருந்து வந்திருக்கிறதெனவும் ஒருவரிடமிருந்து ஒருவர் பிரதி செய்து வந்திருக்கிறார்கள் எனவும் நாம் அறியலாம். அச்சில்லாத காலத்தில், இவ்வாறு ஒருவரிடமிருந்து ஒருவர் நூல்களைப் பிரதிசெய்து கொள்வதே வழக்கமாயிருந்து வந்தது. பிரதி செய்து கொடுப்பதற்கெனக் கூலியாளர்களும் உண்டு.

இந்நூலில் 1வது பிரகரணம் என்பது ஸங்கித ரத்னாகரத்தையே பெரும்பாலும் தழுவி, அதிலுள்ள சுலோகங்களில் பலவற்றையே தமிழ்ச் செய்யுட்களாக இயற்றி, பிறகு மூன்றாம் பிரகரணம் வரும் பொழுது, சுமார் 300 அல்லது 350 வருஷங்களாக நடைமுறையில் இருந்துவரும் 72 மேளங்கள் ஜன்யங்கள் என்பதைப் பற்றியே சொல்லுகிறபடியால், இந்நூல் 18-வது நூற்றாண்டின் இறுதியிலோ, அல்லது விசேஷமாய் 19வது நூற்றாண்டின் ஆரம்பத்திலேயோ ஏற்பட்டிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. சாரங்தா நாயக்கர் என்ற பெயர் ஸங்கித உலகில் கேள்வியுண்டு. இவர் இராமநாதபுரம் ஸமஸ்தானத்தில் இருந்தவர். இவரிடமிருந்தும், சவுடாற்பட்டி கோபாலையரிடமிருந்தும் எழுதப்பட்டது என்பதைப் பார்க்கும்பொழுது, இந்நூலாசிரியர் இராமநாதபுரம், மதுரை இவ்விடங்களிலிருந்தவராக வேண்டுமென்றும், இராமநாதபுரம் ஸமஸ்தானத்திலேயே வித்வானாக இருந்திருக்கலாமோவென்றும் ஊகிக்க இடமிருக்கிறது.

பரதமுனிவரால் இயற்றப்பட்ட நாட்டிய சாஸ்திரத்தில் பெரும்பாலும் நிருத்தம், நிருத்தியம், நாட்டியம் இவைகளை ஒருவாறு விரிவாகவும், ஸங்கீதம், மேற் சொன்னவைகளுக்கு அனுஸரிப்பாகக் கருதப்பட்டு அவ்வளவு அதிக விரிவில்லாமலும் சொல்லப்பட்டிருக்கிறது. இதைப்போன்றே இந்நூலாசிரியரும் பரதசாஸ்திரத்தைப்பற்றி வெகு விரிவாக முதல் மூன்று அத்தியாயங்களில் சொல்லியிருப்பதால் இதற்கு **மகா பரத சூடாமணி** என்று பெயரிட்டார் எனக் கருதவேண்டும். பரத சாஸ்திரத்தின் பாகங்கள் கூடிய சீக்கிரம் அச்சாகி வெளிவருமெனத் தெரிகிறது. மகாபரத சூடாமணியில் ஆரம்பத்தில் **தாள பிரகரணம்** என்று ஒன்றிருப்பதாக இந்நூலாசிரியர் சொல்லியிருப்ப

தோடு, இந்நூலில் 99வது பாட்டில் தாளப்ரஸ்தாரவிதம் போல என்று குறிப்பிட்டிருப்பதால், தாள ப்ரகரணமும் இதன் பகுதிகளில் ஒன்ருக இருந்திருக்கிறதென்பது நன்ருய்த் தெரிகிறது. அது கிடைக்காதது வருந்தத்தக்கது.

இந்நூலின் முதல் பிரகரணமான ஸங்கீதம் என்பதில் ஆரம் பத்திலேயே ஸங்கீத ரத்னுகரம் என்று தலைப்பிலேயே கொடுக்கப்பட்டிருப்பதாலும், விஷயங்களும் பெரும்பாலும் அந்நூலைத் தழுவியே இருப்பதாலும், இப்பகுதிக்கு மூல நூல் விசேஷமாய் ஸங்கீதரத்னுகரமேயாகும். 43வது பாட்டில், சார்ங்க தேவ முனிமதம் என்றும், 46, 55, 98 இப்பாட்டுக்களில், சோமனுதீயமதம், சோமனுதீயம், சோமனுர்யன் என்றும் காணப்படுவதுடன், 40, 66, பாட்டுக்களில் அகஸ்தியர் மதம் என்றும் காணப்படுகிறது. சில இடங்களில் நாரதர் சொல்லியபடி என்றிருப்பதானது, ரத்னுகரத்தின் உரையில் கல்லிநாதர், நாரதரைக் குறிப்பிட்டிருப்பதால் அதை இங்கு இந்நூலில் அப்படியே சொல்லியிருக்கிறது என்று கொள்ளலாம். சார்ங்கதேவர் நூலைத்தவிர, சோமனுர்யன், சோமனுதன், அகஸ்தியர் முதலியவர்களுடைய நூல்களையும் இவ்வாசிரியர் தமக்கு ஆதாரமாக எடுத்துக் கொண்டிருப்பதாக அறியவேண்டியிருக்கிறது. சார்ங்க தேவர் தமது நூலில் ஸோமேச்வரர் என்பவரை ஒரு நூலாசிரியராகக் குறிப்பிடுகிருர். 1609 கி. பி. யில் ராகவிபோதம் என்ற ஸங்கீத நூலைச் செய்தவர் ஒரு ஸோமனுதன் என்பவர். 1174—1177 கி. பி. யில் **ஸங்கீதரத்னுவளி** என்ற நூலைச் செய்தவர் ஒரு ஸோமேச்வரர். **மான ஸோல்லாஸம்** என்ற நூலைச் செய்தவர் சாளுக்கிய அரசர்களில் ஒருவரான ஸோமேசுவரர் III (1131 கி. பி.) ஆக 3, 4 ஸோமேசுவரர்களில் எந்த ஸோமேசுவரரை இந்நூலாசிரியர் குறிப்பிடுகிருர் என்பது ஆராய வேண்டும். இந்நூலில் 104வது பாட்டில், 'நாரதர் சார்ங்க தேவ முனிக்குச் சொல்ல, சார்ங்க தேவர் ஸோமநாத மஹா ராஜனுக்குச் சொல்ல, இந்த மஹாராஜா உலகோர் அறியும்படி சொன்னுர்' என்றிருக்கிறது. சார்ங்கதேவர் காலம் 13வது நூற்ருண்டு. ஆகையினுல் 1177 கி. பி. அல்லது 1131 கி. பி. யில் இருந்த ஸோமேசுவரரைத்தான் அவர் குறிப்பிட்டிருக்க வேண்டும். ராகவிபோதம் செய்த ஸோமநாதரைப் பின்பற்றி இந்நூல் செய்யப்படவில்லை என்று இந்நூலைஆராயும்போது நனகு விளங்கும். ஆகையினுல் கடைசியில் சொன்ன ஸோமனுர்யன் என்பவரைத்தான் நுலாசிரியர் குறிப்பிடுகிருர் என்பது நன்கு விளங்குகிறது. இந்த ஸோமனுர்யன் என்பவர் சுமார் 300 வருஷங்களுக்கு உட்பட்டு இருந்திருப்பதாக ஊகிக்கலாம்.

இந்த ஸோமனுர்யர் இயற்றிய நூல் நாட்டிய சூடாமணி என்பதாகும். இதன் பிரதி சென்னைக் கீழ்த்திசைக்கையெழுத்துப் புத்தகசாலையில் முழுமையும் இருக்கிறதென்று தெரிகிறது. இதில் ஸங்கீதத்தின் மற்ற அம்சங்களோடு நாட்டியத்தையும் விரிவாகச் சொல்லப்பட்டிருப்பதாக அறிகிறோம். ஆகையினால் இந்நூலாசிரியர் நாட்டிய சூடாமணியையும் தமக்கு மூல நூலாகக் கொண்டிருக்கவேண்டும். அகஸ்தியர் மதம் என்று சொல்லுமிடங்களில், சிலப்பதிகாரம், பிங்கள நிகண்டு இவைகளையும் கலந்து எழுதியிருப்பதாகத் தெரிகிறது. சிலப்பதிகாரத்தில் ஸங்கீத சாஸ்திரத்தைப் பற்றி சொல்லியிருப்பதும். ரத்னகரத்தில் சொல்லியிருப்பதும் சாஸ்திரம் ஒன்றுகவே இருக்கிறதெனலாம். பிற்காலத்தில் ஸங்கீதத்தில் ஸம்ஸ்க்ருத பாஷையிலுள்ள பெயர்களே ஆதிக்கத்தை அடைந்து விட்டதினால் சிலப்பதிகாரத்தில் உள்ள ஸங்கீத பரிபாஷைகள் காலக்ரமத்தில் மறைந்திருக்கக்கூடும். இன்னும் வடஇந்திய ஸங்கித சாஸ்திரத்தில் உள்ள ஸ்திரீராகம், புருஷராகம், முதலியனவும், நவரஸங்களுக்குள்ள ராகங்களும், வெண்பா, தாழிசை, கலிப்பா, கலித்துறை, உலா, விருத்தம், தோடயம், பரணி, முதலியவைகளுக்கு உரிய ராகங்களும், உதயராகம், பரான்னராகம், மத்யான்னம், அபரான்னம், ஸாயான்னம், முன்ராத்திரி, அர்த்தஜாமம் முதலிய பொழுதுகளுக்குரிய ராகங்களும், பிறவும் இந்நூலில் காணப்படுவதால், தொன்றுதொட்டு வெகுகாலமாக நம் தமிழ் நாட்டில் இவை வழக்கத்திலிருந்துவருகின்றனவென்று அறியவேண்டியிருக்கிறது.

இந்நூலின் மூன்ருவது பிரகரணம் மேளகர்த்தாக்கள், ஜன்யராகங்கள் இவைகளை விரிவாகக் கூறுகின்றது. முதல் பிரகரணத்தில் ப்ராசினத்தில் உள்ள ஸங்கீத சாஸ்திர லக்ஷணங்களைச் சொல்லி விட்டு, மூன்ரும் பிரகரணத்தில், சுமார் 300, 400 வருஷங்களாக இன்று வரையிலும் உள்ள ஸங்கீத சாஸ்திரத்தையே இந்நூல் கூறுகிறது. அதிலும், தனக்கு ஆதாரமாக, ஸங்கீத சாஸ்திர ஸங்க்ஷேபம் என்கிற ஸங்க்ரஹ சூடாமணி என்ற நூலையும், ஸங்கீத ஸார ஸங்க்ரஹம், ராகலக்ஷணம் முதலிய நூல்களையும் ஆதாரமாகக் கொண்டே இப்பிரகரணம் இயற்றப்பட்டிருக்கிறது. முதல் பிரகரணத்தில் ஸங்கீத ரத்னகர காலம் வரையில் உள்ள ஸங்கீத சாஸ்திரத்தின் லக்ஷணங்களைச்சொல்லிவிட்டு, பிறகு உடனே மாறுதலாக, இப்போதைக்கு நடைமுறையில் இருக்கும் ஸங்கீதத்தின் லக்ஷணத்தை இந்நூல் சொல்லுகிறது என்னலாம். ஸங்க்ரஹ சூடாமணி என்பது சென்னை அடையாறு நூல் நிலையத்தினின்று பிரசுரமாகியிருக்கிறது,

இது ஸம்ஸ்க்ருதத்தில் உள்ளது. ஸங்கீத ஸார ஸங்க்ரஹம் என்ற நூல் பத்ய காவ்யமாகத் தெலுங்கு லிபியில் உள்ளது; இதனைச் சென்னை ஸங்கீத வித்வத் ஸபையார் பிரசுரித்திருக்கிறார்கள். ராக லக்ஷணம் என்பது, ஸங்கீத சாஸ்திர ஸங்க்ஷேபத்தில் ஒரு பகுதியேயாகும். இப்புத்தகத்தின் கைப்பிரதி ஒன்று, பம்பாய் பாலசந்த்ர ஸுக்துங்கர் எம். ஏ., என்பவருக்குத் தஞ்சாவூரில் கிடைத்து, அதனை அவர் பூனா ஆர்ய பூஷண அச்சுக்கடத்தில் 1914ம் வருஷத்தில் பிரசுரித்திருக்கிறார்.

ஸங்க்ரஹ சூடாமணியை இயற்றியவர் கோவிந்தர் என்பதாகத் தெரிகிறது. ஸங்கீத ஸாரஸங்க்ரஹத்தின் ஆசிரியர் யார் என்று ஆராய்ச்சியாளர்கள் இன்னும் சரியானபடி நிதானிக்கவில்லை. ராக லக்ஷணம் என்பது ஸங்க்ரஹ சூடாமணியின் ஒரு பாகமென்று மேலே சொல்லப்பட்டது. ஆக இம்மூன்றும் அவைகளிலுள்ள விஷயங்களின் ஒற்றுமையைப் பார்க்கும்பொழுது, ஒன்றே எனலாம். ஸங்கீத ஸார ஸங்க்ரஹம், ஸங்க்ரஹ சூடாமணி இவ்விரண்டில் எது முந்தியது என்று நிச்சயமாகக் கூற இயலவில்லை. ஸாரஸங்க்ரஹம் முதலில் ஏற்பட்டு, அதையே விரிவாகவும் இன்னும் தெளிவாகவும் முறையாகவும் பின் எழுதப்பட்ட நூலே சூடாமணி என்றும் நினைக்கலாம். எப்படியிருந்தாலும், இந்நூலாசிரியர் முற்றிலும் ஸங்க்ரஹ சூடாமணியைப் பின்பற்றியே, அதன் மொழி பெயர்ப்பாகவே, இம்மூன்றும் பிரகரணத்தை இயற்றியுள்ளார்என்று நிச்சயமாய்க் கருதலாம்என்றுதோன்றுகிறது.

சுமார் 350 வருடங்களாக, ஸ்ரீ வேங்கடமகி காலத்திலிருந்து, ஸ்ரீவேங்கடமகியால் ஏற்படுத்தப்பட்டதாகச் சொல்லப்படுகிற 72 மேளங்களின் பெயர்களையும் வேறு பெயர்களுடன் இந்நூலின் மூன்றும் பிரகரணத்தின் முதல் இரண்டு விருத்தங்களும் முறைப்படுத்திக் கூறுகின்றன. பிறகு ஜன்யராகங்களைக் கூறுமிடத்து, ஸ்ரீவேங்கடமகியைப் பின்பற்றாமல், ஸங்க்ரஹ சூடாமணியை அநுஸரித்தே இந்நூல் செல்கிறது. ஸங்க்ரஹ சூடாமணி என்னும் நூல் வேங்கடமகியினால் இடப்பட்ட 72 மேளப் பெயர்களையும் முதலில் சொல்லி, பிறகு 72 வேறு பெயர்களைக்கூறி எல்லா மேளங்களும் ஸம்பூர்ணமென்றும் சொல்லுவதால், இந்த ஸங்க்ரஹ சூடாமணி ஸ்ரீவேங்கடமகியின் சதுர்தண்டிப்ரகாசிகை என்ற நூலுக்குப்பின் ஏற்பட்டதே என்பது நிச்சயம். இன்னும் சில காரணங்களாலும் ஸங்க்ரஹ சூடாமணி என்ற நூல் இன்றைக்குச் சுமார் 200 வருஷங்களுக்கு முன்பே ஏற்பட்டிருக்கக்கூடும் என்று எண்ணலாம். இதையனுசரித்தே இந்நூலும் ஏற்பட்டு சுமார் 150ல் இருந்து 200 வருஷங்களுக்குள் இருக்கலா

மென நினைக்க வேண்டியிருக்கிறது. இதை இயற்றியவர் யார் என்பதும், அவரைப்பற்றிய எத்தகைய விவரங்களும் நூல் மூலம் விளங்கவில்லை.

இந்த ஸங்க்ரஹ சூடாமணி என்னும் நூல் முழுமையும் ஓலைச் சுவடிகளில் தெலுங்கு லிபியில் எழுதப்பட்டு இருந்ததை நான் பார்த்திருக்கிறேன். அதைப்போலவே ஸ்ரீ தியாகையர் அவர்களின் சிஷ்யரான மானம்பூச்சாவடி (தஞ்சாவூர்க்கருகில்) ஸ்ரீவேங்கடசுப்பையரிடம் ஒரு பிரதி இருந்ததாகவும், அதைப்பார்த்து அவர் சிஷ்யரான பட்டணம் ஸ்ரீ சுப்பிரமணிய ஐயர் ஒரு பிரதி தயார்செய்து கொண்டதாகவும், ஸ்ரீமஹாவைத்தியநாதையர் அவர்களிடமும் ஒருபிரதியிருந்ததாகவும், இவருடைய சிஷ்யர்களும், 1000 ராகங்களின் பெயர்களையும் அவைகளுக்குள்ள க்ரமங்களையும் ஸ்ரீ மகாவைத்தியநாதையரிடத்திலிருந்து பிரதி செய்து கொண்டதாகவும் கேள்வியுண்டு. சென்னை, சிங்கராச்சாரியாரின் புத்தகத் தொகுப்புக்களில் காணும் சுமார் 360 கீதங்களுக்குமேல் உள்ளதும், அவருடைய புத்தகங்களில் காணும் மற்ற சில விஷயங்களும் பெரும்பாலும் இந்த **ஸங்கீத சாஸ்திர ஸங்க்ஷேபம்** என்கிற **ஸங்க்ரஹ சூடாமணியை** ஆதாரமாகக் கொண்டவையேயாகும். இம் மாதிரி மேற்சொன்ன நூலின் பிரதிகள், முன் அநேக வித்வான்களிடம் இருந்திருப்பனவாகத் தெரிகிறது. மேலும் ஸ்ரீ தியாகையர் அவர்கள்செய்திருக்கும் க்ருதிகளும், அவைகளில் அபூர்வ, அல்ப, ராகங்களில்செய்திருக்கும் க்ருதிகளின் லக்ஷணங்களும் ஸங்க்ரஹ சூடாமணியில் உள்ள ராக லக்ஷணங்களுக்கு முற்றிலும் ஒத்து வருகின்றன. ஸ்ரீவேங்கடமகியின் ஸம்பிரதாயத்தை அனுஸரித்து ஸ்ரீமுத்துஸ்வாமி தீக்ஷிதர் செய்திருக்கும் கீர்த்தனங்களின் ராகங்களில் சிலவற்றிற்கும், அந்த ராகங்களில் ஸ்ரீ தியாகையர்அவர்கள் செய்திருக்கும் க்ருதிகளுக்கும் ராகலக்ஷணங்கள் சிறிது மாறுபாடாகவே இருப்பதைப் பார்க்கலாம். இருவருக்கும் ராக லக்ஷணங்கள் ஒன்றே என்று சொல்லுவாரும் உளர். இது வாதத்திற்கு இடமுள்ள விஷயம். ஆகையினல் இது பற்றி இங்கு அதிகம் விவரிக்கத் தேவையில்லை. ஆனல், ஸ்ரீமுத்துஸ்வாமி தீக்ஷிதர் வேங்கடமகியின் ஸம்பிரதாயத்தை அனுஷ்டித்தார் என்பதும், ஸ்ரீ தியாகையர் அவர்கள் இந்த ஸங்கீத சாஸ்திர ஸங்க்ஷேபத்தையோ அல்லது இது போன்ற மற்றொரு நூலையோ அனுஷ்டித்துக் க்ருதிகள் செய்திருக்கிறார் என்பதும் எனது சொந்தக்கொள்கை. ஆனல் மிகுதியாக பிரசாரத்திலும் பழக்கத்திலும் உள்ள பிரஸித்த ராகங்களில் இருவருக்கும் வித்தியாசம் ஒன்றும் இருந்திருப்பதாகத் தெரியவில்லை. **ஸ்வரார்ணவம்** என்ற நூலை, நா

தர்மசமாக யாரோ ஒரு ஸந்யாஸி ஸ்ரீ தியாகையர் அவர்களுக்கு அருளிப் போனதாகவும் அதன் லக்ஷணத்தையனுஸரித்துத் தியாகையர் க்ருதிகள் செய்ததாகவும் சொல்லப்படுகிறது. இந்த **ஸ்வரார்ணவம்** என்ற நூலைப்பற்றி டாக்டர் வெ. ராகவன் அவர்கள் சென்னை ஸங்கீத வித்வத் ஸபையின் ஜர்னல் வால்யூம் III நம்பர் 3, 4 பக். 101-102ல் விவஹரித்திருப்பதைக் காண்க. இந்த **ஸ்வரார்ணவம்** என்ற க்ரந்தம் இதுவரை கிடைத்ததாகத் தெரியவில்லை. இனியும் கிடைக்காதவரையில், அப்பொழுது, ஸ்ரீ தியாகையர் அவர்களுடைய சிடரான மானம் பூச்சாவடி வேங்கடசுப்பையரிடமிருந்ததாகச் சொல்லப்படுகிற இந்த **ஸங்கீத சாஸ்திர ஸங்க்ஷேபம்** என்ற **ஸங்க்ரஹ சூடாமணி** என்ற க்ரந்தத்தைப் போன்றதான ஒன்றை யாரோ ஒரு பெரியவர் ஸ்ரீ தியாகையர் அவர்களிடம் கொடுத்துப்போயிருக்கலாமென்று சொல்ல நான் துணிகிறேன். ஏனென்றால் ஸ்ரீ தியாகையரவர்கள் செய்திருக்கும் க்ருதிகளில் அபூர்வ அப்ரஸித்த ராகங்களுக்கெல்லாம் லக்ஷணமும் பெயர்களும் எனக்குத் தெரிந்தமட்டில் **ஸங்க்ரஹ சூடாமணியில்தான்** கிடைக்கின்றன. இப்பொழுது பிரசுரமாகும் இத்தமிழ் நூலில் ராகலக்ஷணங்களெல்லாம் **ஸங்க்ரஹ சூடாமணியில்** உள்ளபடியே, அதே முறையில் அநேகமாக அதே வரிசை க்ரமங்களுடனேயே சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகையினால் இந் நூல் இப்போது நடைமுறையில்உள்ள நமது கர்னாடக ஸங்கீதத்திற்கு மிக உபயோகமாக இருக்கக்கூடும்.

இன்றளவும் வாக்கேயகாரர்கள் பிரஸித்த ராகங்களுக்கெல்லாம் லக்ஷணங்களை அநேகமாய் ஒரே மாதிரியாகத்தான் அனுஸரித்திருக்கிறார்கள். சார்ங்க தேவரால் செய்யப்பட்ட ஸங்கீத ரத்னாகரத்தில் சுமார் 264 ராகங்களுக்கு லக்ஷணம் சொல்லப்பட்டிருக்கிறது. அவை எப்படி பாடப்பட்டுவந்தன வென்பதும், அவைகளின் லக்ஷணமும், இப்பொழுதுள்ள பாடும்முறையும் லக்ஷணமும் ஒன்றுதான் என்று சொல்வதற்கில்லாமல் இருக்கின்றன. ராகங்களின் பெயர்கள் முன்னுள்ளபடியே இப்பொழுதும் வழங்குகின்றன. ஆனால் பிறகு க்ரந்தகர்த்தாக்கள், எல்லாராகங்களையும் கையாளாமல், சுமார் 50முதல் 100க்குட்பட்ட ராகங்களுக்குத்தான் லக்ஷணம் எழுதியிருப்பதாகச் சொல்லலாம். அவை பிரஸித்த ராகங்களே. இந்த ஸங்க்ரஹ சூடாமணியில் சுமார் 360க்கு மேற்பட்ட ராகங்களுக்கு லக்ஷணங்கள் காணப்படுகின்றன. (ஸங்கீத உலகில் வேங்கடமகிக்குக் கொடுத்திருக்கும் மதிப்பை, ஸங்க்ரஹ சூடாமணியின் கர்த்தாவுக்குச் சிலர் கொடுக்காமலிருக்கலாம் அது வேறு விஷயம்.) மத்தியில் சில நூற்றாண்டுகளாக க்ரந்தகர்த்தாக்கள், (ராகங்கள் பல நூறுகள் வழக்

கத்தில் இருந்திருந்தாலும்,) பிரஸித்த ராகங்களின் லக்ஷணத்தையே சொல்லியிருக்கிறார்கள். ரத்னாகர காலத்திலேயே 264 ராகங்கள் இருந்தன ; அதன் பிறகு அவைகள் விருத்தியாகி, 300, பிறகு 400, பிறகு 1000, அதன்பிறகு 1500 ராகங்கள் வரையில் சென்ற நூற்றாண்டுவரைக்குள்ளேயே ஏற்பட்டு, சிலரிடம் இவ்வளவு ராகங்களும் க்ரமங்களுடன் கைப்பிரதிகளிலும், சில தமிழ் புத்தகங் களில் அச்சிலும், காணப்படுகின்றன. ஒருவருடைய கைப்பிரதியைப் பார்த்து மற்றவர் எழுதும்பொழுதோ, அல்லது ஒருவர் சொல்லி ஒரு வர் எழுதும்பொழுதோ, கைப்பிழைகள் ஏற்படுவதோடு, விசேஷ மாய்க் கூலிக்கு எழுதுகிறவர்களைக் கொண்டு எழுதும்பொழுதும், அவர்கள் ஸங்கித சாஸ்திரம் தெரியாதவர்களாயும் இருந்து எழுதும பொழுதும் கைப்பிழையும், விஷயஞானம் இல்லாததினால் ஏற்படக் கூடிய பிழையும் ஏற்படக்கூடியது ஸர்வஸகஜம். உதாரணமாக, ஸகரிகமப என்பதைப் பிரதி செய்யும்பொழுது தவறி ஸரிகமப என்று எழுதி விட்டாலும், பதநிதஸ என்பதை பதநிஸ அல்லது பதஸ என்றோ தவறிப் பிரதி செய்துவிட்டாலும், ஸங்கித சாஸ்திரத் தில் ஒரு ஸ்வரம் வித்யாஸம் வந்து விட்டாலும், பெரிய பிழையாகி விடும். இவ்விதமாக ஸங்க்ரஹ சூடாமணி, ஸங்கித ஸாரஸங்க்ரஹம், ராகலக்ஷணம், மற்றும் இவை போன்ற இவ்விலக்ஷணங்களைக் கொண்ட பிற நூல்களிலும் சில ராகங்களுக்கு க்ரமங்கள் வித்யாஸ மாய்க் காணப்பட ஏதுவாகி விட்டன. சில ராகங்களுக்கு ஜனக ராகங்கள் கூட மாறுதலாக காணப்படுகின்றன. இவற்றின் காரணங் கள், ஸங்கிதம் தெரியாதவர்களைக் கொண்டு பிரதி செய்யச் சொல்லு வதிலும், தேசாந்தரவித்யாஸம், மதாந்தரம், பக்ஷாந்தரம், பாடாந் தரம், இவைகளோடு ஏடுகள் மாறிப் புரண்டிருத்தல் முதலியனவும் ஆகும். ஆகையினால் இந்நூலிலும் மேற்படி காரணங்களால் ஏற் பட்ட பிழைகளும் உள்ளன. அவைகளைச் சில இடங்களில் திருத்தியும், திருத்தியவற்றைக் கீழே குறிப்பில் காட்டியும், இன்னும் மற்ற நூல்களில் காணும் ராகக்ரமங்களையும் அங்கங்கே அடியில் குறிப்பில் எழுதியும், முடிவாக எது சரியானது என்பதைக் குறிப்புக் களில் எழுதியும் அச்சிட்டிருக்கிறோம். ஜனக ராகத்தைத் தவறுத லாகவும், ஒரே ராகத்தை இரு மேளங்களில் ஜன்யமாகவும் காணப் படும் இடங்களிலும், ச்ருதி, யுக்தி, வாதங்களைக் கொண்டு ஸமா தானங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. மேல் சொன்ன இதன் மூல மான மூன்று நூல்களிலும் உள்ள ராகங்களில் மிகச்சில இந்நூலில் சொல்லாமலிருந்தாலும், இந்நூலில் உள்ள சில அபூர்வராகங்கள்,

சோதித்த வரையில் எந்த நூலிலும் கிடைக்காமலும் இருக்கின்றன. கானடா, மயூரத்வனி, கேதாரம் முதலிய ராகங்களின் லக்ஷணங்களும் அவைகளுக்கு எழுதப்பட்டிருக்கும் குறிப்புகளும் கவனிக்க வேண்டிய விஷயங்களாகும். இப்படிப்பலவுள.

முதல் பிரகரணத்தில் சுரங்களின் கணிதம் என்பதில் ஷட்ஜம் 1—ஏகாம்பரம், ஷட்ஜம் 2—சுத்தரிஷபம். ஷட்ஜம் 4 கொண்டது சதுச்ருதி ரிஷபம், இதுவே சுத்தகாந்தாரம், இவ்விதம் ஷட்ஜம் 1, 2 என்பதைச் சுருதியாக வைத்துக்கொள்ளும்பொழுதும், ஒரு ஸ்தாயியில் உள்ள 22 சுருதிகளை ஒவ்வொரு ஸ்வரத்திற்கும் இரண்டிரண்டு சுருதிகளாய் ஸமமாய்ப பிரித்துக் கொடுத்திருப்பதோடு, 12 ஸ்வரஸ்தானங்களிலேயே 16 ஸ்வரங்களும் ஒலிப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இது சாஸ்திர விரோதமாகும். இவ்வாசிரியர் காலத்திலும், அதற்கு பல வருஷங்கள் முன்பும் லக்ஷணகர்த்தாக்கள், தங்களுக்கே புரிந்தும் புரியாமலும். அல்லது அவர்கள் புரிந்து கொண்டு எழுதியிருந்தாலும், பிறருக்குப் புரியும்படியாய் எழுதாமலும் நேர்ந்த குறையினால், இந்த விஷயமானது சரியாக விளங்காமல் நாளடைவில் மறைந்து வருவதுடன், தப்பையே சரியானது என்றும் ஸாதனை செய்வதாகவிருக்கிறது. மேலும் இந்நூலில் ஒவ்வொரு ஸ்வரத்திற்கும் இரண்டிரண்டு சுருதி விழுக்காடு பங்கிட்டிருப்பது புதுமையாகும். இஃது ஒரு குருட்டுக் கணக்காகும். ஸங்கித ரத்னகரத்திலும், அதற்கு முன் பின் க்ரந்தங்களிலும் ரிஷபத்திற்கு 3, காந்தாரத்திற்கு 2, மாவுக்கு 4, பாவுக்கு 4, தாவுக்கு 3, நீயிக்கு 2, ஸாவுக்கு 4, இப்படிப் பங்கிட்டு மொத்தம் 22 ச்ருதிகளாகக் கணக்கிட்டு இதை ஷட்ஜக்ராமமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இது தவிர முன் சில க்ரந்தங்களில் ச்ருதி 24 என்றும் சொல்லப்பட்டு பிறகு அதே புத்தகங்கள் சிலவற்றில் பரதர், சார்ங்கதேவர் இவர்கள் மதத்தையனுஸரித்து 22 ச்ருதிகளென்றும் சொல்லப்படுகிறது. ஸங்கித மகரந்தத்தில் இம்மாதிரி காணப்படுகிறது. **ஸங்கீத ஸாரஸங்க்ரஹத்திலும்** அச்சில் வராததும் ஆசிரியர் பெயர் தெரியாததுமான **மேளாதிகாரலக்ஷண** என்ற சுவடியிலும் கோவிந்தரால் செய்யப்பட்ட **ஸங்கீத சாஸ்திர ஸங்க்ஷேபத்தில்** அச்சுதராய மேள வீணையைப்பற்றி விவரிக்கும்பொழுதும் 24 ச்ருதிகள் என்று விவரிக்கப்படுகிறது. இதே மாதிரியாக ஆந்த்ரவ்யாக்யானத்துடன் அங்காஜி சாஸ்திரி என்பவரால் பிரசுரிக்கப்பட்ட "**பரதகல்பலதா மஞ்சரி**" என்ற நூலிலும், வெங்கடஸுந்த ரங்காசாரி என்பவரால் பிரசுரிக்கப்பட்ட "**ரஸிகஜநமனோல்லாஸிநி**" என்ற ஸங்கித நூலி

லும் ஒரு ஸ்தாயியில் 18 ச்ருதிகள் கொண்டதாகவும் சொல்லப்படுவதாக அறிகிறோம். இம்மாதிரி, தேசத்தில் சில விடங்களில் இக்கொள்கை இருந்திருப்பதாகத் தெரிகிறதினால், இதேமாதிரி, வேறு சில தமிழ் நூலிலும் ச்ருதி 18 என்றிருப்பதையும் கண்டு இந்நூலில் அகஸ்தியர் மதம் என்று மதாந்தரமாக இவ்வாசிரியர் இந்நூலில் புகுத்தியிருக்கிறார் என்று கொள்ள வேண்டியிருக்கிறது. மேற்கண்ட பரதகல்பலதாமஞ்சரி, ரஸிகஜநமனோல்லாஸினி இவைகளில் காணும் 18 ச்ருதிகளை ஸ்வரங்களுக்கு பங்கிட்டிருக்கும் விவரம் :—

ஷட்ஜம்	—	நாபிகா, அதர்வணி, தஸ்தா
ரிஷபம்	—	சரீ அதிசாரா
காந்தாரம்	—	கம்பளி, ஸ்ராவிகா, நாளி, ஸரளி
மத்யமம்	—	ரசனி, ரஞ்சனி
பஞ்சமம்	—	க்ராணினி, பதநீ, மந்தா
தைவதம்	—	மௌர்த்தாவீ, கம்பிநீ
நிஷாதம்	—	பாஷிணி, ஸ்வராந்திக

இந்நூலிலும், ரத்னகரத்தை மூலமாக வைத்துச் சொல்லுமிடத்து, ரத்னகரத்தில் உள்ளபடியே ச்ருதிகளை பங்கிட்டு சொல்லப்பட்டுயிருக்கிறது. பிறகு புதுமையாகச் சொல்லப்பட்டதானது, இவர்காலத்தில் இவ்விஷயம் பற்றியுள்ள, கொள்கையைக் காட்டுவதாக இருக்கிறது. இது சதுச்ருதி ரிஷபத்தின் தலையில் சுத்த காந்தார ஸ்வரஸ்தானம் என்று புத்தகங்களில் போட்டு வருவதின் விளைவேயாகும், இப்படி மற்ற, ஷட்ச்ருதிரிஷபம் சுத்த நிஷாதம், ஷட்ச்ருதி தைவதம் முதலியவைகளுக்கும் பார்த்துக்கொள்ள வேண்டியதாகும். ஆக 12 ஸ்வரஸ்தானங்களிலேயே 16 ஸ்வரஸ்தானங்கள் ஒலிப்பதாக நடைமுறையில் பொதுவாக அபிப்ராயம் இருந்து வருகிறது. ரத்னகர காலத்தில் 19 ஸ்வரஸ்தானங்கள் வெவ்வேறு நாதப்ரமாணங்களுடனும், பிறகு அது குறுகி 16 வெவ்வேறு ஸ்வரஸ்தானங்களும் இருந்தவை போக இப்பொழுது 12 ஸ்வரஸ்தானங்கள் தாம் உள்ளன என்றும், அவற்றிலேயே 16ம் ஒலிக்கின்றன என்றும் வந்திருக்கிறது. சதுச்ருதி ரிஷபத்தின் தலையில் சுத்தகாந்தாரம் என்று போட்ட காரணமானது, வீணையில் அந்த ரிஷபக்கூட்டில் விரல் வைத்துத் தந்தியைச் சற்று இழுத்துச் சுத்த காந்தார ஸ்வரத்தை வேறாகவும் வ்யக்தமாகவும் ஒலிக்கச் செய்ய வேண்டுமென்ற கருத்தே என்பது என்னுடைய சொந்த அபிப்ராயம். இந்தப்படியே மற்ற ஸ்வரங்களையும் வெவ்வேறு நாதப்ரமாணத்துடன் ஒலிக்கச் செய்ய வேண்டும்.

22 ச்ருதியும் 22 ஸ்வரங்களேயாகும். அறிந்தோ, அறியாமலோ, நம் கர்னுடக ஸங்கீதத்தில் இந்த 22 ச்ருதிகளும், பாடும்பொழுது ஒலிக்கத்தான் செய்கின்றன. நாளடைவில் 12க்குமேல், 16 அல்லது அதற்கும் அதிகமாகவோ இருந்த ஸ்வரஸ்தானங்கள் நம் ஸங்கீதத்தில் குறைந்து கொண்டே வந்து விட்டன என்பது எனது அபிப்ராயம். ஷட்ஜக்ராமத்தை இப்பொழுதுள்ள, கரஹரப்ரியா, நடபைரவி என்றும் வடக்கே ஹரிகாம்போஜி, சங்கராபரணமென்றும் இப்படிப பலர் பலவிதமாக அபிப்ராயப்படுகிருர்கள். ஷட்ஜக்ராம ஸ்வரஸ்தானங்களின் நாதப்ரமாணம் என்னவென்று தெரியும்பொழுது தான் ஸ்வரஸ்தானங்களும் 12க்குமேல் அதிகரித்து வ்யக்தமாகவும், அனுபவத்திற்கும் வரக்கூடும். நல்ல சாரீரத்துடனும், ஸங்கீத ஞானத்துடனும் எந்த வாத்தியத்தின் உதவியின்றியும் சிலர் ஸாமகானம் செய்வதைக் கேட்கும்பொழுது, அதுவே ஷட்ஜக்ராமம் என்று எனக்கு நன்ருய்த் தோன்றுகிறது. ஆனுல் அதில் இப்பொழுதுள்ள நடபைரவி, கரஹரப்ரியா இவைகளின் ஸ்வரஸ்தானங்கள் வ்யக்தமாக இருப்பதாக என் அறிவுக்குப்படவில்லை. அந்த ஸாமகான ஸ்வரஸ்தானங்கள் வேருகவே ஒலிக்கின்றன. ஆக, ஸ்வரஸ்தானங்கள்பற்றி சாஸ்திரமும் அனுபவமும் எப்படி இருந்தபோதிலும், 17ம் நூற்ருண்டின் இறுதியிலோ அல்லது 18வது நூற்ருண்டின் ஆரம்பத்திலோ எழுதப்பட்டதாக நினைக்கக்கூடிய இதன் மூல நூலையொட்டியே இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது.

முதற் பிரகரணத்தில் 6ம் பக்கத்திலிருந்து 18 பக்கம் முடிய சுரங்களுக்கு, வஸ்திரம், கந்தம், லேபனம், மலர், ஆபரணம், ஆயுதம் வாகனம், விருக்ஷங்கள், பெண்கள், அக்ஷரங்கள், பக்ஷிகள், வாசனை, சுவை முதலியனவும் இரண்டாம் பிரகரணத்தில் சிற்சில குறிப்பிட்ட ராகங்களுக்கு, வேதம், தீபங்கள், ஜாதி, வம்சம், கோத்திரரிஷி, தேகம், முகம், கண், காது, தோள், நிறம், வஸ்திரம் ஆபரணம், கந்தம், புஷ்பம், ஆகாரம், வாகனம், கிழமை, நக்ஷத்திரம், லக்கினம், விருக்ஷங்கள், அதிதேவர்கள், ஆயுதங்கள் முதலியன மிகவிரிவாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. இவற்றில் சில தவிர, விசேஷமாய் இவ்வளவு விரிவாக ரத்னுகரம் முதலிய நூல்களில் இவைகளைபபற்றிச் சொல்லுவதாக பார்த்தவரையில் என் சிற்றறிவுக்குத் தெரியவில்லை. ஆனுல், மைசூர், கீழ்த்திசை ஆராய்ச்சிக்கழகத்தில் (Oriental Research Institute) 17வது நூற்ருண்டில் இருந்ததாகச் சொல்லப்படுகிற மும்மடிசிக்க பூபாலரால் செய்யப்பட்ட, அபிநவ பரத ஸார ஸங்க்ரஹம் என்ற அச்சில் வராத நூலில், வித்யாரண்யரால் இயற்றப்பட்ட ஸங்கீத

ஸாரம் என்ற ஸங்கீதசாஸ்திர நூலின் சிலபாகங்கள் கோட்பாடாகக் காட்டப்பட்டிருப்பதில், ஸ்வரங்களின் மேற்சொல்லிய அவ்வளவு அம்சங்களும் Attributes இருப்பதாகத் தெரிகிறது. இவ்விதமாகவே ஸங்கீதலக்ஷணகாரர்கள், 13வது நூற்றாண்டில் இயற்றப்பட்ட ஸங்கீத ரத்னாகரத்திற்கு முன்பும், பின்பும், இவ்வம்சமுதலியவற்றை தமதிஷ்டத்திற்குக் கூட்டியும் குறைத்தும் சொல்லியிருக்கிறார்கள். அதுபோல், இந்நூலாசிரியரும் தமக்கு ஆதாரமாயுள்ள தமிழ் ஸங்கீத நூல்களையும், வடமொழி ஸங்கீத நூல்களையும் கொண்டு இவ்வம்சங்களை மிக விரிவாகவே சொல்லியிருக்கிறார் போலும்.

ஸோமனார்யர் என்பவரை இந்நூலாசிரியர் அடிக்கடி குறிப்பிடுவதால் அவருடைய **நாட்டிய சூடாமணி** என்ற நூலையும் மற்றும் அச்சுக்கு வராத சில க்ரந்தங்களையும் இதுவிஷயத்தில் அறிவாளிகள் ஆராய்வார்களாக. மற்றும் இவைகளினுடைய பிரயோஜனத்தையும் தத்துவத்தையும் அறிந்தோர்கள் விளக்குவார்களாக.

இச்சங்கீத நூல் தமிழ்நாட்டில் இம்முறையில் வெளியாகும் முதல் நூலென்றும் அரிய நூலென்றும் நான் கருதுகிறேன். இந்நூல் தமிழ் நாட்டு ஸங்கீத உலகிற்கு மிக்க பிரயோஜனமுள்ளதாயும் எல்லா ஸங்கீத அப்யாஸிகளுக்கும், ரசிகர்களுக்கும் வித்யார்த்திகளுக்கும் வித்வான்களுக்கும் அவ்வப்பொழுது பார்த்துக்கொள்ளும் கைப்புத்தகமாகவும் விளங்குமென நம்புகிறேன். இந்நூலில் உள்ள பாட்டுக்களுக்குச் சீர்வகுத்து உரையில்லாத இடங்களில் உரை எழுதி, அகராதி அநுபந்தங்களையும் படிப்போர்க்கு வெகு உபகாரமாக அமைத்து, பேராசிரியர் ரா. விசுவநாதையர் அவர்கள் உதவி புரிந்து இருக்கிறார்கள். இந்நூல் அச்சிட்டு வெளிவருவதற்கு என்னையும் பங்கெடுத்துக் கொள்ளும்படியான ஒரு ஸந்தர்ப்பத்தை அளித்ததற்கும் இதன் மூலம் எனக்குப் பெருமையை உண்டு பண்ணியதற்கும் நூல்நிலையத்திற்கு நான் என்றும் நன்றி பாராட்டுகிறவனாகிறேன்.

ஸங்கீத வித்வத சபை,
மௌபரீஸ் ரோடு,
இராயப்பேட்டை,
சென்னை - 14,
14-1-'55.

முடிகொண்டான் வெங்கட்டராமய்யர்.

பொருளடக்கம்

உ

திருச்சிற்றம்பலம்

மகாபரத சூடாமணி

என்னும்

பாவ ராக தாள சிங்காராதி அபிநயதர்ப்பண விலாசம்

நான்காம் அத்தியாயம்

சங்கீதாதி ராக மேள லட்சணம்

1. பிரகரணம்

சங்கீத ரத்னுகரம்

வகுப்பு 1

சங்கீதமாவது

1. இங்கித கீதம் இதமுள வாத்தியம்
பொங்கிய நிருத்தம் பொருந்தச் செய்தல்
திங்க ளென்னத் திகழ்முக மாதே
சங்கீத மென்னச் சாற்றப் படுமே.

[இதன் பொருள்] கீதம், வாத்தியம், நிருத்தம் இவைகள் சேர்ந்தது சங்கீத மெனப்படும் [என்றவாறு].

இப்பகுதி ஸங்கீதரத்னுகரம் என்ற வடமொழி நூலைப் பெரும்பாலும் தழுவி, அதனையே தமிழில் மொழிபெயர்த்ததுபோல ஆக்கப்பெற்றுள்ளது. சிற்சில இடங்களில் மாறுபாடுகளும் உண்டு. ஒவ்வொரு செய்யுளுக்கும் மூல நூலில் உள்ள பகுதி அடிக்குறிப்பில் காட்டப் பெற்றுள்ளது,

1. சங்கீதரத்னுகரம் 1: 21.

நாதம் பிறந்த விடம்

2. அனுபவத் தான்மா மனத்திற்
போதிக்கு மம்மனந் தேகத்திலான
கனலினை யடிக்கு மந்தக்
கனலெழுந்து நாடிபற்றிக் காற்றுவீசும்
வினவியவ் வான்மமும் மனமுமக்
கினியும்காலும் விசையிற் சேர்ந்து
நனவுபெறுங் காரணமாய் நாதத்தைத்
தருமெனவே நவிலு நூலே.

(இ - ள்.) அனுபவத்தினல், ஆத்மா மனத்தில் போதிக்க, அம்மனம் சரீரத்தில் உண்டான கனலினை அடிக்க, அக்கனல் எழுந்து நாடி பற்றிக் காற்று வீசும். ஆகையின் ஆத்மா, மனம், அக்கினி, காற்று இந்நான்கும் சேர்ந்து நாதம் பிறக்கும் (எ - று).

நாதோபாசனை செய்யும் விவரம்

3. சகலபூ தங்கட்காத்மா வாயந்த
சகந்தனை மறைக்கவல் லமையாய்ச்
சுகமுறு நாதம்பிரம்மா னந்தத்
துற்றமால் விதியர னுருவாய்
வகைகொளு மத்துவிதந் துணையெனவே
வழுத்தி வீணையின் றத்துவமறிந்த
தகைமையோர் சுருதிமார்க்க மாய்நாதந்
தனைப்போற்று வாரெனச் சாற்றே.

(இ - ள்). நாதம் சகல பூதங்களுக்கும் ஆத்மாவனது; ஜகத்தை மறைக்கவல்லது; பிரமானந்தத்துள்ளது; திருமால், பிரமன், சிவபிரான் உருவாய் அமைந்தது; அத்துவிதத் தன்மையானது;

---

2. சங்கீதரத்னகரம்: I: 3.

ஆன்மா மனதை இயக்க, மனம் தீயை இயக்க, தீ காற்றை இயக்க நாதம் பிறக்கிறது என்று கூறப்பட்டது.

வீணையின் தத்துவமறிந்தோர் சுருதி மார்க்கமாய் நாதத்தை உபாசிப்பர் (எ - று).

நாதசப்தம்

4. நகரம் பிராணனதாய் நாட்டுமந்த்ர நூலில்
தகர மனல்வடிவாய்ச் சாற்றும்—வகையிரண்டு
மொன்ருகக் கூடி யோசை யெழுமியல்பை
நன்ருகு நாதமிவை நாடு.

(இ - ள்). நகாரம் பிராணனுகும். தகாரம் அனலாகும். இவ்விரண்டும் சேர்ந்தது நாதமாகும் (எ - று).

---

3. ச-ர. I : 1: 3: 1, 2 சுலோகங்களின் கருத்தும் இங்கு அமைந்துள்ளமையைக் காண்க : அவற்றின் பொருள் :— "எல்லாப் பூதங்களின் சைதன்யமாய், எல்லா ஜீவன்களுக்கும் உயிராய், ஆனந்தமயமாய் இருக்கும் நாத பிரம்மத்தை நாம் வணங்குவோம்; அதை உபாஸிப்பதால் நாதவடிவங்களான பிரமன், விஷ்ணு, பரமசிவன் ஆகியவர்களை வணங்கியவர்களாவோம்"

இன்னும், சங்கீதரத்னகாத்தின் I 1: 30 ஆம் சுலோகத்திற்குக் கல்லி நாதர் எழுதிய உரையைப் பின்பற்றிக் கூறியதாகவும் கொள்ளலாம்.

இந்தச் சுலோகத்தின் பொருள் :—இசையின் பெருமையை எவரே எடுத்துரைக்கவல்லார்? ஏனெனில் இதுவே தருமம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்ற நான்குவித புருஷார்த்தங்களையும் அடைய வழியாகும்.

இதன்வியாக்யானத்தில் கல்லிநாதர் இசை மோக்ஷசாதனம் என்பதற்கு யாஜ்ஞவல்கியரின் ஸ்மிருதியை மேற்கோள் காட்டுகின்றனர். அதன் பொருள் :—ச்ருதி, ஜாதி, இவைகளில் நிபுணனும், தாளத்தோடு ஒன்றி வீணை வாசிப்பதில் தத்வத்தை அறிந்தவனும் கானம் செய்கிறவன் பிரயாசமின்றி மோக்ஷமார்க்கத்தை அடைகிருன்.

இக்கருத்தையும் மூலமாகக் கொண்டு ஷ தமிழ்ப் பாடல் எழுந்தது போலும்.

4. ச-ர. 111 : 6.

நாத என்ற சொல்லிலுள்ள நா=பிராணன் ; த=அக்னி ; நாத= பிராணனும் அக்னியும் கூடினமையால் உண்டானது.

நாதம் வெளிப்படல்

5. மிகுபிரமக் கிரந்தியில் வலியதாய்
இருந்திடும் நாதமேல் நோக்கி
மகிமையாய் நடக்குங் கதிதனில்
நாபிமார்பு கந்தரமுச் சிமுகத்தைத்
தகைமையாய் அடுத்துக் கிருத்திரிம
மெனச்சார்ந் திடும்பேர்க ளைந்தாகிச்
சுகமுறு மானேவெளிவரு மென்னச்
சொல்லுவை நான்முறை தெரிந்தே.

(இ-ள்). காற்றானது பிரமக்கிரந்தியிலிருந்து மேல்நோக்கி நாபி, மார்பு, தொண்டை, தலை, வாய் என்ற இடங்களை அடைந்து ஒலியையுண்டாக்குகிறது. இவ்வைந்திடங்களிலும் நாதத்திற்கும் உண்டாகும் பெயர்கள் ஐந்தாம்; இதன் கடைசி இடத்தின் பெயர் க்ருத்ரிமம் என்பது. இவ்வாறு நாதம் வெளிப்படும் (எ-று).

சுரங்களின் வடமொழிப் பெயர்

6. அடல்செறி ஈசன் சொன்ன
அணிசுரம் பேரே தென்னில்
வடமொழிப் பெயராம் சட்சம்
ரிஷப காந்தாரம் மத்திமம்
நிடதபஞ் சமமே தெய்வ
நிஷாதமு மென்னப் பெற்ற
இடரிலாச் சுரமே மூக்கும்
இயற்றமிழ்ப் பெயர் வேறுமே.

(இ-ள்). சுரப்பெயர்களுக்கு ஈசுவரன் இட்ட வடமொழிப் பெயர்களாவன :—சட்சம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம்,

---

5. ச-ர. I 111 : 4, 5 சுலோகங்களின் மொழிபெயர்ப்பு.

பிரம்மகிரந்தி அடிவயிற்றின் கீழுள்ளது. இங்கு இடை, பிங்கலை, சுழுமுனை என்ற மூன்று நாடிகளும் கூடுகின்றன. இங்கிருந்து மேலோங்கும் வாயுவின் இயக்கத்தால் உண்டாகும் நாதத்திற்கு அவ்விடங்களை நோக்கி முறையே அதிஸூக்ஷ்மம், ஸூக்ஷ்மம், பிஷ்டம், அபுஷ்டம், க்ருத்ரிமம் என்ற ஐந்து பெயர்கள் இடப்பெற்றுள்ளன.

நிஷாதம். என்ற ஏழு. இவற்றிற்குத் தமிழ்ப் பெயர்கள் வேருகும் (எ - று).

சுரங்களின் தென்மொழிப் பெயர்

7. சொன்னநற் பெரியோர் பாடும்
சொற்சரி கமப தாநி
என்னுநல் லெழுத்தும் பன்னே
ரிலக்கண மன்றி யேதான்
நன்னரிவ் வெழுத்தி லேறும்
நாதமாம் சுரத்துக் கேதான்
மன்னுவங் கிசமும் சாதி
வர்ணமும் தெய்வமுஞ் சொல்வோமே.

---

6. ச-ர. I. I: 3: 23, 24 சுலோகங்கள்.

மூலநூலில் கூறப்படும் சில :—

செவிப்புலனுகும் ஒலி 22 வகைகளாம். இவை சுருதி எனப்படும்; (ச்ரு-கேள்). ஹ்ருதயத்தில், மேலே செல்லும் நாடியோடு ஐக்யப்பட்டு 22 நாடிகள் உள்ளன. இந்த 22 நாடிகளும் குறுக்கீடாக அமைந்துள்ளன. இவற்றினுள் பிராணவாயு நிறைந்து மேலே செல்லும்போது ஹ்ருதயப்ர தேசத்தில் மந்தரம் என்றும், தொண்டையில் மத்யம் என்றும், தலையில் தாரம் என்றும் பெயர் பெற்று, ஒன்றைவிட ஒன்று இரட்டிப்பு உரக்கச் செய்த ஓசையுடன் பரிணமிக்கிறது. மந்தரம், மிகத்தாழ்ந்த ஒலி; மத்யம் இடை நிலையானது; தாரம் உச்சநிலையானது. இவை 1: 2: 4: என்ற முறையில் அமையும். இவ்வாறு அமையும் சுருதி பேதங்களை இரு வீணைகளில் அமைத்துக்காட்டும் முறைகளும் ஸங்கீதரத்னாகரமாகிய மூல நூலில் விளக்கப்பட்டுள்ளன.

மேலே கூறப்பெற்ற சட்ஜம் முதலான ஏழு சுரங்களும் 22 சுருதிகளிலிருந்து உண்டாவன.

இவற்றை ஸ, ரி, க, ப, ம, த, நி, எனவும் கூறுவர். இந்தச் சுரம் சுருதியை அடுத்து உடனே உண்டாவது; மென்மைபாய் உள்ளது; பிரதிபலிப்பது; கேட்போருக்கு மனமகிழ்ச்சியைத் தருவது; ரஞ்ஜகத்தை அருளுவது.

(இ - ள்). பெரியோர்கள் இச்சுரங்களை ஸ, ரி, க, ம, ப, த, நி என்ற எழுத்துக்களாலும் குறிப்பர். இவ்வெழுத்துக்களால் நாத மான சுரங்கள் கூறப்படும். இவற்றிற்கு வமிசம், ஜாதி, வர்ணம், தெய்வம் ஆகியவற்றைக் கூறுவோம் (எ - று).

வங்கிசம் - வமிசம்.

வம்சம் நான்கு

8. சட்சமத் திமகாந் தாரம் தாமவை மூன்றும் தேவர் ;
சுத்தபஞ் சமம்பி தூர்க்கள் ; சொல்லிய ரிஷபம் [தெய்வம் ;
உத்தம ரிஷிக ளாகும் ; மவுலி ராக்ஷதர் நிஷாதம் ;
எத்தலத் தோறும் சொல்லு மிலக்கணம் ஈதா மன்றே.

(இ - ள்). சட்சம், மத்திமம், காந்தாரம் இம்மூன்றும் தேவர் ; பஞ்சமம் பிதுரர் ; ரிஷபம், தைவதம் ரிஷிகள் ; நிஷாதம் இராக்ஷதர் வம்சங்களாம் (எ - று).

மவுலிராக்ஷதர் - கிரீடம் தரித்த அரக்கர்.

ஜாதி நான்கு

9. அந்தணன் சட்சமத் திமமான பஞ்சமமே சாதி ;
தந்தைவ மூந்தானே ரிஷபஞ் சத்திரிய னாகும் ;
முந்துகாந் தாரநிஷாத மொழிந்திடில் வைசிய னாகும் ;
சிந்தைசே ரந்தரகா கலிகள் சூத்திர னாமே.

(இ - ள்). சட்சம், மத்திமம், பஞ்சமம் இம்மூன்றும் பிராமண ஜாதி. தைவதம், ரிஷபம் இவ்விரண்டும் க்ஷத்திரிய ஜாதி. காந்தாரம், நிஷாதம் இவ்விரண்டும் வைசிய ஜாதி. அந்தரகாகலி ஸ்வரங்கள், சூத்திர ஜாதியாகும் (எ - று).

---

7. ஏழு சுரங்களும் சுரங்களின் முழுப்பெயர்களாலல்லாமல், மேலே கூறப்பட்ட அவற்றின் முதலெழுத்துக்களாலேயே வழங்கும் என்பதாம். இவற்றைத் தென்மொழிப் பெயர் என்று கூறக் காரணமில்லை. இவற்றிற்கு இலக்கணம் கூறுவதற்குமுன் வமிசம்முதலியவற்றைக் கூறுவோம் என்றார்.

ச-ர. 1 3. 24 ஆம் சுலோகம் இவ்வெழுத்துக்களையே கூறியுள்ளது.

8 ச-ர. I 1: 3. 52. சுலோகம் இவ்வாறே கூறுகிறது. ஆனால் நிஷாதத்திற்கு வம்சம் அஸுரர் என்று கூறுகிறது.

9. ச-ர. I: 1: 53 சுலோகம்.

அந்தரகாகலிஸ்வரங்கள்; இவை ஸ்வரஸாதாரணம் என்று ரத்நாக ரத்தில் சொல்லப்படுகின்றன. இவை விக்ருதிஸ்வரங்களாகும்.

நிறம் ஏழு

10. முண்டக நிறமே சட்சம்; முதியதாம் ரிஷபம் பச்சை;
கண்டபொன் நிறங்காந் தாரம்; கதித்தவெண்
[ணிறமே மத்திமம்;
விண்டபஞ் சமம்க ருப்பு; விளங்கிய ஊதா தைவம்;
கொண்டிடு பஞ்ச வர்ணம் நிஷாதமாக் குறிக்க லாமே.

(இ-ள்). சட்சம் சிவந்த தாமரை நிறம். ரிஷபம் பச்சை. காந்தாரம் பொன்னிறம். மத்திமம் வெண்ணிறம். பஞ்சமம் கருப்பு நிறம். தைவதம் ஊதாநிறம். நிஷாதம் பஞ்ச வர்ணம் ஆம் (எ-று).

அதிதேவதைகள் ஏழு

11. பிரமனே ரிஷபம்; சட்சம் பிறங்கிடும் வன்னி யாகும்
சரஸ்வதி காந்தா ரஞ்சொல் சாருருத் திரனே மத்திமம்;
பரவுபஞ் சமமே மாலோன்; பண்புறு கணப திக்கே
உரமிகு தைவதந்தா னுற்றசூ ரியனி ஷாதம்.

(இ-ள்). ரிஷபம் பிரமன்; சட்சம் அக்னி; காந்தாரம் சரஸ்வதி; மத்திமம் ருத்திரன்; பஞ்சமம் விஷ்ணு; தைவதம் கணபதி; நிஷாதம் சூரியன் ஆம் (எ-று).

உணவு வகை ஏழு

12 தயிர்ச்சாதம் சட்சம்; பாயசச்
சாதம் ரிஷபம்; காந்தாரம்
நயமான பலகாரம்; மத்திமம்
சித்திரச் சாதம்; பஞ்சமமா;

---

10. ச-ர. I: 1: 54-55 சுலோகங்கள் கூறுவன :—

அவற்றின் நிறங்கள் முறையே தாமரை, பிஞ்ஜரம் (சிறிது வெண்மை கலந்த மஞ்சள்); ஸ்வர்ணரேகை மல்லிகை; இருள்; மஞ்சள்; புள்ளிகளோடு கூடிய கபிலம்.

11. ச-ர. 1. 1. 54-55.

அக்னி, பிரமன், ஸரஸ்வதி, சிவன், விஷ்ணு, கணேசன், சூரியன் ஆகியோர் ஏழு சுரங்களுக்கும் முறையே தேவதைகளாம்.

தைவதம் சுத்தான்ன மதாம் ;
நிஷாதம் காப்பரிசி சாற்றுமூணும் ;
கயமெனத் துலங்கு நடையுடை
யழகொழுகிய செங்கமல மாதே.

(இ - ள்). சட்சத்திற்குத் தயிர்ச்சாதம் ; ரிஷபத்திற்குப் பாயசம் ; காந்தாரத்திற்குப் பலகாரம் ; மத்திமத்திற்குச் சித்திரச் சாதம் ; பஞ்சமத்திற்கு மா ; தைவதத்திற்குச் சுத்தான்னம் ; நிஷாதம் காப்பரிசி ; இவை உணவாம் (எ - று).

வஸ்திரம் ஆறு

13. சிவந்ததுகில் பஞ்சமம் காந்தாரமதாம்
வெண் துகிலாய்ச் செப்புஞ் சட்சம் ;
கவியும்சித் திரமேதெய்வம் ; ரிஷபம்பீ
தாம்பரமாய்க் கருதும் நீலம்
குவியுமத் திமத்திற்கு ஊதாநி
டதத்திற்குக் கொள்ளு மென்றே
நவி லுவ ரிம்முறை தெரிந்தேழு
சுரத்தின் துகிற்கூறை நாட்டுவாயே.

(இ - ள்). பஞ்சமத்திற்கும் காந்தாரத்திற்கும் சிவப்புத்துகில் ; சட்சம் வெள்ளை ; தைவதம் சித்திரம் ; ரிஷபம் பீதாம்பரம் ; மத்திமம் நீலம் ; நிஷாதம் ஊதா.

கந்தம் லேபன வகை ஏழு

14. குங்குமம் சட்ச மத்தாம் ரிஷபத்திற் ககரு வாகும்
தங்குகத் தூரி யாம்காந் தாரமே தெய்வதத்திற்
கங்கமழ் சந்த னம்நி ஷாதமாங் கதம்ப மத்திமம்
பங்குபச் சைக்கற் பூரம் பஞ்சமங் கோரோ சனம்மே.

(இ - ள்). சட்சத்திற்குக் குங்குமம். ரிஷபத்திற்கு அகரு. காந்தாரத்திற்குக் கஸ்தூரி. தெய்வதத்திற்குச் சந்தனம். நிஷாதத்திற்குக் கதம்பப்பொடி. மத்திமத்திற்குப் பச்சைக் கற்பூரம். பஞ்சமத்திற்குக் கோரோசனம் ஆம் (எ - று).

---

12. இச்செய்யுள் முதல் 20 ஆம் செய்யுள் முடியவுள்ள பொருள் சங்கீதரத்நாகரத்தில் கூறப்பெறவில்லை.

மலர்வகை ஏழு

15. புன்னைகாந் தார மாகும் புகழ்தாழை பஞ்ச மத்தாம்
என்றுமத் திமத்திற் காமல் லிகைதெய்வ மலரிப் பூவாம்
துன்னுதா மரைநி ஷாதம் ரிஷபஞ்சண் பகத்தைச் [சூடும்
கன்னியே பிச்சிப் பூவைச் சூடுஞ்சட் சமமாங் காணே.

(இ - ள்). காந்தாரத்துக்குப் புன்னைப்பூ; பஞ்சமத்திற்குத் தாழம்பூ; மத்திமத்திற்கு மல்லிகைப்பூ; தைவதத்திற்கு அலரிப்பூ; நிஷாதத்திற்குத் தாமரைப்பூ; ரிஷபத்திற்குச் சண்பகப்பூ; சட்சமத்திற்குப் பிச்சிப்பூ ஆகும் (எ - று).

ஆபரணம் ஏழு

16. முத்தாகும் சட்சத் துக்கு முழுநீலம் ரிஷபத் துக்காம்
வைத்தகாந் தாரத் துக்காம் வைரம் வைடூர்யம் மத்திமம்
கொத்தாகுந் தெய்வத்துக் காங்கோ மேதகம் [பச்சைப்பஞ்ச
மத்துக்காம் நிஷாதம் புஷ்ப ராகமா வமுத்து மாதே.

(இ - ள்). சட்சத்திற்கு முத்தும், ரிஷபத்திற்கு நீலமும், காந்தாரத்திற்கு வைரமும், மத்திமத்திற்கு வைடூர்யமும், பஞ்சமத்திற்குப் மரகதமும், தைவதத்துக்குக் கோமேதகமும், நிஷாதத்துக்குப் புஷ்பராகமும் ஆபரணங்கள் ஆம் (எ - று).

ஆயுதங்கள் ஏழு

17. குந்தமே ரிஷபத் துக்காம் கூர்கத்தி சட்ச த்திற்காம்
கந்தாரங் கதைய தாகு மத்திமம்சக் கரத்தைப் பற்றும்
முந்துபஞ் சமமே பிண்டி முழங்குநா ராசந் தெய்வம்
தொந்தநி ஷாத மங்கு சமதாகச் சொல்லு மாதே.

(இ - ள்). ரிஷபத்துக்குக் குந்தமும், சட்சத்திற்குக் கத்தியும், காந்தாரத்துக்குத் தண்டாயுதமும், மத்திமத்திற்குச் சக்கரமும், பஞ்சமத்திற்குப் பிண்டியும், தைவதத்திற்கு நாராசமும், நிஷாதத்திற்கு அங்குசமும் ஆயுதங்களாம் (எ - று).

---

15. ச-பிச்சி; ரி-சண்பகம்; க-புன்னை, ம-மல்லிகை, ப-தாழம்பூ, த-அலரி; நி-தாமரை. ஆகும்.

வாகனங்கள் ஏழு

18. அன்னமே சட்ச மத்திற் காஞ்சிங்கம் ரிஷபத் திற்கு
மன்னுகாந் தாரம் கண்ட பேரண்ட மாஞ மத்திமம்
உன்னுபஞ்ச மத்திற் காஞ்சா ளுவங்கிளி தைவ தத்திற்
கென்னுநி ஷாதம் நாண வந்தானென் றியம்பு நூலே.

(இ - ள்). சட்சத்திற்கு அன்னமும், ரிஷபத்திற்குச் சிங்கமும், காந்தாரத்துக்குக் கண்டபேரண்டமும், மத்திமத்திற்கு மானும், பஞ்சமத்திற்குச் சாளுவமும், தைவதத்திற்குக் கிளியும், நிஷாதத்திற்கு நாணவந்தானும் வாகனகங்களாகும் (எ - று).

நாணவந்தான் - நாகணவாய்ப்புள.

வாச விருக்ஷங்கள் ஏழு

19. மத்திமம் நாவல் வாழை காந்தார மாம்பே ரீந்து
முத்திய ரிஷப மாகும் மொழிச்சட்சம் மாவ தாகும்
சித்திபஞ் சமத்திற் காகு மாதுளை திராக்ஷை தெய்வ
தத்திற்கா நிஷாதம் புன்னை வாசமாய்ச் சாற்று நூலே.

(இ - ள்). மத்திமத்திற்கு நாவலும், காந்தாரத்திற்குக் கதலியும், ரிஷபத்திற்குப்பேரீந்தும். சட்சத்திற்கு மாவும், பஞ்சமத்திற்கு மாதுளையும், தைவதத்திற்குத் திராக்ஷையும், நிஷாதத்திற்குப் புன்னையும் வாச விருக்ஷங்களாம் (எ - று).

பெண்கள் ஏழு

20. கந்தருவப் பெண்சட்சம் கின்னரப்பெண்
ரிஷபமதாம் காந்தாரத்திற்
கந்தமிள வியக்கப்பெண் மத்திமங்கிம்
புருடப்பெண்ணும் நாகப்பெண்
முந்துபஞ் சமத்திற்காம் சுரர்மடந்தை
தெய்வதமா மொழிநிஷாதம்
தொந்தமிலா வரக்கர்குலப் பெண்ணுகு
மெனநூலிற் றுலங்கும்பாரே.

---

19. ச-மாமரம்; ரி-பேரீந்து; க-கதலி; ம-நாவல்; ப-மாதுளை; த-திராக்ஷை, நி-புன்னை எனலாகும்,

(இ - ள்). சட்சத்திற்குக் கந்தருவப் பெண்ணும், ரிஷபத்திற்குக் கின்னரர் பெண்ணும், மத்திமத்திற்குக் கிம்புருடர் பெண்ணும், தைவதத்திற்குத் தெய்வப்பெண்ணும், நிஷாதத்திற்கு அரக்கர் குலப் பெண்ணுமாம் (எ - று).

கோத்திர ரிஷிகள் ஏழு

21. அங்கிகோத் திரமே சட்சம் விடைவேத புருஷ னுகும்
தங்குகாந் தாரத் திற்குச் சந்திரன் கண்ணன் மத்திமம்
பங்குபஞ் சமத்திற் கீசன் பகர்நாரதன் தெய்வ தத்தாம்
இங்குதும் புருநி ஷால மிருடிக ளிவரா மன்றே.

(இ - ள்). சட்சத்திற்கு அக்கினியும், (விடை, அதாவது) ரிஷபத்திற்கு வேத புருஷனும், காந்தாரத்திற்குச் சந்திரனும், மத்திமத்திற்குக் கண்ணனும், பஞ்சமத்திற்கு ஈசனும், தைவதத்திற்கு நாரதனும், நிஷாதத்திற்குத் தும்புருவும் இருடிகளாம் (எ - று).

சப்தசுரங்கள் பிறந்கும்போது பார்த்தவர்கள்

22. பஞ்சமம் நாரதன் பார்த்தான்
அயன்ரிஷபந் தனைப்பார்த்தான் பகர்காந்தார
மெஞ்சிடா மதிபார்த்தான் மாயன்மத்
திமம்பார்த்தா னிசையச் சட்சம்
மிஞ்சுமெஞ்ஞ புருஷன் பார்த்தான்
தெய்வதம் நிஷாதமி ரண்டைநேராய்
கஞ்சவலர்த் திருவணையாய் தும்புரு
பார்த் தானெனவே கருதுநூலே.

(இ - ள்). பஞ்சமத்தை நாரதனும், ரிஷபத்தைப் பிரமனும், காந்தாரத்தைச் சந்திரனும். மத்திமத்தை விஷ்ணுவும், சட்சத்தை

---

21. சங்கீதரத்னாகரம் 1: 3: 56-57 சுலோகங்கள் ஏழு ஸ்வரங்களின் தோற்றத்திற்குக் காரணமான ருஷிவர்களை, அக்னி, ப்ரஹ்மன், சந்திரன், விஷ்னு, நாரதர் என்று ஐந்துஸ்வரங்களுக்குக்கூறி, ஆறு, ஏழு ஸ்வரங்களுக்குத் தும்புரு முனிவர் என்று பகரும்.

ஸங்கீத மகரந்தம் என்ற வடமொழி இசைநூலில் ஸ்வரங்களின் கோத்திரங்கள் ஜமதக்னி, ஆத்ரேயர், கௌதமர், வஸிஷ்டர், ஸ்ரீவத்ஸர், பராசர், சாரங்கர் எனக்கூறப்பட்டுள்ளன.

யஞ்ஞுபுருஷனும், தைவதத்தையும் நிஷாதத்தையும் தும்புருவும் பார்த்தார் எனக் கூறும் நூல்கள் (எ - று).

தீவுகள் ஏழு

23. காந்தாரங் குசமே சட்சம் கருதிடுஞ் சம்பு சாகம்
ஆய்ந்திடு ரிஷபம் மத்திமம் ஆம்கிர வுஞ்சந் தீவு
சார்ந்ததெய் வதங்சு வேதம் சால்மலி பஞ்ச மத்தாம்
தேர்ந்திடு நிஷாதம் புஷ்கரத் தீவதாய்ச் செப்பு மானே.

இ - ள்). காந்தாரத்திற்குக் குசத்தீவும், சட்சமத்திற்குச் சம்புத்தீவும், ரிஷபத்திற்குச் சாகத்தீவும், மத்திமத்திற்குக் கிரவுஞ்சத்தீவும், தெய்வதத்திற்குச் சுவேதத் தீவும், பஞ்சமத்திற்குச் சால்மலித்தீவும், நிஷாதத்திறகுப் புஷ்காத்தீவும் ஆம் என்றவாறு,

சுரங்களின் சந்தஸ் ஏழு

24. அனுஷ்டுபுவாஞ் சட்ச மத்திற்
கருள்காயத்திரி ரிஷபமாங் காந்தாரம
இனியதிருஷ்டுபு பஞ்சமம்பங் திமத்திமம்
பிரக்ருதி யென்னும்
கனிதெய்வ தமுஷ்டினி காணுநிஷாதஞ்
சகதிகரு துஞ்சந்தம்
வினவுவர் சாஸ்திர மறிந்த மேலோர்கள்
மதிமுகமாய் விளங்குமாதே.

(இ - ள்). சட்சத்திற்கு அனுஷ்டுப்பும், ரிஷபத்திற்குக் காயத்திரியும், காந்தாரத்திற்குத் திருஷ்டுப்பும், பஞ்சமத்திற்குப் பங்கதி

---

22. ச. யஞ்ஜபுருஷன்; ரி, பிரமன்; க, சந்திரன்; ம, அரி; ப, நாரதன் த, நி தும்ரு இவர்கள் பார்த்தார்கள்.

இங்கு எக்ஞபுருஷன் அக்னியைக் குறிப்பதாகும்.

இப்பிரிவு முன் செய்யுளுக்குக் கூட்டப்பெற்ற ஸங்கீதரத்நாகரச் செய்யுளின் (I; 3: 56-57) கருத்துக்கு ஒத்திருக்கிறது.

23. ச - சம்புத்தீவு; ரி - சாகத்தீவு; க - குசீத்தீவு; ம - கிரவுஞ்சத் தீவு ; ப - சால்மலித்தீவு ; த - சுவேதத்தீவு ; நி - புஷ்கரத்தீவு ஆம்.

ஸங்கீதரத்நாகரம் (I: 3 : 55) ஸ்வரங்கள் இந்தத் தீவுகளில் பிறந்து வாழ்ந்தன என்று கூறும்.

யும், மத்திமத்திற்குப் பிரகிருதியும், தெய்வதத்திற்கு உஷ்ட்னிப்பும், நிஷாதத்திற்கு ஜகதியும் சந்தஸ்களாம (எ - று).

சுரங்களின் வாரம்

25. தனிவருஞ் சட்ச மங்காந்
தாரங்கள் தமக்கு வாரம்
சனியதாம் ரிஷபம் வெள்ளி
மத்திஞா யிறதாச் சாற்றும்
புனிதபஞ் சமத்தின் வாரம்
புதன்றெய்வம் வியாழன் செவ்வாய்
வனிதையே நிஷாத மென்றே
வகுத்தனர் நூல்வல் லோரே.

(இ - ள்). சட்சம் காந்தாரத்திற்குச் சனியும், ரிஷபத்திற்கு வெள்ளியும், மத்திமத்திற்கு ஞாயிறும், பஞ்சமத்திற்குப் புதனும், தெய்வதத்திற்கு வியாழனும், நிஷாதத்திற்குச் செவ்வாயும் வாரங்களாம் என்றவாறு.

சுரங்கங்களின் நட்சத்திரங்கள் ஏழு

26. சித்திரை ரிஷபஞ் சட்சஞ் செப்புநற் சதய மாகும்
மத்திமம் மகம தாகும் வளரவிட் டங்காந் தாரம்
உத்திரம் பஞ்ச மத்தா மோதுபூ ராடந் தெய்வ
தத்துக்காம் நிஷாதத் திற்கே யனுடமாய்ச் சாற்று
[நூலே.

(இ - ள்). ரிஷபத்திற்குச் சித்திரையும், சட்சத்திற்குச் சதயமும், மத்திமத்திற்கு மகமும், காந்தாரத்துக்கு அவிட்டமும், பஞ்சமத்திற்கு உத்தரமும், தெய்வதத்திற்குப் பூராடமும், நிஷாதத்திற்கு

---

24. ச - அனுஷ்டுப் ; ரி - காயத்ரீ ; க - த்ரிஷ்டுப் ; ம - ப்ருஹதீ த - உஷ்ணிக் ; நி - ஜகதீ ஆம்.

ச - ர : 1: 3: 58-59.

25. ச, க - சனி ; ரி - வெள்ளி, ம - ஞாயிறு ; ப - புதன் ; த - வியாழன் ; நி - செவ்வாய்.

இது முதல் 32 ஆம் செய்யுள் வரை உள்ள செய்திகள் ஸங்கீதரத்நாகரத்தில் காணப்படவில்லை.

அநுஷமும், நக்ஷத்திரங்களாம். இவைகள் சப்தசுரங்கள் பிறந்த நக்ஷத்திரங்களாம் என்றவாறு.

சுரங்களின் லக்னங்கள் 6

27. குடமது சட்ச மாகும்
கோல்ரிஷ பத்திற் காகும்
திடமுள காந்தா ரம்நிஷா
தந்தேன் சிங்க மத்திமம்
படியும்பஞ் சமமே கன்னி
பகர்தெய்வம் வில்லா மென்றே
அடைவுட னுலாய்ந் தோர
றைந்தன ரறிந்து கொள்ளே

(இ - ள்). சட்சத்திற்குக் கும்பமும், ரிஷபத்திற்குத் துலாமும், காந்தார, நிஷாதங்களுக்கு விருச்சிகமும், மத்திமத்திற்குச் சிங்கமும், பஞ்சமத்திற்குக் கன்னியும், தெய்வதத்திற்குத் தனுசும், லக்கினங் களாம் என்றவாறு.

சுரங்களின் முகங்கள்

28. மகிழ்முக நான்கு சட்சம் மத்திமம் பஞ்ச மத்திற்
சுகமுள ரிஷபந் தெய்வத் தானனம் மூன்ற தாகும்
மிகுகாந் தாரம் நிஷாத மிருமுக மாகு மென்றே
வகையுள நூலை யாய்ந்தோர் வகுத்துரை செய்தார்
[மானே.

(இ - ள்). சட்சத்திற்கும் மத்திமத்திற்கும் பஞ்சமத்திற்கும் நான்கு முகமும், ரிஷபம் தெய்வதத்திற்கு மூன்று முகமும் காந்தாரம் நிஷாதத்திற்கு இரண்டு முகமுமாமென்றவாறு.

---

26. ச - சதயம்; ரி - சித்திரை; க - அவிட்டம்; ம-மகம்; ப-உத்திரம்; த - பூராடம்; நி - அனுஷம்.

27. ச - கும்பம்; ரி - துலாம்; க - விருச்சிகம்; ம - சிங்கம்; ப - கன்னி; த - தனுசு; நி - விருச்சிகம்.

க, நி, ஆகிய இரண்டிற்கும் ஒரே இலக்கினம்.

சுரங்களின் கண், காது, புயம்.

29. பண்புகழ் சட்சம் மத்திமம் பஞ்சம மூன்றி னுக்குங்
கண்காது புயங்க ளெட்டாம் காந்தாரம் நிஷாதத் திற்கு
உண்மையாய் நன்னூன் காகும் ரிஷபந்தெய் வதத்திற் [கோதும்
திண்மையா ரூரு மென்றே செப்பினர் செல்வ மாதே.

(இ - ள்). சட்சம், பஞ்சமம், மத்திமம் இவைகளுக்குக் கண், காது, புயங்கள் எட்டாகும்; காந்தாரம் நிஷாதத்திற்கும் நன்னூன் காகும்; ரிஷபம், தெய்வதத்திற்கும் ஆரூருகும் (எ - று).

சுரங்களின் பாதம்

30. சட்சம ரிஷபகாந் தார மத்திமத் துடனே கூடி
நிச்சய மான பஞ்சமம் தெய்வம்நி ஷாதத் திற்கும
கச்சித மாக வோதும் கால்களே யிரண்டு வீதம்
மெச்சமூ துரையி லென்றே விள்ளுவர் கமல மாதே.

(இ - ள்). சட்சம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தெய்வதம், நிஷாதம், இந்த ஏழு சுரங்களுக்கும் பாதங்கள் இரண் டிரண்டாகும் (எ - று).

சுரங்களின் தேகம்

31. சட்சங்காந் தாரத் திற்குச் சாற்றுவர் தூல தேகம்
மெச்சுதெய் வதமும் மத்தி மம்முய ரத்தை மேவும்
தச்சபஞ் சமத்திற் காகுஞ் சமதேகம் ரிஷபஞ் சூக்குமம்
அச்சமில் நிஷாதத் திற்கே யதிதூல மென்ன லாமே.

(இ - ள்). சட்சத்திற்கும் காந்தாரத்திற்கும் தூலதேகம்; தெய்வதத்திற்கும் மத்திமத்திற்கும் உயர்ந்த தேகம்; பஞ்சமத்திற் குச் சமதேகம்; ரிஷபத்திற்குச் சூக்கும தேகம்; நிஷாதத்திற்கு அதி தூல தேகமாம் (எ - று).

சுரங்களின் வயசு

32. பத்தாண்டு நிஷாதத் திற்குப் பஞ்ச மம்முப் பதாம்நூற்
பத்தாண்டு மத்தி மத்திற் கறுபது காந்தா ரம்பார்
எத்துசட் சமத்திற் கெண்ப தெழுபது ரிஷப மாகும்
முத்துதை வதத்திற் காண்டி ருபதாய் மொழியு நூலே.

(இ - ள்). நிஷாதத்திற்கு வயது பத்து ; பஞ்சமத்திற்கு வயது முப்பது ; மத்திமத்திற்கு வயது நாற்பது ; காந்தாரத்திற்கு வயது அறுபது ; சட்சமத்திற்கு வயது எண்பது ; ரிஷபத்திற்கு வயது எழுபது ; தெய்வதத்திற்கு வயது இருபது ஆம் (எ - று.)

சுரங்களின் இரசங்கள்.

33. அருள்சட்சம் வீர மாகு மற்புதம் ரிஷப மாகும்
பெருரவுத்தி ரங்காந் தாரம் பீபச்சம் மத்தி மக்காம்
வருபயா நகமே பஞ்சமம் தெய்வ மாகு மாசியம்
தருநிஷா தஞ்சிங் காரம் ரசமெனச் சாற்றும் நூலே.

(இ - ள்). சட்சத்திற்கு வீராசம் ; ரிஷபத்திற்கும் காந்தாரத்திற்கும் அற்புதமும் ரவுத்திர ரசமும ; மத்திமத்திற்குப் பீபச்சரசம் ; பஞ்சமத்திற்குப் பயாநகரசம் ; தெய்வதத்திற்கு ஆசியரசம் ; நிஷாதத்திற்குச் சிருங்காரரசமாம் (எ - று).

சுரங்களின் பலன்கள்

34. சட்சம் ஆயுள் விர்த்தி சௌபாக்கியம் ரிஷப மாகும்
துட்சகாந் தாரஞ் சோபனம் சொர்ண லாபம் மத்திமம்
பட்சமாய்ப் பாவம் போக்கும் பஞ்சமம் தெய்வதத் [திற்கும்
நிச்சயம் கார்ய சித்தி நிஷாதஞ்சந் தானசித்தி.

(இ - ள்). சட்சமத்திற்கு ஆயுள் விருத்தி ; ரிஷபத்திற்குச் சௌபாக்கியம் ; காந்தாரத்திற்குச் சோபனம் ; மத்திமத்துக்குச்

---

32. ச - 80 ; ரி - 70 ; க - 60 : ம - 40 ; ப - 30 : த - 20, நி - 10 இவை தேவவருஷங்களால் ஸ்வரங்களின் வயசாகும் என்பர்.

33. ச-வீரம் ; ரி-அற்புதம் ; க-ரௌத்ரம் ; ம-பீபத்ஸம் : ப-பயாநகம் ; த - ஹாஸ்யம்; நி - சிருங்காரம்.

ஸங்கீதரத்நாகரம் I: 3: 59 இந்த இரசங்களைப்பற்றிப் பின்வருமாறு கூறும் :—“ ஷட்ஜமும் ரிஷபமும் வீரரஸத்தையும், அவைகளே அத்புதம், ரௌத்ரங்களையும் பயக்கும் ; தைவதம் பயாநகத்தையும் பயம் தவிர்த்தலுமான இரு சுவைகளை உண்டாக்கும் ; காந்தாரமும் நிஷாதமும் கருணரஸத்தையும், மத்யமமும் பஞ்சமும் முறையே ஹாஸ்யத்தையும் ச்ருங்காரத்தையும் உண்டாக்கும் ” இவையே அனுபவ உணர்ச்சிக்கு ஒத்துள்ளது,

சொர்ண லாபம்; பஞ்சமம் பாவம் போக்கும்; தெய்வதத்திற்குக் காரிய சித்தி; நிஷாதத்திற்குச் சந்தான சித்தியாகும் (எ - று).

சுரங்களின் ஒலி

35. சட்சம் ரிஷப மஞ்ஞை ரிஷபம் காந்தார மாடு
மெச்சுமத் திமங்கி ரவுஞ்சம் மென்குயில் பஞ்ச மத்தாம்
நிச்சய தெய்வத் திற்கு வாம்பரி நிஷாதம் யானை
உச்சரிப் பாகு மென்றே யுரைத்தன ரறிந்து கொள்ளே

(இ - ள்). சட்சத்திற்கு மயூரவொலியும்; ரிஷபத்திற்கு ரிஷப வொலியும்; காந்தாரத்திற்கு மேஷத்தினொலியும்; மத்திமத்திற்குக் கிரவுஞ்ச பக்ஷியினொலியும்; பஞ்சமத்திற்குக் குயிலினொலியும்; தெய் வதத்திற்குக் குதிரையொலியும்; நிஷாதத்திற்கு யானையினொலியும் ஆகும். (எ - று).

சுரங்களின் அக்ஷரம்

36. அகரமி ரண்டுஞ் சட்சம் ரிஷபமா மிகர மிரண்டும்
உகரமி ரண்டுங் காந்தா ரம்மத்திமமே கரமி ரண்டும்
ஐகார மிகாரமி ரண்டும் பஞ்சமம் ஒஓ தைவம்
ஔகார முகர மிரண்டும் நிஷாதம தாகு மானே.

(இ - ள்). சட்சத்திற்கு அ. ஆவும்; ரிஷபத்திற்கு இ, ஈயும்; காந்தாரத்திற்கு உ, ஊவும்; மத்திமத்திற்கு எ, ஏயும்; பஞ்சமத் திற்கு ஐ, இயும்; தெய்வதத்திற்கு ஒ, ஓவும்; நிஷாதத்திற்கு ஔ, உவும் அக்ஷரங்களாம்.

---

34. இது இரத்னாகரத்தில் கூறப்படவில்லை.

35. ஸங்கீதரத்நாகரம் (1: 3 - 46 - 49) :—மயில், சாதகம், செம்மறி, க்ரௌஞ்சம், குயில், தவளை, யானை இவ்வேழு பிராணிகளும் ஷட்ஜ் முதல் ஏழு சுரங்களுக்கும் (ஒலிகளை) உண்டாக்குகின்றன.

36. ச - அ, ஆ; ரி - இ, ஈ; க - உ, ஊ; ம - எ, ஏ; ப - ஐ, இ, த - ஒ, ஓ; நி - ஔ, 2.

இச்செய்யுள் முதல் 40 ஆம் செய்யுள் முடியக் கூறப்பெற்ற செய்தி கள் ஸங்கீதரத்நாகரத்தில் இல்லை.

சுரங்களின் பக்ஷிகள்

37. வல்லூறு சட்ச மாந்தை ரிஷபம்காந் தாரம் காகம்
வெல்லும்குக் குடமே மத்திமம் மேவும்வல் லூறோ
[டாந்தை
புல்லுபஞ் சமமா தாகும் புகழ்தெய்வ மயூர மாகுஞ்
செல்லும்வல் லூறு காகம் நிஷாதமாச் செப்பு மானே.

(இ - ள்). சட்சமத்திற்கு வல்லூறும் ; ரிஷபத்திற்கு ஆந்தையும் ; காந்தாரத்ற்குக் காகமும், மத்திமத்திற்குக் கோழியும் ; பஞ்சமத்திற்கு வல்லூறும், ஆந்தையும் தெய்வதத்திற்கு மயிலும் ; நிஷாதத்திற்கு வல்லூறும் காகமும் ஆம் (எ - று).

சுரங்களின் வாசனை

38. மவ்வல்சட் சமத்திற் கேற்கு மலர்முல்லை ரிஷப மாகும்
ஒவ்வுக டம்புகாந் தாரம் வஞ்சிமத் திமத்திற் கோதும்
செவ்விய நெய்தல் பஞ்சம் செம்பொனு வரையே
[தெய்வம்
கவ்விய நிஷாதம் புன்னை யெனக்கடி கமழு நாலே.

(இ - ள்). சட்சத்திற்கு வனமல்லிகையும், ரிஷபத்திறகு முல்லையும், காந்தாரத்திற்குக் கடம்பும், மத்திமத்திற்கு வஞ்சியும், பஞ்சமத்திற்கு நெய்தலும், தெய்வதத்திற்குப் பொன்னுவரையும், நிஷாதத்திற்குப் புன்னையும வாசனைகளாம் (எ - று).

சுரங்களின் சுவைகள் ஏழு

39. பாலது சட்ச மாகும் பருகுந்தேன் ரிஷப மாகும்
கோலக்கி ழான்காந் தாரம் மத்திமம் நெய்யாக் கூறும்
ஏலம்பஞ் சமம தாகும் கதலிதெய் வதத்திற் கேற்கும்
மாலதாம் நிஷாதத் திற்கு மாதுளங் கனியென் றோதே.

(இ - ள்) சட்சமத்திற்குப் பாலும், ரிஷபத்திற்குத் தேனும், காந்தாரத்திற்குக் கிழானும், மத்திமத்திற்கு நெய்யும், பஞ்சமத்திற்கு ஏலமும், தெய்வத்திற்குக் கதலியும், நிஷாதத்திற்கு மாதுளங்கனியும் சுவைகளாகும் (எ - று).

---

37. ச - வல்லூறு ; ரி - ஆந்தை ; க - காகம் ; ம - கோழி ; ப-வல்லூறு ; ஆந்தை ; த - மயில் ; நி - வல்லூறு, காகம்.

39. கிழான் - சந்தனவகை,

சுரங்களின் இசை ஏழு
அகஸ்தியர் மதம்

40. குரல்சட் சமத்திற் காகும் மத்திமந் துத்தங் கொள்ளும்
மருவிளி பஞ்சமம்கைக் கிளைகாந்தா ரமதே யாகும்
தருமுழை ரிஷபந் தெய்வ தத்திற்கு விளரி யாகும்
ஒருதாரம் நிஷாத மென்றே யுரைத்தனன் சிவனு
[மைக்கே.

(இ - ள்). சட்சமத்திற்குக் குரலும்; மத்திமத்திற்குத் துத்தமும்; பஞ்சமத்திற்கு இளியும்; காந்தாரத்திற்குக் கைக்கிளையும்; ரிஷபத்திற்கு உழையும்; தெய்வதத்திற்கு விளரியும்; நிஷாதத்திற்குத் தாரமும் இசைகளாம் (எ - று).

சுரங்களின் இசைஸ்தானங்கள் ஏழு

41. மிடற்றினிற் சட்சந் தோன்றும்
மத்திமம் நாவை மேவும்
திடகாந் தாரமண் ணுக்கும்
பஞ்சமம் நெற்றி தோன்றும்
குடதெய்வம் நெஞ்சில் தோன்றும்
சென்னியே ரிஷபங் கூறும்
முடிவலாம் நிஷாதத் திற்கு
மூக்கின லென்னும் நூலே.

(இ - ள்). சட்சம் கண்டத்திலும், மத்திமம் நாவிலும், காந்தாரம் அண்ணுக்கிலும், பஞ்சமம் நெற்றியிலும், தெய்வதம் நெஞ்சிலும், ரிஷபம் சிரசிலும, நிஷாதம் மூக்கிலும் தோன்றும் (எ - று).

---

40. இதன் தலைப்பு 'உச்சாரணவிசை ஏழு' என்று வேறோர் ஏட்டில் வரையப்பெற்றுள்ளது.

ச - குரல்: ரி - உழை: க - கைக்கிளை: ம - துத்தம். ப - இளி; த - விளரி; நி - தாரம்.

ச - மிடறு; ரி - சிரசு; க - அண்ணுக்கு; ம - நா; ப - நெற்றி; த - நெஞ்சு; நி - மூக்கு.

இது இரத்னகரத்தில் கூறப்படவில்லை.

இசைபற்றுமிடம் 7

42. குரலது மிடற்றைப் பற்றும்
குருதுத்தம் நாவிற் கொள்ளும்
அருளண்ணுக் காலே கைக்கி
ளைக்கொளு முழையாஞ் சென்னி
கருவிளி நுதலே யாகும்
நெஞ்சினை விளரிக் காக்கும்
பெருமூக்கைத் தாரம் பற்றும்
என்னவே பேசு மானே.

(இ - ள்). மிடறு குரலைப் பற்றும்; நா துத்தம் பற்றும்; அண்ணுக்கு கைக்கிளை பற்றும்; சிரசு உழையைப் பற்றும்; நுதல் இளியைப் பற்றும்; நெஞ்சு விளரியைப் பற்றும்; மூக்கு தாரத்தைப் பற்றுமாம் (எ - று).

சுரங்களின் உச்சாரண் ஸ்தானம் 6

சார்ங்கதேவமுனி மதம்

வெண்பா

43. நாசிகண்ட மார்பு நவிலலகு நாவுதந்தம்
பேசிய விவ்வாறும் பிசகாம—லோசைகொளும்
தாரணையில் நின்று தவறு தெழுஞ்சுரத்துச்
சாரணத் தானமெனச் சாற்று.

(இ - ள்). நாசி, கண்டம், மார்பு, அலகு, நா, தந்தம் இவ்வாறும் பிசகாமல் ஓசை கொள்ளப்பட்ட தாரணையினின்று தவறுமல் எழு சுரத்துக்கு உச்சாரணதானமெனச் சொல்லுவாயாக (எ - று).

சுரங்களின் ஏழு பாலை

44. குரலே குரலா யிற்செம் பாலைதுத் தங்குரல தாயில்
வருபடு மலைப்பா லைகைக் கிளைகுர லாயில் வாழ்த்தும்
திருசெவ் வழிப்பா லைபேர் செலுமுழை குரலோ பாயின்
அரும்பாலை யிளிகு ரற்று னுயிற்கோ டிப்பா லையே.

---

42. குரல் (ஸ) - மிடறு; உழை (ரி) - சிரசு; கைக்கிளை (க) - அண்ணுக்கு துத்தம் (ம) - நா; இளி (ப) - நெற்றி; விளரி (த) - நெஞ்சு; தாரம் (நி) - மூக்கு.

முந்தின செய்யுளோடு ஒப்பிடுக.

45. விளரியே குரல தாயின் விளரிப்பா லையதாய் மேவும்
குளரியே பெருகும் தாரம் குரலாயின் மேற்செம் பாலை
அளவதா மென்று நாலை யாய்ந்திடுங் கவிவல் லோர்கள்
புளகித மூலையி னூளே புகன்றன ரறிந்து கொள்ளே.

(இ - ள்). குரல் குரலாயின் செம்பாலை ; உழைகுரலாயின் அரும் பாலை ; கைக்கிளை குரலாயின் செவ்வழிப்பாலை ; துத்தங்குரலாயது படுமலைப்பாலை ; இளி குரலாயின் கொடிப்பாலை ; விளரிகுரலாயது விளரிப்பாலை ; தாரம் குரலாயது மேற் செம்பாலையாகும் என்றவாறு.

---

44 - 45. இப்பாடல்களோடு பின்வருவனவற்றை ஒப்பிடுக :—

இங்ஙனம்பிற் பாலை பிறக்குமிடத்துக் குரலும் துத்தமும் இளியும் நான்கு மாத்திரைபெறும்; கைக்கிளையும் விளரியும் மூன்று மாத்திரை பெறும்; உழையும் தாரமும் இரண்டு மாத்திரை பெறும்; இவற்றுள் குரல் குரலாய் ஒத்து நின்றது செம்பாலை; குரலிற் பாகத்தையும் இளியிற் பாகத்தையும் வாங்கிக் கைக்கிளை உழை விளரிதாரத்திற்கு ஒரோ வொன்றைக் கொண்டு சேர்க்கத் துத்தம் குரலாய்ப் படுமலைப் பாலையாம்; இவ்வாறே திரிக்க இவ்வேழு பெரும்பாலைகளும் பிறக்கும்; பிறக்குங்கால் திரிந்தகுரல் முதலாக ஏழும் பிறக்கும்.

அவை பிறக்குமாறு :—

குரல் குரலாயது—செம்பாலை
துத்தம் குரலாயது—படுமலைப்பாலை
கைக்கிளை குரலாயது—செவ்வழிப்பாலை
உழை குரலாயது—அரும்பாலை
இளி குரலாயது—கோடிப்பாலை (கொடிப்பாலை)
விளரி குரலாயது—விளரிப்பாலை
தாரம் குரலாயது—மேற் செம்பாலை

என வலமுறையே ஏழுபாலையும் கண்டுகொள்க. இதனை வலமுறை யென்றும்; மேற்கே முகமாக இருந்து திரிதலாம்.

[சிலப். அடியார்க்கு நல். உரை. பக்-450

ச (குரல்), ரி (உழை), க (கைக்கிளை), ம (துத்தம்), ப (இளி), த (விளரி), நி (தாரம்) என்பதைக் கொண்டு உரையைப் பார்க்க.

சுரங்களின் நாடிக்கூறு 3

சோமநாதிய மதம்.

சுரங்கங்களின் நாடிகக் கூறு

46. இடகலை விசும்பி னிருதயத்
துதித்தங் கெழுந்திடு மோசைமந் தரமாம்
திடமுறு பிங்கலை கழுத்து
தித்துச் செழுத்திடு மோசைமத் திமமாம்
வடிவுள சுழுத்தி யுச்சியி லுதித்து
வளமைசேர் ஓசைதா ரகமாம்
மடலவிழ்ந் திலங்கும் பூங்குழல் மாதே
வழுத்துவை நாடியா மாறே.

(இ - ள்). இடைகலையின் - இருதயத்தின் - எழுமோசை மந்தரம்; பிங்கலையின் - கழுத்தில் - உதித்தெழும் ஓசை மத்திமம்; சுழுமுனை யின் - உச்சியில் உதித்தெழும் ஓசை தாரம்; இம்மூன்றும் நாடிகளாம (எ - று).

---

46. ஸ்தாயிகளின் பதிவுகள் என்ற தலைப்பில், சோமநாதர் இயற்றிய இராகவிபோதத்தில், 'மார்பு, (நெஞ்சு தொண்டை), சிரம் இவற்றிலிருந்து வெளியாகும் நாதங்கள் முறையே மந்தரம், மத்யம், தாரம் என்றே அழைக்கப் பெறுகின்றன' (இராகாவிபோதம். முதல் விவேகம் 12 ஆம் சுலோகம்).

ஸங்கீதரத்நாகரம் (1: 3: 7):- "நாதம் சாதாரண முறையிலே மூன்று வகைப்படும். ஹ்ருதயத்திலுள்ள அந்தநாதம் மந்தரம் எனப்படும்; தொண்டையிலுள்ளது மத்யம் எனப்படும்; சிரஸிலுள்ளது தாரம். இவற்றின் வேறுபாடுகள் முறையே ஒவ்வொரு நிலைநாதமும் தத்தமக்குரிய முன்னைய நிலை நாதத்தைவிட இருமடங்கு உரத்து ஒலிப்பனவாம்.

மந்தரம்—மிகத்தாழ்ந்தது
மத்யம்—இடைநிலையிலுள்ளது.
தாரம்—உச்சநிலையிலுள்ளது.

வேறு

47. சட்சம ரிஷப மந்தரம் காந்தார மத்திமம் மத்யமம்
மெச்சுபஞ் சமத்தி னூடே மேவுதெய் வதநி ஷாதம்
உச்சதா ரகம தென்றே யோதினர் நாடிக் கூற்றை
பச்சிளங் கொடிநேர் மாதே பாவலர் முறைதெ ரிந்தே.

(இ - ள்). சட்சத்திற்கு ரிஷபத்திற்கும் மந்தரம்; காந்தாரத்துக்கும் மத்திமத்திற்கும் மத்திமம்; பஞ்சமத்திற்கும் தெய்வதத்திற்கும் நிஷாதத்திற்கும் தாரகம் நாடிகளின் கூறும் (எ - று),

சுரங்களின் நாடித்தொகை 22

48. மகிழ்சட்ச மத்தி மம்பஞ் சமநாடி நன்னான் காகும்
திகழ்நிஷா தங்காந் தாரஞ் செப்பிடு மிரண்டி ரண்டா
மூகிலெனும் ரிஷபந் தெய்வ தத்திற்கு மும்மூன் றாகும்
தொகையெழு சுரத்தி னாடி யிருபத்தி ரண்டாய்ச்
[சொல்லே.

(இ - ள்). சட்சம, மத்திமம், பஞ்சமம், இம்மூன்றிற்கும் நாடிகள் நான்கு நான்காகும; நிஷாதம், காந்தாரம் இவ்விரண்டிற்கும் இரண்டிரண்டாகும் ரிஷபம், தெய்வதத்திற்கும் மூன்று மூன்றாகும். ஆக, நாடிகள் 22 ஆமாறு.

---

47. ச, ரி - மந்த்ரம்; க, ம - மத்திமம்; ப, த, நி, தாரம்.

48. ஸங்கீதரத்னாகரம் (1: 3: 8 - 10) 22 சுருதிகளையே கூறும். அது மேலும் (14 - 16 சுலோகங்கள்) கூறுவது இச்செய்யுளின் பொருளை விளக்குவதாகும் :-

4	சுருதிகளுடன்	ஷட்ஜம்	குறிக்கப்படும்.
3	,,	ரிஷபம்	,,
2	,,	காந்தாரம்	,,
4	,,	மத்யமம்	,,
4	,,	பஞ்சமம்	,,
3	,,	தைவதம்	,,
2	,,	நிஷதம்	,,
22	,,		

இங்கு நாடிகள் என்பது சுருதிகளைக் குறிக்கும்,

சுரங்கங்களின் சுருதி 22 என்பர்

ச

49. சொல்லிய சுரங்க ளேழின் சுதியிரு பத்திரண்டாம்
நல்லசட் சகந்த னகு நாலென்பர் சதியே தென்னில்
வல்லதீ விரகு முத்து வதிமந்த்ர சந்தோ வதி
புல்லுவர் நாம தேயம் புளகித்த தனத்தி னளே.

ரி. க.

50. கருதுமே ரிஷபத் திற்குக் கணக்காகும் நாடி மூன்றும்
சருவந்த யாவ தீரஞ் சனிரக்தி காவாம் பின்னும்
பெருகிய காந்தா ரத்திற் கிரண்டென நாடி பேசும்
பொருரௌத் ரீகு ரோதா வெனும்பெயர் பொருத்த
[மாதே.

(இ - ள்). சட்சத்திற்குத் தீவிர, குமுத்வதி, மந்தா, சந்தோ வதி என நாலும், ரிஷபத்திற்குத் தயாவ்தி, ரஞ்சனி, ரதிகா என மூன்றும், காந்தாரத்திற்குக் காதிரி, குரோதா என இரண்டுமாம் (எ - று).

ம. ப.

51. மத்திம நாடி நான்காம் வஜ்ரீகை யுடன்பி ரீதி
நித்தமார்ச் சனிப்பி ரசார ணீயெனப் புகல்வாய்
[பின்னும்
நத்தபஞ் சமந்த னக்கு நாடிநான் கிரக்தா லாபி
புத்திசேர் க்ஷிதிசந் தீப மாமெனப் புகலு நூலே.

---

49 - 50 ஸங்கீதரத்னகாச் செய்யுள்கள், தமிழ்ச்செய்யுள்களில் கூறப் பெற்ற ஜாதிகளை முன்னே கூறி, இங்கே கூறப் பெற்றவற்றைப் பின்னே அமைக்கும்.

தீவிர-கடுமையானது. குமுத்வதி-அல்லிக்குளம். மந்தர-மெதுவானது சந்தோவதி - சந்தம் நிறைந்தது.

தயாவதி - இரக்கமுள்ளது. ரஞ்சனி - இனிமையானது. ரதிகா - அன்புள்ளது, ரௌத்ரி - பயங்கரமானது. குரோதா - கோபமுள்ளது.

த. நி.

52. வைத மூன்ற தாம தந்திரோ கிணியும் ரம்மியா
நவிலுவர் நிஷாதத் திற்கு நாடிய சுருதியி ரண்டாய்
சுவைகொளு முக்கி ராவுஞ் க்ஷோபினி யெனவே
சாற்றும்
கவலைதீர் சுரத்தி னுடி கணக்கிரு பத்தி ரண்டாம்.

(இ - ள்). மத்திமத்திற்கு வஜ்ரிகா, பிரஸாரணி, பிரீதி, மார்ஜனி, இந்நான்கும்; பஞ்சமத்திற்கு க்ஷிதி, ரக்தா, சந்தீபானி ஆலாபினி இந்நான்கும்; தெய்வத்திற்கு மதந்தி, ரோகிணி, ரம்மியா இம்மூன்றும்; நிஷாதத்திற்கு உக்கிரா, க்ஷோபினி, இவ்விரண்டும் நாடிகளாம். ஆக, சுருதியென்னும நாடி இருபத்திரண்டாம் (எ - று).

---

51 - 52 வஜ்ரிகா - இடி, பிரசாரணி-பரவுவது; ப்ரீதி-மகிழ்ச்சி, மார்ஜனி-துடைப்பது.

க்ஷிதி-பூமி, ரக்தா-பிரயமானது, சந்தீபனி-பிரகாசிப்பது, ஆலாபினி - பாடுவது.

உக்ரா - வலியுள்ளது, க்ஷோபிணி - கலங்குவது.

49 முதல் 54 வரையிலுள்ள செய்யுள்களிலுள்ளவற்றைக் குறிக்கும் அட்டவணை.

	ஸ்வரம்	நாடி	சுருதிப்பெயரும் ஜாதியும்
1.	ஸ	4	தீவ்ரம் [தீப்த]
			குமுத்வதி [ஆயத]
			மந்தர [ம்ருது]
			சந்தோவதி [மத்யா]
2.	ரி	3	தயாவதி [கருணா]
			ரஞ்ஜனி [மத்யா]
			ரதிகா [ம்ருது]
3.	க	2	ரௌத்ரி [தீப்த]
			க்ரோதா [ஆயத]
4.	ம	4	வஜ்ரிகா [தீப்த]
			ப்ரஸாரிணி [ஆயதா]
			ப்ரீதி [ம்ருது]
			மார்ஜநி [மத்யா]

சுரங்கங்களின் நாடி 22க்கு ஜாதி 5

வேறு

53. ஏழுசுர நாடியிருபத் திரண்டிற்
கேற்குமே ஜாதியைந் தாக
அழகிய சட்சந் தனக்காகுந் தீப்தா
வாயதா மிருதுமத் யாரிஷ்பம்
பழகரு ணமத் யாமிர்து காந்தாரந்
தீப்தா வாயதா பரவும்
செழுமத் திமந்தீப்தா வாயதா
மிருதுமத் தியாவெனச் செப்பும்.

(இ - ள்). சட்சமத்திற்கு தீப்தா, ஆயதா, மிருது, மத்தியா; ரிஷபத்திற்குக் கருணு, மத்யா, மிருது; காந்தாரத்திற்குத் தீப்தா ஆயதா; மத்திமத்திற்குத் தீப்தா, ஆயதா, மிருது, மத்தியாவென வாம்.

5.	ப	4	க்ஷிதி [ம்ருது]
			ரக்தா [மத்யா]
			சந்தீபனி [ஆயதா]
			ஆலாபினி [கருணு]
6.	த	3	மதந்தி [கருணு]
			ரோகிணி [ஆயதா]
			ரம்யா [மத்யா]
7.	நி	2	உக்ரா [தீப்தா]
			க்ஷோபுனி [மத்யா]

ஸங்கீதரத்னகரம் (1 : 3 : 26 - 40) மேலே சொன்ன ஜாதி பேதம் விரிவாகக் கூறுகின்றது.

53 - 54 தீப்தா - வலிவுள்ளது: ஆயதா - நீட்டியது. ம்ருது - மென்மை யானது. மத்யா - இடைநிலையிலுள்ளது. கருணு - இரக்கம். 53, 54 செய் யுட்களின் பொருளை விளக்கப் பின்வரும் அட்டவணை பயன் படலாம் :—

ஸ { தீப்தா, ஆயதா, ம்ருது, மத்யா

பஞ்சமம், தெய்வதம், நிஷாதம்

மூன்றுக்கும் ஜாதி

54. பஞ்சமத் திற்கு மிருது மத்யாவா
யதாகரு ணுவெனப் பகரும்
வஞ்சியே கருண வாயதா மத்யா
வாமது தெய்வந் தனக்கு
மஞ்சிய நிஷாதந் தனக்காகுந் தீப்தா
மத்தியா வென்றெழு நூலில்
தஞ்சம தாகுஞ் சாதியைந் தாகச்
சாற்றுமே யெழுசுரந் தனக்கே.

ரி { கருணு, மத்யா, ம்ருது }

க { தீப்தா, ஆயதா, தீப்தா }

ம { ஆயதா, மருது, மத்யா }

ப { ம்ருது, மத்யா, ஆயதா, கருணு }

த { கருணு, ஆயதா, மத்யா }

நி { தீப்தா, மத்யா }

(இ - ள்). பஞ்சமத்திற்கு மிருது, மத்தியா, ஆயதா, கருணை என்றும்; தைவதந்தனைக்குக் கருணை, ஆயதா, மத்தியா என்றும்; நிஷாதத்திற்குத் தீப்தா, மத்யா என்றும் ஆம் என்றவாறு.

சுரங்களின் நாடிக்கூற்றைப் பற்றிய விதி

55. இதயமந் திரமாதி கண்டமத் திமம்வரையி
விருபத் திரண்டு நாடி
யியல்பான பேதங்க ளுள்ளதா மிச்சுரத்
தின்னு டிதனி லகப்பட்
டுதயமாம் வாயுவா லடிபட் டதன்மீதி
லுதித்த ரோத்தர மாகவே
யுற்றசுர மிருபத் திரண்டாகி யிவ்வண்ண
முயர்கண்ட மத்தி மத்திற்

முன்னே சொல்லப்பெற்றவைகளைக்கொண்டு ஜாதிகளுக்குரிய சரங்களைப் பின் வருமாறு அமைத்துக்காட்டலாம்.

தீப்தா:
- ஸ தீவ்ர
- க ரௌத்ரி
- ம வஜ்ரிகா
- நி உக்ரா

ஆயதா:
- ஸ குமுத்வதி
- க க்ரோதா
- ம ப்ரஸாரணி
- ப சந்தீபனி
- த ரோகிணி

ம்ருது:
- ஸ மந்தா
- ரி ரதிகா
- ம ப்ரீதா
- ப க்ஷிதி

மத்யா:
- ஸ சந்தோவதி
- ரி ரஞ்சினி
- ம மார்ஜனி
- ப ரக்தா
- த ரம்யா
- நி க்ஷோபினி

கருணை:
- ரி தயாவதி
- ப ஆலாபினி
- த மதந்தி

சதியிலா விருபத் திரண்டாகி யேசிரஸ்
தானமிரு பத்தி ரண்டாய்
தனிமையில் லாதசட் சாதிச்சு ரங்களிற்
றங்கு தொனிபே தங்களே
விதியான வறுபத்தி யாறுபே தங்களாய்
விபரீ மாய்முறை தெரிந்தே
விண்டனர்கள் பண்டிலகு நூலினை யறிந்தவர்கள்
மேதினி யுளோர்க ளறியவே.

(இ - ள்). இதய மந்தரமாதியாகக் கண்டமத்திமம் வரையில் 22 நாடியும் வாயுவாலடிபட்டுக் கண்டமத்திமத்தில் 22 நாடியும், சிரஸ்தானத்தில் அந்த 22 நாடியுஞ் சேர்த்து ஆக 66 நாடி பேதங்களாகுமென்று சோமநூதிய மென்னும் இரத்நாகரத்திற் சொல்லப்பட்டிருக்கிறது.

நாடிப்பிரஸ்தாரம் 66

56. மந்தரமந்தர மந்தரமத்ய மந்தரதார கம்மத்ய
மந்தரமத்ய மத்யமத்ய தாரகமாம்—இந்தவகை
தாரகமந்த ரந்தாரக மத்யதா ரதாரம்
சாரறுபத் தாறு பேதம்.

(இ - ள்). மந்தரமந்த்ரம், மந்தரமத்யம்; மந்தரதாரம்; மத்ய மந்தரம், மத்ய மத்யம், மத்யதாரம்; தார மந்தரம், தாரக மத்யம், தாரகதாரம் என்ற வகைகளாகவும் மேற்கூறிய 66 பேதங்களை வகைப்படுத்தலாம் (எ - று).

---

55. இம்மூன்று பகுதிகளை முன்பே 46 ஆம் செய்யுளில் மந்தர, மத்ய தார என்ற பெயர்களுடன் குறிப்பிட்டனர். இங்கு ஒவ்வொன்றிலும் உண்டாகும் சுருதிகளின் தொகையைக் கூறினர்.

ஸங்கீதரத்னாகரம் 1: 3: 7 ஐயும், இராகவிபோதம் 1: 12 ஐயும் காண்க.

56. ஸ்வரப்ரஸ்தாரத்தைப் பற்றி ஸங்கீதரத்னாகரம் வர்ணாலங்காரப்ர கரணம் சுலோகங்கள் 31 முதலியன கூறுகின்றன.

இங்குச் சொல்லப்பட்டது நாடிப்பிரஸ்தாரவகைகளாம்.

சுரங்களின் கணிதம்

57. வருமே காம்ப ரமேசட்
சமற்றூறு சுரங்கள் தம்மில்
தருசுர மொவ்வொன் றிற்குஞ்
சட்சமெத் தனையா மென்னில்
அருள்சட் சமிரண்டு கொண்டா
லதுசுத்த ரிஷப மாகும்
இருரெண் டுசட்சங் கொண்டா
விதுசது ரிஷப மென்னே.

(இ - ள்). சட்சம் (1) ஏகாம்பரம் (2) சுத்தரிஷபம். (4) சதுரிஷபம்; அது சுத்தகாந்தாரம்.

சுரங்களின் கணிதம்

58. காணது வாகும் சுத்த காந்தாரஞ் சட்ச மாறும்
தானது வாக நின்ற சட்சுதி ரிஷப மாகும்
சாணென வதுவே யாகுஞ் சாதா ரணகாந் தாரம்
ஆனசட்ச மெட்ட தாகி வந்தரகாந் தார மாமே.

(இ - ள்). 6 சட்சுதிரிஷபம்; அது சாதாரண காந்தாரம்; 8 அந்தர காந்தாரமாம் (எ - று).

59. வளர்சட்சம் பத்துக் கொண்டால் மத்திம சுரம தாகும்
பிளவுசுட் சம்மீ ராறேல் பிரிதி மம்பன் ஞன்கில்
அளவுபஞ் சமாம்பத் தோடா றுகிற் சுத்த தைவம்
தளிர்கொளும் பதினெட் டாகிற் சதுச்சுதி தெய்வ
[மாமே.

(இ - ள்). சட்சம் பத்துக்கொண்டது சுத்தமத்திமம்; சட்சம் 12 கொண்டது பிரிதி மத்திமம்; சட்சம் 14 கொண்டது பஞ்சமம்; சட்சம் 16 கொண்டது சுத்ததைவதம்; சட்சம் 18 கொண்டது சதுச்ருதி தைய்வதம் - அது சுத்த நிஷாதமாம் (எ - று).


60. அதுசுத்த நிஷாத மாகும் அச்சட்ச மிருப தாகில்
சதுருடன் ஓது கின்ற சட்சுதி தெய்வ மென்பர்
கதிகொளு மதனே யோதுங் கைசிகை நிஷாத மென்ன
விதுவிரு பத்தி ரண்டேல் காகலி நிஷாத மென்பர்

(இ - ள்.) மேற்சொல்லிய சட்சம் 18 கொண்டது சதுச்சுதி தெய்வத்தைச் சுத்த நிஷாதமெனவு முரைப்பர். அந்தச் சட்சம் 20 ஆகில், சட்சுதி தெய்வதமென்றும் கைசிகை நிஷாதமென்றும்; சட்சமம் 22 ஆகில் காகலி நிஷாதமென்றும் சொல்லுவர் (எ - று).

கணிதத்தின் தொகை

61. முந்துரை கணிதம் நூற்று முப்பத்து மூன்று சட்சம்
வந்ததை ரிஷபந் தொட்டு நிஷாதமெட் டாமீ ரெட்டிற்
கீந்திட வினமொன் றிற்கு மெட்டேகால் வீச மென்று
அந்தமா நூலை யாய்ந்தோ ரறைந்தனர் முறை தெரிந்தே.

எ - து. ச. ப. 2. ரி. 3. க. 3. ம. 2. த. 3. நி, 3. ஆக 16 வீடு.



1. சட்சம்
2. சுத்தரிஷபம்
3. சதுசுதிரிஷபம்
4. சட்சுதிரிஷபம்
5. சுத்த காந்தாரம்
6. சாதாரண காந்தாரம்
7. சுந்தர காந்தாரம்
8. சுத்த மத்திமம்
9. பிரதிமத்திமம்
10. பஞ்சமம்
11. சுத்ததைவதம்
12. சதுசுதி தைவதம்
13. ஷட்சுதி தைவதம்
14. சுத்தநிஷாதம்
15. கைசிக நிஷாதம்
16. காகலி நிஷாதம்

இந்த 16 விடுகளுக்கும் 133 சுரத்தைக் கொடுக்க ஒரு வீட்டுக்கு $\frac{5}{16}$ (அவக) சுரமாகும். இதன் விபரம் குருமுகமாய்த் தெரிந்து கொள்க.

சுரங்களின் தசவித கமகம்

62. பொருமா ரோக மவரோக ணம்டால்புரி தங்கம் பிதமும்
தருமாக தம்பி ரத்தி யாகதந் திரிபுச் சஞ்சார்
மருவுமாந் தோளமூர்ச்ச ஞதியா வருமிப் பத்தும்
சரமிகர் விழியி ஞளே தசவித கமக மென்பர்.

(இ - ள்). ஆரோகணம், அவரோகணம், டால், ஸ்புரிதம், கம்பிதம், ஆகதம், பிரத்தியாகதம், திரிபுச்சம், அந்தோளம், மூர்ச்சனு இவை பத்தும் கமகமாம் (எ - று).

தசவித கமகங்களின் சுரங்கள்

63. சரிகம பதநி யென்ப ராரோகம் சநித பம
கரிசவா மவரோகம் டால்காண் சபசமச கவாம்
புரிதமே சச, ரிரி, கக, மம, வாம்கம் பிதமா கும்பா
சுரமது பப, பப, பவ்வாயச் சொல்லுவ ரிவற்றின்
[மேலே.

64. ஆகதம்ச ரிரிக காமபச சரிரிக காம
தகுபிரத் தியாகதஞ் சசாநி தத பபவ்வே சாற்றும்
திகழ்சச சரி ரிகா கதிரிபுச் சமாந் தோளந்தான்
மிகுசரி பாப மூர்ச்சை சரிகம பதநி விள்ளே.

---

57 - 61. இச்செய்யுள்களில் கூறப்பட்ட சுரகணிதத்தில் 16 வீடுகளும் அவற்றிற்கு 133 சுரங்களும் கொடுக்கப்பட்டு ஒவ்வொரு வீட்டுக்கும் பாகம் காட்டப்பட்டுள்ளது. இவற்றுள் 16 வீடுகளும் சரியே, ஆனல் சுரங்களின் தொகையும் அவற்றை வகுத்த ஈவும் விளங்கவில்லை. ஷட் ஸ்வரஸ்தானங்களுக்குச் சுருதிகளை பங்கிட்டிருப்பதும் முரண்பாடாயிருக்கிறது. உதாரணமாக சுத்தரிஷபத்துக்கு 2 சுருதி முதலியன. இன்னும் $1+2+4+6+8+10+12+14+16+18+20=133$ சுருதிகள் என்று கூறுவதும் விளங்கவில்லை. பின் ஆராய்ச்சிகளால் விளங்கக்கூடும் என்பதற்காக மூலத்தில் உள்ளபடி அச்சிடப்பட்டுள்ளது.

(இ - ள்) கமகத்தின் சுரங்களாவன :—

1.	ஆரோகணம்	:	ச ரி க ம ப த நி ச
2.	அவரோகணம்	:	ச நி த ப ம் க ரி ச
3.	டால்	:	சப சம சக
4.	ஸ்புரிதம்	:	சச ரிரி கக மம (இது, தந்தியைச் சற்ற சைத்தல்)
5.	கம்பிதம்	:	பாப பபப (இது சுரஸ்தானத்தில் நிற் பது)
6.	ஆகதம்	:	சரி ரிக கம் மப
7.	பிரத்யாகதம்	:	ஸநி நித தப பம
8.	திரிபுச்சம்	:	சசச ரிரிரி ககக
9.	அந்தோளம்	:	சரி பாப
10.	மூர்ச்சை	:	சரிகமபதநி ரிகம்பதநிச ஆக, கமகத்தின் பத்துச் சுரங்களுமாம்.

சுரங்கங்களின் ஷட்பேதம்

65. அற்சிகஞ் சட்சம் காதிகம் சரியா
மணிகொளும் சரிகசா மிகமாம்
வற்சமில் சரிகமச் சுராந்த மதர்ம
வளர்சரி கமபவெள டவமாம்
தற்செய லான சரிகம பதவாம்
ஷாடவ மெனச்சொலும் நூலில்
குற்சர தேயத் தழகிய மாதே
கூறுஷட் பேதம தென்றே.

---

61 - 64 செய்யுள்கள் கமகங்களைப் பற்றிக்கூறுகின்றன.

ஸங்கீதரத்னகரம் பிரகீரணகாத்யாயத்தில் சுலோகங்கள் 87 - 96 வரையில் கமகங்களைக் கூறுகின்றன. அங்குக் ‘ கமகம் ’ என்பது, ஸ்வரங்களின் அலைவு; கேட்பவர்களின் மனத்திற்கு இன்பமூட்டுவது’. என்றும், கமகங்கள் 15 விதப்படும் என்றும், அவை, (1) திரிபம் (2) ஸ்புரிதம் (3) கம்பிதம் (4) லீணம் (5) ஆந்தோலிதம் (6) வளி, (7) த்ரி பின்னம், (8) குருளம், (9) ஆஹதம், (10) உல்லாஸிதம், (11) ப்லாவிதம், (12) கும்பிதம், (13) முத்ரிதம், (14) நாமிதம், (15) மிச்ரிதம் என்பன. என்றும் கூறப்பட்டுள்ளன,

(இ - ள்). அற்சிகம் ச, காதிகம் சரி, சாமிகம் ச, ரி, க, சுராந்தம் ச, ரி, க, ம. ஔடவம் ச, ரி, க, ம, ப, ஷாடவம் ச, ரி, க, ம, பத, ஆம் (எ - று).

மேற்சொன்ன ஷட்பேதங்களின் விவரம்

நிஷாதம் தைவதம் பஞ்சமம் மத்திமம் காந்தாரம் ரிஷபம் நீங்கியது
நிஷாதம் தைவதம் பஞ்சமம் மத்திமம் காந்தாரம் நீங்கியது
நிஷாதம் தைவதம் பஞ்சமம் மத்திமம் நீங்கியது
நிஷாதம் தைவதம் பஞ்சமம் நீங்கியது
நிஷாதம் தைவதம் நீங்கியது
நிஷாதம் நீங்கியது

முறையே ஒவ்வொரு சுரம் நீக்கிப் பாடலும் இவைகளில் நிஷாதம், தைவதம் நீக்கி ஐந்து சுரங்களுடன் பாடுவதும் ஆம்.

6 சுரங்கள்	வர்ச்சிக்கப்பட்டதற்கு	ஆற்சிகம்	என்று பெயர்
5 சுரங்கள்	வர்ச்சிக்கப்பட்டதற்கு	காதிகம்	என்று பெயர்
4 சுரங்கள்	வர்ச்சிக்கப்பட்டதற்கு	சாமிகம்	என்று பெயர்
3 சுரங்கள்	வர்ச்சிக்கப்பட்டதற்கு	சுராந்தம்	என்று பெயர்
2 சுரங்கள்	வர்ச்சிக்கப்பட்டதற்கு	ஔடவம்	என்று பெயர்
1 சுரம்	வர்ச்சிக்கப்பட்டதற்கு	ஷாடவம்	என்று பெயராகும்

என்றவாறு.

---

65. மேற்சொன்னவற்றை விளக்கும் சக்கரம்.

1	ச	நி த ப ம க ரி நீங்கியது	6 ஆற்சிகம்
2	ச ரி	நி த ப ம க நீங்கியது	5 காதிகம்
3	ச ரி க	நி த ப ம நீங்கியது	4 சாமிகம்
4	சரிகம	நி த ப நீங்கியது	3 சுராந்தம்
5	சரிகமப	நி த நீங்கியது	2 ஔடவம்
6	சரிகமபத	நி நீ நீங்கியது	1 ஷாடவம்

ஸங்கீரத்னகரம் 1: 4: 37 - 43 வரையிலுள்ள சுலோகங்களைப் பார்க்க ஏழு ஸ்வரங்களையும் கொண்டது பூர்ணம் ஆகும். இது இங்குக் கூறப்படவில்லை. மற்றும் இப்பேதங்கள் தானம் அல்லது சுரப் பிரஸ்தாரங்களை விளக்குவதற்காக அமைந்தவை. இப்பனும் இங்குக் குறிப்பிடவில்லை.

சுரங்கங்களின் சுருதி

அகஸ்தியர் மதம்

66. சொல்லிய வேழு சுரத்துக்குச் சுதியாய்த்
துலங்குவ தீரொன்ப தாகப்
புல்லுமே நாபி காவதர் வணிதஸ்
தாயியாச் சட்சம் புகலும்
மெல்லிதா மௌரவிய வதிரிஷபம் மேவு
கம்பிளி ஸ்ரீவி காவும்
வல்லதாஞ் சரளிநா ழிகாந் தாரம்
மருவிய சுதிகளா மற்றும்

(இ - ள்). சட்சந்திற்கு நாபிகா; அதர்வணி; தஸ்தாயி (3) ரிஷபந்திற்கு மௌரவி (4); அவதி (5). காந்நாரத்திற்குக் கம்பிளி (6); ஸ்ரீவிகா (7); சரளி (8); நாழி (9) ம்,

67. மருவிய ரசனி ரஞ்சனி
மத்யமாம் குரூணிப்பனி மந்தா
வுருவதாம் பஞ்சமத்திற் குச்சுரு
தியுற்றிடும் தைவதச் சுதியே
கருதியே மௌர்த்தாவி கதியதென் னக்கதி
கொளும் நிஷாதத்தின் சுதியே
தருமது பக்ஷனி ஸ்புரந்திய தென்றே
சாற்றுமிச் சுதிகளின் பேரே.

(இ - ள்). மத்திமந்திற்கு ரசனி (10) ரஞ்சனி (11); பஞ்சமத்திற்குக் குரூணி (12) பபனி (13); மந்தா (14); தெய்வதத்திற்குப் மௌர்த்தா (15) விகதி (16); நிஷாதத்திற்கு பக்ஷணி (17); ஸ்புரந்தி 18.

ஆகச் சுரங்கள் 18 என்றவாறு.

சுருதிகளின் அதி -தேவதை

68. நிறைந்திடு மான்மா நடுவினிற் பிராண
னின்றிடு மிதினடு சுரத்தின்
திறைகொளுந் தொனியா மத்தொனி நடுவே
திரம்பெறும் நாதமே துலங்கும்

---

66 - 67 இவற்றின் விவரம் விளங்கவில்லை.

கறைகொளந் நாத நடுவினி லுளகாள்
 கர்த்தனு மீச்சுர னிலையாம்
துறைகொளும் பிராணன் சுரத்தொனி நாதம்
 துலங்குமிவ் வாறெனக் கூறே.

(இ - ள்). ஆத்மா மத்தியில் பிராணவாயுவும், அப்பிராணவாயு மத்தியில் சுரத்தொனியும், அச்சுரத்தொனி மத்தியில் நாதமும், அந்நாதத்தின் மத்தியில் உலகநாயகனுகிய ஈசுவரனும் ஆம். (எ - று).

சுரங்களின் தசவித கமகங்களின் பெயர்.

69. தாயிஸ் தாயிச் சுரஞ்சஞ் சாரியா கதத்தி னேடே
ஈயும் பிரத்தியா கதங்கம் பிதமிடை டாலு வுகரம்
சாயையா முக்த மென்றே தசவித கமக மான
தூயநற் சுரங்க ளின்பேர் சொல்லுதும் விபரம் கேளே.

(இ - ள்). ஸ்தாயி 1. ஸ்தாயிசுரம் 2. சஞ்சாரி 3. ஆகதம் 4. பிரத்தியாகதம் 5. கம்பிதம் 6. இடை 7. டால் 8. உக்கிரம் 9. முக்தா 10 ஆம் (எ - று).

தசவித கமகங்களின்படி வரும் சுரங்களின் பெயர்கள்

70. இதுமுதல் மந்தர மாதி யெடுத்திடு சுரங்கள் ஸ்தாயி
சதுர்தார காதி கொண்டால் ஸ்தாயிச் சுரங்க ளாகும்
கதிமந்தர மத்தியந் தார கச்சுரம் விளங்கப் பேசி
லதுசஞ்சா ரியதா மென்றே யாகுமிப் பேர்கள் மானே.

71. மனுமந்தர மத்ய தார கம்வெவ்வே ருகப் பேசிற்
சினையாக தந்தி ரும்பத் திரும்பவ ரோகம் பேசிற்
கனப்பிரத்யா கதமாம் மந்தரம் மத்யதா ரங்க டம்மை
இனமுள கமகம் பேசிற் கம்பித மாகு மின்னே.

72. சுரநிலை யாக மூன்று தானத்துந் துலங்கச் செய்யில்
வருமிடை வேகத் தோடு நிலையாக வளர்சு ரங்கள்
திரிஸ்தா னங்களிலே பேசில் டாலென்பர் சீர தாக
ஒரு மத் தியமாதி யாகச் சுரங்கொளி லுக்கிர மாமே.

---

69. 62 ஆம் செய்யுள் இதே தலைப்புடன் இருக்கிறது. ஆனல் விஷயம் சிறிது வெவ்வேறே.

73. தகுசுர மிவற்றிற் கேழுக் தாயியாய் விளங்கச் செய்யில்
வகைகொளு முக்த மென்ன வழுத்தினன் சோம நாதன்
தகைகொண்டு மிவ்வா ரூகத் தசவித கமகத் திற்கும்
சுகமுள சுரங்கள் தன்னைச் சொன்னதை யறிந்து
[கூறே.

(இ - ள்), 69 முதல் 73 வரை பாட்டுக்களின் உரை.

தசவித கம்கம் 10க்கும் சுரங்களின் விபரம்.

முன்சொன்ன ஆரோகணம் ஸ்தாயி (1), அவரோகணம் ஸ்தாயி சுரம் (1), ஸ்புரிதம் சஞ்சாரியாம் (3), ஆகதம் சுரம் வெவ்வேருகப் பேசில் ஆகதமாம் (4); ஆகதம் அவரோகணமாக வரில் அது பிரத்தியாகதம் (5); ஷை சுரங்களைக் கமகமாகப் பிடித்துப் பாடுவது கம்பிதம் (6); சுரங்கங்களைத் திரிபுச்சமாகச் சங்கடப்படப் பாடுவது இடை (7); ஷை சுரங்கள் முன் சொன்ன டாலாகில் டாலாகும் (8); சுரங்கள் மத்திமமாகப் பாடுவது உக்கிரம் (9); ஷை சுரங்களை மூர்ச்சனையாக முத்தாயிப்பது முக்தம் எனப்பெயராகும் (10)

ஆகப் பத்தும் தசவித கமகத்தின் வழியாம் என்றவாறு.

தசவித கமக சுரங்களின் குணங்களின் பெயர்கள்

74. தசவித கமகங் கட்குஞ் சுரகுணம் பேர்கள் சாற்றும்
சுசிவியக் தமுடன் பூர்ணம் சுகுமார மலங்கி ருதத்தோ
டசமம்சு ரக்தம் ஸிலக்ஷணம் நிக்ரிஷ்ட மதுர மற்றும்
பிசகாத பிரசன் னப்பி ரகடன மென்னும் பேரே.

(இ - ள்). எ - து. வியக்தம், பூரணம், சுகுமாரம், அலங்கிருதம், சமம், சுரக்தம், ஸில்க்ஷணம், நிக்ரிஷ்டம், மதுரம், பிரசன்னப் பிரகடன் இப்பத்தும் குணங்களின் பெயர்களாம் என்றவாறு.

---

70 - 73 சோமநாதர் இயற்றிய இராகவிபோதத்தில் இவ்விவரங்கள் இல்லை.

74. இவை கான குணங்களேயாம்.

பத்துக்குணங்களின் விபரம்

75. இப்பத்துக் குணங்க ளான வியல்பினை விளம்பக்
கேண்மோ
தப்பிலாச் சுரத்தினலே பதங்களிற் ப்ரகிரு திப்பி
[ரத்தியம்
ஒப்புமென் பதுவாம் வியக்த மோதிய கானந் தன்னில்
செப்பிய சுரங்கள் பூர்ண மென்பது பூர்ணந் தேறே.

76. தூயசா ரீர மாகிற் சுகுமார மென்ன லாகும்
பாயுமந் தரமத் யந்தா ரகந்தனைப் பரவி நிற்றல்
நேயவ லங்கிருதப் பேர்நி கழ்ச மாக்ஷரத் தாலேயு
பாய லயஸ்தா னமுண் டாதலே சமமா கும்பாரே.

77. வீணையும் வேணு நாக சுரங்காத் திரச்சு திப்பிர
மாணத்தின் சுரமொன் ரூகிற் சுரக்தமா மேறத் தாள
வாணவ திருத மத்யம் விளப்பத்திற் புதிதா குஞ்சீர்
தோணுஞ்சி விக்ஷிணப்பேர் சொல்லுவர் பரத நூலிற்
[றேர்ந்தே

78. சாரீரம் பின்னம் பேசில் நிக்ருஷ்ட மெனவே சாற்றும்
சீரான சாரீ ரத்தால் ஜீவாள சுரமாய்ப் பாடில்
ஊரிய மதுர மாமுன் னுரைத்தகா னச்சு ரங்கள்
பேராகும் பூர்ண மாகில் பிரகடனம் பிரசன்ன மாமே

---

1. வியக்தம் : பதங்கள் முதலிய கீர்த்தனைக்காம் சுரத்தின் பிரகிருதிப் பிரத்யத்தினலே பாடுவது.

2. பூரணம் : பதங்களைச் சுரம் சம்பூரணமாகப் பிசகாமற் பாடுவது.

3. சுகுமாரம் : ஷை பதங்கள் முதலியவைகளைச் சாரீர தருமம் காதுக்கு இதமாகப் பாடுவது.

4. அலங்கிருதம் : ஷை பதங்களை மந்தர, மத்திம, தாரகம் பரவப் பாடுவது.

5. சமம் : ஷை பதங்களைத் தான லயம் விடாமற் பாடுவது

6. சுரக்தம் : ஷை பதங்களைத் வீணை, வேணு, நாகசுரம் முதலிய வாத்தியங்களினால் வாசித்துப் பாடிக் காட்டுவது,

7. சிலக்ஷணம் : ஷை பதங்களை விளம்பரம், மத்திமம், துருதத்தோடு பாடிக் காட்டுவது.

8. நிக்ருஷ்டம் : ஷை பதங்களைச் சாரீர தருமமில்லாமற் பாடுவது.

9. மதுரம் : ஷை பதங்களைச் சீரான சாரீரத்தோடு ஜீவான சுரமாய்ப் பாடுவது.

10. பிரகடனம் : ஷை பதங்களை முன்சொன்ன பூரணமாகப் பாடுவதுமாம் என்றவாறு.

தோஷப் பெயர்கள்

79. தசவித கமகங் கட்கும் சுரதோஷப் பேர்கள் சாற்றும்
விசைதிருஷ் டமசா ஸ்த்ரம் சுதிவிரோ தம்கா
[லவிரோதம்
கசிபுன ருக்தி பாஹியம் கதக்கிரம மபார்த்தத் தோடே
நிசகடி னம்ர சந்திக் தம்மென நேர்ந்து கூறே.

(எ - து). திருஷ்டம் ; (துஷ்டம்) அசாஸ்திரம் ; சுதிவிரோதம் ; காலவிரோதம் ; புனருக்தி ; பாஹியம் ; கதக்கிரமம் ; அபார்த்தம் ; கடினம் ; ரசஞ்திக்தம் ஆகப்பத்துமாம் (எ - று).

சுரங்களின் தோஷங்களின் விபரம்

80. தழாச்சுரம் பாடிற் றிருஷ்டம
சாஸ்திர ஹீனம் பேசில்
விழையும் சாஸ்திர மொவ்வொரு
சுதிவி ரோத மென்னல்

---

75 - 78. இங்குப் பதங்கள் என்றவை தேவையற்றவை. இவை கான குணங்கள் இவற்றுள் நிக்ருஷ்டம் என்ற தோஷம் சேரவேண்டியதில்லை நிஷ்கரிஷம் என்றிருத்தல் தகும். அதன்பொருள் நிச்சயத்தோடு பாடுதல். சுரக்தம் என்பது எல்லாவாத்யங்களும் சேர்ந்தாலும், வெவ்வேறாகக் காட்டாமல் ஒன்று போல் காட்டுவது.

80. இவை கானதோஷங்கள்.

கழைசுதி விரோத மேலய
விரோதங் காலவி ரோதமாம்
புழையா ரோகத் திலேயவ
ரோகமெனப் புனருக் திக்கே.

81. தானமச மந்தத் தாலுள்ள துபாகியஞ் சாற்றும்
ஈனமாய்ச் சுரங்கள் விட்டா லென்பது கதக்கிரமந்தான்
ஊனமா மர்த்த ஹீன மென்பத பார்த்த மோதும்
கானபின் னச்சு திக்குக் கடினம தென்ப தாமே.

(இ - ள்). 1. திருஷ்டம் — அபசுரமாகப் பாடுவது
2. அசாஸ்திரம் — சாஸ்திரஹீனமாகப் பாடுவது.
3. சுதிவிரோதம் — சுதியை விட்டுப் பாடுவது.
4. காலவிரோதம் — தாளம் விட்டுப் பாடுவது அல்லது ராகங்களை வேளை தப்பிப் பாடுவது.
5. புனருக்தி — பாடினதையே பாடுவது.
6. பாஹிகம் — அஸம்பந்தமாய்ப் பாடுவது
7. கதக்கிரமம் — சுரம்விட்டுப் பாடுவது; க்ரமம் தவறிப் பாடுவது.
8. அபார்த்தம் — அர்த்த ஹீனமாகப் பாடுவது.
9. கடினம் — கான பின்னமாகப் பாடுவது; காதுக்கு இனிமை இல்லாமல் இரும்புக் கடலையை கடிப்பது போல் பாடுவது.
10. ரஸந்திகம் — பாவமில்லாமல் ரஸம் உண்டாகாமல் பாடுவது.

கிராமம், மூர்ச்சை, தானங்களின் விதி

82. சுரக்கூட்டம் கிராம மென்றுஞ்
சுரராகி மூர்ச்சை யென்றும்
இருவகை யாஞ்சு ரத்திற்
கிருபத்தோர் மூர்ச்சை யென்றும்

?

தருமூன்று கிராம மென்றும்
தானநாற் பத்து வொன்பான்
சுரமண்ட லத்திவ் வாறு
சொன்னதை யறிந்து கூறே.

---

82. இது முதல் சொல்லப்படும் செய்திகள் ஸங்கீதரத்னாகரம் முதல் அத்யாயம் 4 ஆவது பிரகரணத்தின் விஷயமாகும்.

க்ராமத்திற்கு ஆதாரஸ்வரங்களினால் மூர்ச்சனையுண்டாகியது. மூர்ச்சனைகளுக்கு ஆதாரமாயிருக்கிற ஸ்வரங்களின் தொகுதியே கிராமம் ஆகும். (ச-ர. I : 4 : 9) ஒரு ஸ்வரக்கூட்டம் க்ராமமெனப்படும்.

ஸப்த சுவரங்களின் ஏறுவரிசையும் இறங்கு வரிசையும் கொண்டது மூர்ச்சனையாகும் (ச - ர, I: 4: 9.)

தானம் : ஷாடவ ஔடவங்களால் மாற்றப்பட்ட சுத்த மூர்ச்சனைகளே தானங்களாகும் (ச - ர. I: 4: 27).

தமிழ்ச்செய்யுளில் 'சுரராகி' என்பதன் பொருள் சரியாகத் தெரியவில்லை. இச்செய்யுளில் கிராமம் மூன்றென்று கூறப்பட்டிருக்கிறது. ஸங்கீதரத்னாகரம் ஷட்ஜக்ராமம், மத்யக்ராமம், என்ற இரண்டே உலகத்தில் தங்கியுள்ளனவென்றும், மூன்றாவதான காந்தாரக்ராமம் இவ்வுலகத்தை விட்டு மேலுலகுக்குச் சென்றுவிட்டதென்றும் கூறுகிறது.

கிராமங்கள் மூன்று என்றதற்கேற்ப, $7 \times 3 = 21$ மூர்ச்சைகள் என்றது உண்மையே. ஆனால் இரண்டு கிராமங்கள் என்று கொண்டால் இவ்வெண் $7 \times 2 = 14$ என்றாகும்.

இச்செய்யுளின் தானங்கள் 49 என்று கூறப்பட்டுள்ளன. ஆனால் ஸங்கீதரத்னாகரத்தில் (4: 29 - 31) 49 ஷாடவங்களும், 35 ஔடவங்களும் சேர்ந்து மொத்தம் தானம் 84 என்று கூறும். இராகவிபோதம் (I: 44.) சுத்த தானங்களின் ஸங்கியை 49 என்றே கூறும்.

83. ஆரோக மவரோ கஞ்சேர்ந்
ததுமூர்ச்சை யர்மிம் மூர்ச்சை
மாறியே யேழு வீதம்
மந்தரத் திற்கு மத்தியம்
தாரகந் தனக்குஞ் சேர்க்க
விருபத்தோர் மூர்ச்சை சோம
னுரியன் மதத்தி லீதை
நவின்றன ரறிந்து கொள்ளே.

(இ - ள்). சுரக்கூட்டமென்பது கிராமம்; மூர்ச்சையென்பது சுரராகி. இவ்விருவகைச் சுரத்திற்கும் மூர்ச்சை 21 ; கிராமம் 3 ; தானம் 49 ஆம் (எ - று)

மூர்ச்சை 21-ல் சட்சம கிராம மூர்ச்சை 7

84. ஆமந்திரா ரஜனி யுத்த ராசுத்த நச்சரீயும்
நேமமாம் மசுவச் சாந்தம் நிகழபி ருத்த தாவும்
சேமமாஞ் சட்சமத்தின் மூர்ச்சையின் பேர்கள் செப்பும்
சோமனேர் முகத்தி னுளே துலங்கிய நூலிற் றுனே.

(இ - ள்). (1) மந்திரா, (2) ரஜனி, (3) உத்தரா, (4) சுத்தா, (5) நச்சரீ, (6) அசுவச்சாந்தம், (7) அபிருத்ததா என ஏழும் சட்சம க்ராம மூர்ச்சைகளாம்

மத்திம கிராம மூர்ச்சை 7

85. அரிணிக லுபன யிச்சா வேரியாஞ் சுத்த மத்தியா
பரவிய மார்த விப்பா ரளிஹிரு ஷிகிய தென்ன
மருவுமிவ் வேழு மத்தி மக்கிரா மத்தின் மூர்ச்சை
குருபெய ராகு மென்று கூறினர் நூல்வல் லோரே.

---

83. இச்செய்புள் மூர்ச்சையின் தொகையை விரித்துக் கூறுகிறது. சோமனார்யன் கூறியதென்றது இராகவிபோகம் I: 42 ஆவது சுலோகம்.

84. இச்செய்புள் ஷட்ஜக்ராமத்தின் மூர்ச்சைகளை விளக்குவதாகும், இவற்றை ஸங்கீதரத்னாகரம் (I: 4: 23) பின்வருமாறு அமைக்கும் :—

(1) உத்ரவர்ணம், (7) அபிருத்கதா, (6) அச்வக்ராந்தா, (5) ஸௌவீரி, (4) ஹ்ருஷ்பகா, (3) உத்தராயதா, (2) ரஜநீ.

(இ - ள்). அரிணி, கலுபனயி, சாவேரி, சுத்த மத்தியா, மார்தலி, பாரளி, ஹிருஷிகிய என ஏழும் மத்திம மூர்ச்சைகளாம்.

காந்தார மூர்ச்சை 7

86. துலங்குவி சாலம் நந்தஞ் சுமுகுசித்தி ராவித னேடே
நலசித்திர ரவதி சுக்கா வாலாபா நவிலு மேழும்
பிலமாங் காந்தார மூர்ச்சைப் பேர்களீ தெழுசு ரத்திற்
கிலகுமுக் கிராமத் திற்கு மிருபத்தோர் மூர்ச்சை யாமே.

(இ - ள்). (1) விசால, (2) நந்த, (3) சுமுகி, (4) சித்திரா, (5) சித்திரவதி (6) சுக்கா, (2) ஆலாபா என ஏழும காந்தாரமூர்ச்சைகளாம்.

மூர்ச்சனைகளின் இலக்ஷணம்

கிராமம் மூன்றுக்கும் பெயர்.

87. ஆரோக மவரோ கஞ்சேர்ந் ததுசட்சக் கிராம மாகும்
சாரும பதநி சரிக மத்திமக் கிராமஞ் சாற்றும்
காரிய கதரி பாச மநிகாந் தாரக்கி ராமம்
தேருமிம் மூன்று கிராமம் செப்பினர் மூர்ச்சைக்
[கென்றே.

(இ - ள்.)

சட்சக்ராமம்	சரிகமபதநி
மத்திமக்ராமம்	மபதநிசரிக
காந்தாரக்ராமம்	கதரிபசமநி

இவை மூன்று கிராமங்களின் பெயர்களாம்.

---

85. இச்செய்யுள் மத்திமக்ராம மூர்ச்சைகளின் பெயர்களைக் கூறுவதாகும். இவற்றை ஸங்கீதரத்னாகரம் கூறும் முறையாவது (1: 4: 25) ஆப்யாயநீ, விச்வக்ருதா, சந்த்ரா, ஹேமா, கபர்தனி, மைத்ரி, சாந்த்ரமஸீ இப்பெயர்கள் தமிழ்ச் செய்யுளில் காணப்பெறவில்லை.

86. காந்தாரா மூர்ச்சைக்கு ஸங்கீதரத்னாகரம் கொடுக்கும் பெயர்களாவன :—

(2) நந்தா, (1) விசலா, (3) ஸுமுகீ, (4) சித்ரா, (5) சித்ராவதீ (6) ஸுகா, (7) ஆலாபா (ச - ர. 1: 4: 25 - 26)

சட்ச கிராம மண்டல லக்ஷணம்

88. வருமிது சட்ச கிராம மண்டல மூர்ச்சை யேழில்
சரிகம பதநி யொன்று நிசரிக மபத மிரண்டாம்
உருதநி சரிக மாப மூன்றதா நான்கா மூர்ச்சை
தருபத நிசரி காம வென்னவே சாற்று மாதே.

89. துன்னும பதநிச ரிகவைந் தெனச்சொல்
தன்னிகர் கமபத நிசரி யாறும்
பன்னிய ரிகமப தநிச வேழாம்
மன்னிய மூர்ச்சை மருவுமிவ் வாறே.

சட்சக் கிராம மண்டலம்

ச	ரி	க	ம	ப	த	நி
நி	ச	ரி	க	ம	ப	த
த	நி	ச	ரி	க	ம	ப
ப	த	நி	ச	ரி	க	ம
ம	ப	த	நி	ச	ரி	க
க	ம	ப	த	நி	ச	ரி
ரி	க	ம	ப	த	நி	ச

மத்திம கிராம மண்டல லக்ஷணம்

90. இதுமப தநிச ரீக வெனுமுதல் மூர்ச்சை, காம
பதநிச ரியிரண் டாம்ரி கமபத நிச மூன்றும்
நிதிசரி கமபதநி, நிசரிக மபத நாலைந்
த, தநிசரிகமபா, ப தநிசரி கமவா றேழே.

91. மத்திமக் கிராம மண்டலந் தனக்கு
எத்திய மூர்ச்சை யேழதா மெனவே
சித்தியாம் சர்ங்க தேவன்ம தத்தில
பத்தியா கப்ப கர்ந்திடு மாதோ

மத்திமக் கிராம மண்டலம்

ம	ப	த	நி	ச	ரி	க
க	ம	ப	த	நி	ச	ரி
ரி	க	ம	ப	த	நி	ச
ச	ரி	க	ம	ப	த	நி
நி	ச	ரி	க	ம	ப	த
த	நி	ச	ரி	க	ம	ப
ப	த	நி	ச	ரி	க	ம

காந்தார கிராம மண்டல லக்ஷணம்

92. கதரிப சமநி யொன்று நிகதரி பசம ரெண்டு
மூத, மநி கதரி பாசம் மூன்றதா மூர்ச்சை யாகும்.
புத, சம நிகத ரிபநான் கதாப் புல்லு மைந்தேல்
துதி,பச மநிக தாரி துலங்குமா றின்கூர் கேளே.

அகவற்பா

93. ரிபசம நிகத நேர்ந்திடு மேழும்
உப, தரி பசம நிகவென் றோதும்
சபைகாந் தாரக் கிராமமாய்ச் சாற்றும்
விபுலமாய் நாரதன் விளம்பிய திதுவே.

காந்தார கிராம மண்டலம்

க	த	ரி	ப	ச	ம	நி
நி	க	த	ரி	ப	ச	ம
ம	நி	க	த	ரி	ப	ச
ச	ம	நி	க	த	ரி	ப
ப	ச	ம	நி	க	த	ரி
ரி	ப	ச	ம	நி	க	த
த	ரி	ப	ச	ம	நி	க

கிராம சுரங்களின் சுதியின் விதி

94. மன்னுமுச் சுருதி சட்ச மக்கிரா மத்திற் கென்றும்
துன்னுநாற் சுருதி மத்தி மக்கிரா மத்திற் ஞேயும்
என்னுங்காந் தாரக் கிராமத் தோர்சுதி பஞ்ச மத்திற்
பன்னுதை வதநி டாதச் சுதியெனப் பேசும் பின்னும்.

95. நிறைதெய்வத் திற்குப் பஞ்ச மச்சுதி நிஷாதத் திற்கும்
குறையிலா ரிஷபத் திற்கும் சாபாந்தியச் சுருதி கூட்டி
வருமிக்கி ராம மூன்றை மாநிலத் தோர்கள் காண
நறுமலர்க் குழலி னுளே நாரத ருரைசெய் தாரே.

இச் செய்யுள்களிலும் மண்டலப் படங்களிலும் ஸக்ராம; மக்ராம மூர்ச்சனைகள் நேர் வரிசையாகக் கொடுக்கப்பட்டுள்ளன. காந்தார மூர்ச்சனை வக்கிரஸ்வரமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் விளங்கவில்லை.

(எ - து). சட்சக் கிராமத்துக்குச் சுருதி 3. மத்திமக்கிராமத்திற்குச் சுருதி 4 ; காந்தாரக்கிரா மத்திற்குச் சுருதி 1 பஞ்சமத்திற்குத் தைவத நிஷாதச் சுதியாம் ; தைவதத்திற்குப் பஞ்சமச் சுதியாம் ; நிஷாத ரிஷபத்திற்குக் சாபாந்தியச் சுதியாம் எ - று.

கிராமச் சுரங்களுக்கு அதிதேவதைகள்

96. அரியரன் பிரமன் மூக்ரா மக்கதி தெய்வ மாகும்
வருருது மூன்ற தாங்கிரீஷ் மாவரு ஷமேமந் தத்தில்
சுருவுமிம் மூன்று கிராமம் துலங்குமென் றேமுன்
[னூலால்
மருவுநா ரதன்ம தத்தில் வழங்கிய தென்று கூறே.

இ - ள்). சட்சக் கிராமத்திற்குப் பிரமன், மத்திமக்கிராமத்திற்கு விஷ்ணு, காந்தார கிராமத்திற்கு ஈசுவரன் அதிதேவதைகள். சட்சக்கிராமத்திற்குக் ஹேமந்தருது ; மத்திமகிராமத்திற்கு க்ரீஷ் மருது ; காந்தார கிராமத்திற்கு ஏமந்தருது ஆம் (எ - று).

இச்செய்யுள்களிற் கூறும் செய்திகள் ஸங்கீதரத்னாகரத்தில் கூறப்பட்டுள்ள முறை பின்வருமாறு (1: 4: 2 - 5) :—

2. நான்காவது சுருதியிலேபஞ்சமம் அமைக்கப்படுவது ஷட்ஜக்ராமம்

3. தன் கடைசிச் சுருதிக்குக் கீழேயுள்ளசுருதியில் பஞ்சமம் அமைக்கப்படுவது மத்யமக்ராமம். அல்லது த, ஷட்ஜக்ராமத்தில் 3 சுருதிகளையும், மத்திமக்கிராமத்திற்கு 4 சுருதிகளைப் பெற்றாலும் ஆகலாம்.

4-5. ரி, ம என்ற இவை ஒவ்வொன்றிலும் ஒரு ச்ருதியைக் காந்தாரம் எடுத்துக்கொண்டாலும், ப வின் ஒரு சுருதியை தைவதமும், த வின் ஒரு சுருதியையும் ஸவின் ஒரு சுருதியையும் நிஷாதம் எடுத்துக்கொண்டாலும் அது காந்தாரக்ராமமென்று நாரத மகரிஷி கூறுவர்.

குறிப்பு : இந்தக்காந்தாரக்ராம விஷயம் மிகுந்த ஆராய்ச்சிக்குரியது. மேலேயுள்ள தமிழ்ச்செய்யுள்கள் ஸங்கீதரத்னாகரத்தை ஒட்டியே செய்யப்பட்டுள்ளன என்பதற்கு இரண்டிலும் நாரதர் பெயர் கூறப்பட்டிருப்பது காரணம். என்றாலும் ஸங்கீதரத்னாகரக் கருத்தை உள்ளவாறே தமிழாசிரியர் கொண்டு கூறவில்லை.

ச-ர. I. 4: 7 - 8. கூறுவன :—மூன்று க்ராமங்களுக்கும் முறையே தேவதைகள் ப்ரஹ்மா, விஷ்னு, மஹேசன் என்பவர்கள்; மாலை, நண்பகல், காலை சிறுபொழுதுகள்; ஹேமந்தம் (முன்பனி), க்ரீஷ்மம் (இளவேனில்) வர்ஷா (கார்) பெரும்பொழுதுகள். இவைகளில் அவை பாடப்படும்.

தமிழ்ச் செய்யுள்களில் சிறுபொழுது 103 ஆம் செய்யுளில் கூறப்பட்டுள்ளன. தேவதைகள், பெரும்பொழுதுகள் இவற்றின் பெயர்கள் தமிழ்ச் செய்யுளில் முறைமாறி அமைக்கப்பட்டுள்ளன.

மூன்று கிராமத்திற்கும் தேசம், தேவதை

97. புகலயன் தேவதை சட்சகிரா மத்திற்குப்
பூலோகந் தேசம் மத்திமக் கிராமம்
நிகழ்தெய்வம் விஷ்ணுவே புவர்லோ கந்தான்
நேர்தேசம் காந்தார கிராமத் திற்குச்
சுகமரு வீசன்றெய்வம் சுவர்க்க தேசம்
சொல்லியவீச் சுரநாத மடர்ந் தெழுந்து
தகைமைகொள வீரேழு புவன மெங்கும்
தான்பரவி நிற்குமெனச் சாற்று நூலே.

(இ - ள்).

கிராமம்	தேசம்	தேவதை
சட்சக் கிராமம்	பூலோகம்	பிரமன்
மத்திம கிராமம்	புவர்லோகம்	விஷ்ணு
காந்தார கிராமம்	சுவர்க்கலோகம்	ஈசுவரன்

இவ்வாருக, ஈசுவரநாதம் 14 புவனங்களிலுமடங்கி அப்புறப்பட் டிருக்கும் (எ - று).

அலங்கார சுரலக்ஷணம்

98. அடிக்கடி நடுநடுச் சேர்ந்தா ரோக வவரோ கத்தை
படிப்பது சரிக மாக ரி, சரிகரி சரிகாம,
பிடிப்பது அலங்கா ரத்தின் பேரிது வாகு மென்று
அடைவுள சோம நாரி யன்மத மதுதுலங் கும்பாரே.

(இ - ள்). மேற்சொன்ன மூன்று கிராமங்களை அனுசரித்து அலங்காரசுரமென்று, சரிகமகரி, சரிகரிசரிகமா என்றதாகச் சோமனரியன் அருளிச் செய்ததைச் சொன்னோம். சாரங்கதேவமுனி சோமநாத மகாராஜனுக்குச் சொன்ன நாலாவது அத்தியாயத்தில் சுரப்பிரகாணமாம் (எ - று.)

இது 96 வது செய்யுளின் விரிவேயாகும்.

அலங்காரங்களைப்பற்றி ஸங்கீதரத்னகரமும், இராகவிபோதமும் வேறுவிதமாகக் கூறும்.

ஸங்கீதரத்னகரம் 1: 6: வர்ணலங்காரப்ரகரணம் 64 ஆவது சுலோகம் முன் பல சுலோகங்களில் அலங்காரத்தைப்பற்றி விரித்துக்கூறியவற்றைப் பின்வருமாறு தொகுத்துக் கூறுகிறது:—'இவ்விதம் பிரஸித்தமான அலங்காரங்கள் அறுபத்து மூன்று என்னல் சொல்லப்பட்டன, அவை

சுரப்பிரஸ்தாரம்

ச	ரி	க	ம	ப	த	நி	சநி	ரிநி	கநி	மநி	பநி	தநி
1	2	4	8	16	32	64	127	253	504	1004	2000	3984
1	2	5	12	28	64	144	319	701	1526	3298	7084	15136

சுரப்பிரஸ்தார லக்ஷணம்

99. ஒன்றிரண்டும் மூன்றும் நான்கோ ரைந்து மாறதாக்
கன்றாதி நிஷாத மட்டும் கருதுவர் வீட தாக
நின்றிடு மிப்படிக்கு நட்ட வுத்திட்டங் காண்பாய்
வென்றதா ளப்பிரஸ் தார விதம்போல விதுவு மாமே.

(இ - ள்.) ரிஷபத்துக்கு ஒரு வீடும், காந்தாரத்துக்கு இரண்டும், மத்திமத்திற்கு மூன்றும், பஞ்சமத்திற்கு நான்கும், தைவதத்திற்கு

ஸ்தாயியை அடைந்த அலங்காரங்கள் 7; அவரோஹியிலே 12; அவரோஹியில் 12; ஸஞ்சாரியிலே 25; மற்றவை 7, மற்றும் இவ்வர்ணலங்காரங்கள் முடிவற்றவை.

இராகவிபோதம் முதல் விவேகம் 57 ஆம் சுலோகம் :—‘ஒரு ரஞ்சனையின் அல்லது இனிய வர்ணங்களின் தொகுப்பே அலங்காரமாகும்; இவ்வலங்காரங்களுடைய 32 வகைகளையும் மேலும் இரண்டு வகைகளையும் விளக்குவோம்’

இத்தமிழ்ச் செய்யுளாசிரியர் மூலச் செய்யுளில் சோமநாரியனையும் உரையில் சார்ங்கமுனிவரையும் சுட்டியும் அவர்கள் கூறிய அலங்காரத் தொகையைச் சுட்டாமல் செல்கிறார். மேலும் அலங்கார சுரலக்ஷணம் என்று இங்கு விவகரிக்கின்றார். இஃது ஆராய்தற்குரியது.

ஸவரங்களை வரிசையாகவோ ஒரு முறையிலோ அழகாகத் தொடுப்பதே அலங்காரம். இங்கு இத்தமிழ் நூலாசிரியர் தற்காலம் விளங்கும் ஸூளாதிஸப்ததாள அலங்காரத்தைப் பற்றியேதான் விவரிக்க ஆரம்பித்திருக்கிறார்.

ஐந்தும், நிஷாதத்துக்கு ஆறு வீடுமாக இந்தப்படிக்கு நட்ட உத்திட்டம் பார்த்துக்கொள்க (எ - று.)

1-ஆவது வீடு

ச	ரி	க			ம		ப	த	நி			ச
ச	ரி	க			ம		ப	த		நி		ச
ச	ரி	க			ம		ப	த			நி	ச
ச	ரி	க			ம		ப		த	நி		ச
ச	ரி	க			ம		ப		த		நி	ச
ச	ரி	க			ம		ப			த	நி	ச

ஸ்வரப்ரஸ்தாரம் என்று ஸங்கீதரத்நாகரத்தின் அச்சுப்பிரதிகளில் அனுபந்தமாக 5040 விதங்களில் ஸ்வரங்களைக் கூட்டிச் சொல்லும் விதத்தைக் காட்டும் அட்டவணையொன்று காட்டப்படுகிறது. இங்குத் தமிழாசிரியர் சுரப்பிரஸ்தாரம் என்ற ஒருகட்டமும், சுரப்பிரஸ்தார லக்ஷணம் என்று ஒரு செய்யுளும், நட்ட உத்திட்டங்காண ஆறு வீடுகளும் அமைத்து இவை தாளப்பிரஸ்தாரவிதம் போன்றவை என்று கூறுகின்றார். இவற்றின் தத்துவங்களை அறிஞர்கள் ஆராய்வார்களாக. பிரஸ்தாரத்தின் தன்மைகளை ச-ர. 4: 63 முதலான சுலோகங்களிற் காண்க.

இவ்வீடுகள் மேளசக்ரங்களில் வருபவை ஸ்வர விந்யாஸங்களாகக் காண்கின்றன.

சுரப்ரஸ்தாரம் என்று தலைப்பில் இருக்க இவ்வாசிரியர் 72 மேளப்ரஸ்தாரத்தைத்தான் சொல்லுகிறார்; இவை 72 மேளங்களில் உள்ள சுரப்ரஸ்தாரங்களாகும்.

2-ஆது வீடு

ச	ரி		க		ம		ப	த	நி			ச
ச	ரி		க		ம		ப	த		நி		ச
ச	ரி		க		ம		ப	த			நி	ச
ச	ரி		க		ம		ப		த	நி		ச
ச	ரி		க		ம		ப		த		நி	ச
ச	ரி		க		ம		ப			த	நி	ச

3-ஆவது வீடு

ச	ரி			க	ம		ப	த	நி			ச
ச	ரி			க	ய		ப	த		நி		ச
ச	ரி			க	ம		ப	த			நி	ச
ச	ரி			க	ம		ப		த	நி		ச
ச	ரி			க	ம		ப		த		நி	ச
ச	ரி			க	ம		ப			த	நி	ச

4-ஆவது வீடு

ச		ரி	க		ம		ப	த	நி			ச
ச		ரி	க		ம		ப	த		நி		ச
ச		ரி	க		ம		ப	த			நி	ச
ச		ரி	க		ம		ப		த	நி		ச
ச		ரி	க		ம		ப		த		நி	ச
ச		ரி	க		ம		ப			த	நி	ச

5-ஆவது வீடு

ச		ரி		க	ம		ப	த	நி			ச
ச		ரி		க	ம		ப	த		நி		ச
ச		ரி		க	ம		ப	த			நி	ச
ச		ரி		க	ம		ப		த	நி		ச
ச		ரி		க	ம		ப		த		நி	ச
ச		ரி		க	ம		ப			த	நி	ச

6-ஆவது வீடு

ச			ரி	க	ம		ப	த	நி			ச
ச			ரி	க	ம		ப	த		நி		ச
ச			ரி	க	ம		ப	த			நி	ச
ச			ரி	க	ம		ப		த	நி		ச
ச			ரி	க	ம		ப		த		நி	ச
ச			ரி	க	ம		ப			த	நி	ச

சுரங்களுக்கு வாதி, சம்வாதி, அநுவாதி விபரம்

வெண்பா

100. வாதி யரசனும் சம்வாதி மந்திரியாம்
மீதாம்வி வாதிவைரி மேவுமே—மோத
அநுவாதி யேபுதல்வ னுகுமென முன்னூல்
தனிலுரைத்தான் சோம நாதன்.

(எ - து). வாதிசுரம் ராசன் ; சம்வாதிசுரம்—மந்திரி ; விவாதி—என்பது சத்துரு ; அநுவாதி—புத்திரன் ஆகும் என்றவாறு.

---

100. இச்செய்யுளின் கருத்தைச் சோமநாதர் விரிக்கும் விதம் (இராகவிபோதம் 1: 36-38) :—

'சுத்த விக்ருத ஸ்வரங்களான அவையாவும் அவை உண்டாகும் ஸ்தானங்களுக்கேற்ப, மந்த்ரம், மத்யம், தாரம் என முப்பிரிவுகளிலு முள்ளன; வெவ்வேறு இராகங்களில் அவற்றின் பிரயோகங்கள் வாதி, ஸம்வாதி, விவாதி, அநுவாதி என நான்கு வகைப்படும். பெரும்பாலும் தாளப் போக்கையும், அரசனைப்போன்ற சிறப்புநிலையையும் பெற்றுப்

வெண்பா

101. வாதியா ரோகம்சம் வாதியவ ரோகமதாம்
சாதுச் சுரத்தடக்கம் சத்துருவாம்—தீதிலா
பக்கச் சுரங்களெல்லாம பாலகனு கும்மெனவே
முக்கியநூல் சொல்லு முறை.

(எ - து). வாதி - ஆரோகணசுரம், சம்வாதி - அவரோகண சுரம்; விவாதி அடக்கு சுரம்; அநுவாதி - பக்கசுரம் (எ - று).

வாதி முதலிய நாலுக்குரிய சுரங்கள்

102. சரிகமபதநிச, ரிகமபதநிச, கமபதநிச, மபதநிச, பதநிச
தநிச, நிச, ச வென்னச் சாற்றுவர் வாதியின்
[சுரங்கள்
கரு,சநிதபமகரிச நிதபமகரிச தபமகரிச பமகரிச மகரிச
கரிச ரிச ச வெனக்கருதும் சம்வாதிச் சுரங்கள்

பிரயோகத்தில் வரும் ஸ்வரமே வாதியாம்; எந்த இரண்டு ஸ்வரங்களுக் கிடையில் 12 அல்லது 8 சுருதிகள்உளவோ அவை அமைச்சரைப்போன்று ஸம்வாதிகளாகும். எந்த இரண்டு ஸ்வரங்களுக்கிடையே ஒரேயொரு சுருதி மட்டுமுளதோ அவை விவாதிகளாகும்; இவ்விவாதிகள் ஏனைய பிரிவு களுக்கு விரோதமானவைகளாம். இவற்றைத்தவிர, உள்ள ஸ்வரங்கள் யாவும் அநுவாதிகளாம்; இவை ஊழியரைப்போன்று ஏனைய பிரிவுகளுக் குத் துணை செய்வனவாம்"

இங்கு ஊழியன் என்றிருப்பதைத் தமிழாசிரியர் புதல்வன் என்று கொண்டார். ஸங்கீதரத்னாகரம் 1: 3: 46 முதல் 51 சுலோகங்கள் மேற் கூறியவாறே இவற்றை விவரிக்கின்றன. இவை அநுவாதியை ஊழிய னென்றே கூறும்.

101. இச்செய்யுளில் காட்டியபடி வாதி முதலியவற்றிற்குச் சுரங் கள் அமைத்துககூறுவது சாஸ்திரங்களில் கூறப்படவில்லை. இங்குக் கொடுக்கப்பெற்றவை அலங்காரஸ்வரங்களை ஒட்டி அமைந்திருப்பதைக் காணலாம்.

பருசமமகரி, சரிகம, ரிபபமக, ரி கமப, கத்தபம,
[கமபத, மநி
நிதபம பத ்நி, பச்சநி த,பதநிசா,
[வென்றறைகுவர் விவாதி
சரிகா, ரிகமா, கமபா, மபதா, பதநீ, யழகிய தநிசாவிது
அவரோகணமும் அநுவாதியாய் விள்ளே.

மேற்கண்ட சுரங்கலின் வரிசைகள் சாதகஞ் செய்யும் காலம்

103. காக்கு மெழுசுரத்தைக் காலைநடு மாலையினும்
ஆக்கமுட ஞரோக மவரோகம்—ஏற்க
இயம்ப லாகுமற்ற வெக்கா லுங் கூடா
தவற்றின்பேர் சரளி யாம்

(இ - ள்). இந்த ஏழு சுரங்களையும் உதய காலத்திலும், மத்தியான காலத்திலும், மாலைக் காலத்திலும் மாணவர்கள் சாதகம் பண்ணவேண்டும். மற்றக் காலங்கள் கூடாவாம். இதன் பெயர் சரளியாகும் (எ - று).

சுரம் படிப்போர் கேட்போர் பெறும்பலன்

ஆசிரிய விருத்தம்

104. அலங்கார விராக கானங்க டன்னில்
ஆகிய விந்நாற் பகுப்பின் சொரூப மோர்ந்து
இலகவே பாடுமவர் கேட்போர்க் கென்று
மினிதான தர்மார்த்த காம மோக்ஷம்

---

103. ஸங்கீதரத்னாகரத்தில் 'முன்னேற்றத்தை விரும்புவோரால் முறையே மாலை, நடுப்பகல், காலை இப்பொழுதுகளில் அவை பாடப்படும்' (1: 4: 8) என்று கூறியதில், அவை மூன்றுக்ராமங்களைக் குறிக்கும். இங்குத் தமிழாசிரியர் கூறும் சரளி என்பது கிராமங்களைக் குறிப்பதாகக் கொள்ளவேண்டும்.

இப்பொழுது நாம் ஸரளி என்று சொல்லுவதைப் பாடி அப்பியசிப்பதற்கு உரிய காலம் காலையும் மாலையும் ஆகும். உச்சிவேளை தகாது.

பலுகுமென வுமைக்கீச னுரைத்த வாறே
பண்டுநா ரதன்சார்ஞ்ய தேவ னுக்குச்
சொலுமிந்தப் படியறிந்த சோம நாதன்
தொல்லுலகோர்க் கறிவித்தான்
[றுலங்கத் தானே.

இச்சுரகானம் படிப்போர்க்கும் கேட்போர்க்கும் பலன். அதாவது, அலங்காரமாகிய இராககானங்களிலுண்டாகிய வாதி, சம்வாதி, விவாதி, அநுவாதி யென்றும் நாற்பகுப்பின் சொரூபங்களைத் தெரிந்து பாடப் பெறுபவரும், கேட்கப் பெறுபவரும் தர்மார்த்த காம மோக்ஷம் பெறுவரெனப் பார்வதி தேவியாருக்குச் சிவபெருமான் அருளிய பிரகாரம், முன் நாரதர் சாரங்க தேவமுனிக்குச் சொல்ல, அவர் சோமநாத மகாராஜனுக்குச் சொல்ல, அவர் ஐயமறத் தெரிந்து உலகத்தோர் அறியும்படி சொற்றனர் (எ - று).

நாலாவது அத்தியாயம் 1-ஆவது சங்கீத லக்ஷணம்
முற்றுப்பெற்றது

II. பிரகரணம்

புருஷராகங்கள் 8

105. புருஷரா கங்க ளாகும் பூபாளம் பைர விஸ்ரீ
பரு, பல மஞ்ச ரீ, வ சந்தா, மா ளவி, பங் காளம்
நிரைகொளும் நாட்டை யென் று நேருமிவ் வெட்டை
[யோது
பெருமையாம் நூலி லன்னப் பேடெனத் துலங்கு
[மானே.

(இ - ள்). பூபாளம் ; பைரவி ; ஸ்ரீராகம் ; பலமஞ்சரி ; வசந்தா ; மாளவி ; பங்காளம் ; நாட்டை ; இவை யெட்டும் புருஷ ராகங்களாம்.

இப்பிரகடனத்தில் சொல்லப்படும் புருஷராகம், ஸ்திரீராகம், தூதி ராகம், புத்திர ராகம் என்னும் பாகுபாடுகள் வடநாட்டு ஹிந்துஸ்தான சங்கீதத்திற் காணப்படுகின்றன. ஸங்கீத ரத்னாகரத்தில் இவை குறிப்பிடப் படவில்லை யெனினும், 16, 17, 18 ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட ஸங்கீத நூல்களில் இப்பிரிவுகளிற் பல காணப்படுகின்றன. இரத்னாகரத்திற்கு முந்தியதென்று சொல்லப்படுகிற ஸங்கீத மகரந்தத்திலும் இப்பிரிவுகள் கூறப்படுகின்றன. ஆகவே, புருஷ ராகம் முதலிய பிரிவுகள் இந்திய ஸங்கீத முறையிலும்—வடக்கிலும் தெற்கிலும்—மிகப் பழங் காலமுதற் கொண்டே கையாளப்பட்டு வருகின்றன என்று கொள்ளலாம். தமிழில் சென்ற நூற்றாண்டில் வெளியாயுள்ள ஸங்கீத நூல்களில் இப்பிரிவுகள் குறிக்கப்பட்டுள்ளமையும் கருதத்தக்கது.

இந்நூலாசிரியர் இவ்வாறு பழைய பிரிவுகளைத் தேடி இந்நூலில் சேர்த்திருப்பதோடு, அவற்றிற்கு வேதம், தீவு, ஜாதி, வம்சம், கோத்திர ரிஷி, தேகம், முகம், கண், காது, தோள், நிறம், வஸ்திரம், ஆபரணம், கந்தம், புஷ்பம், ஆகாரம், வாகனம், ரஸங்கள், கிழமை, நக்ஷத்திரம், லக்னம், விருக்ஷங்கள், அதிதேவர்கள், ஆயுதங்கள் முதலியவற்றைக் கூறியிருப்பது பாராட்டத்தக்கது. இவற்றிற்கு ஆதாரங்களை அறிஞர்கள் ஆராய வேண்டியவர்களாக இருக்கின்றனர். அன்றியும் இந்நூலிற் கூறப்பெற்ற புருஷ ராகம் முதலிய இராகங்களின் பெயர்களும் வடமொழி நூல்களில் காணப்படுகிறவற்றினின்று சிறிதளவு மாறியுள்ளன. தமிழ் நூல்களில் காணப்படுவனவும் இங்குள்ளனவும் சரியாயிருக்கின்றன. இதுவும் ஆராய்ச்சிக்குரியதே.

வேதம் 4

106. பூபாளம், பைர விக்குப் புக லுமே சாம வேதம்;
ஸ்ரீபல மஞ்ச ரிக்குச் செப்புமே எஜுரு வென்று;
தாபமில் வசந்தா மாள விக்கிருக் கெனவே சாற்றும்;
கூபபங் காளம் நாட்டைக் கதர்வண மென்று கூறே.

(இ - ள்). பூபாளம், பைரவிக்குச் சாமவேதம்; ஸ்ரீராகம், பலமஞ்சரிக்கு எஜுர் வேதம்; வசந்தா, மாளவிக்கு இருக்கு வேதம்; பங்காளம், நாட்டைக்கு அதர்வணவேதம் என்று கூறுவர் (எ - று).

தீபங்கள் 8

107. சம்புத்வீ பம்பூ பாளம்; குசம்பை ரவிக்குச் சாற்றும்;
பம்புசா கம்ஸ்ரீ ராகம்; பலமஞ்ச ரீகிர வுஞ்சம்;
வெம்புவ சந்தா புஷ்க ரமாள விச்சு வேதம்;
நம்புபங் காளம் சால்ம விபிலக்ஷம் நாட்டை யாமே.

(இ - ள்). பூபாளம் சம்புத்தீபம், பைரவி குசத்தீபம்; ஸ்ரீராகம் சாகத்தீவு; பலமஞ்சரி கிரவுஞ்சத்தீவு; வசந்தா புஷ்கரத்தீவு; மாளவி சுவேதத்தீவு; பங்காளம் சால்மலித்தீவு; நாட்டை பிலக்ஷத்தீவு. (எ - று).

சாதி 4

108. பூபாளம் பயிர விக்குப் புக லுமே பிரம்ம சாதி;
ஸ்ரீபல மஞ்ச ரிக்குச் செப்புஞ்சத் திரிய சாதி;
தாபமில் வசந்தா மாள விக்குவை சியனுஞ் சாதி;
கூபபங் காள நாட்டைக் குச்சூத்ர சாதி கூறே.

(இ - ள்). பூபாளம், பைரவி, பிராமண சாதி; ஸ்ரீராகம், பலமஞ்சரி, க்ஷத்திரிய சாதி; வசந்தா, மாளவி, வைசியச் சாதி; பங்காளா, நாட்டை நான்காம் சாதியாம் (எ - று).

வமிசம் 8

109. கேளுபூ பாள வம்சம் மியக்கனும்; பைர விக்கு
மூளுகின் னரனும்; ஸ்ரீகிம்பு ருடன்; பல மஞ்ச ரிக்கு
நீளுகந் தருவ வம்சம்; சித்தராம் வசந்தா வுக்கு;
மாளவி வம்ச மாகும் தும்புரு வென்ன மானே.

(இ - ள்). பூபாளம் இயக்கன் ; பைரவி கின்னரன் ; ஸ்ரீராகம் கிம்புருடன் ; பலமஞ்சரி கந்தருவன் ; வசந்தா சித்தர் ; மாளவி தும்புருவாகும் (எ - று).

ஷை வமிசம் (தொடர்ச்சி)

110. பங்காள மேதேவ வம்மிசமா கும் ; நாட்டைக்
கிங்கிதஞ்சேர் நாகவங்கி சம்மென் னும் ;—சங்கையிலா
திவ்வாற தாக விராகங்க ளெட்டிற்கும்
பவ்வியமாம் வம்சங்கள் பார்.

(இ - ள்). பங்காளம் தேவர் வம்சம் ; நாட்டை நாகவம்சம். ஆக வம்சம் எட்டும் சரி. (எ - று).

கோத்திர ரிஷி 8

111. வசிட்டகோத் திரம்பூ பாளம் ;
பைரவி விசுவா மித்திரன் ;
நிச கவு தமன்ஸ்ரீ ராகம் ;
நேர்பல மஞ்ச ரிக்கு
பசையுளத் திரியன் கோத்திரம் ;
பிருகுவ சந்தா பற்றும் ;
வசையற நாலே யாய்ந்தோர்
வகுத்தன ரிவ்வா றென்றே.

112. பார்சுகனும் மாளவிக்கு ; பங்காளத் திற்காகும்
நேராம் ஜமதக் கினியென் றும் ;—கூறியதோர்
நாட்டைக்கா கும்பரத்து வாசன் ; என நாவலர்கள்
சூட்டினர்கள் கோத்திரத்தைச் சூழ்ந்து.

(இ - ள்). பூபாளம் வசிட்ட கோத்திரம் ; பைரவி விசுவாமித்திர கோத்திரம் ; ஸ்ரீராகம் கௌதம கோத்திரம் ; பலமஞ்சரி அத்திரி கோத்திரம் ; வசந்தா பிருகு கோத்திரம் ; மாளவி சுகர் கோத்திரம் ; பங்காளா ஜமதக்னி கோத்திரம் ; நாட்டை பரத்துவாஜ கோத்திரம் ; (எ - று).

தேகம் 4

113. பூபாளம் பைர விக்குப் பொருந்துமே தூல தேகம் ;
ஸ்ரீபல மஞ்ச ரிக்குச் சமதேக மாகச் செப்பும் ;
தாபமில் வசந்தா மாள விக்குமெய் குப்ப தேகம் ;
நாபிகொள் தீர்க்க தேகம் பங்காள நாட்டைக்
[கென்னே.

(இ - ள்). பூபாளம் பைரவிகட்குத் தூல தேகம் ; ஸ்ரீராகம், பலமஞ்சரிக்குச் சமதேகம் ; வசந்தா, மாளவிகட்குக் குப்பதேகம் ; பங்காளா நாட்டைகட்குத் தீர்க்க தேகம் (எ - று).

முகம் 4, 5, 2,

114. பொருமுக நான்க தாகும் பூபாளம் வசந்தா வுக்கும் ;
இருமுகம் பயிர விக்கு மிதுபல மஞ்ச ரிக்கும் ;
திருமுக மைந்த தாகும் ஸ்ரீராகம் மாள விக்கு ;
பெருமுக மிரண்டு நான்காப் பேசுபங் காள நாட்டை.

(இ - ள்). பூபாளத்துக்கு நான்கு முகம் ; வசந்தாவுக்கும் நான்கு முகம் ; பைரவிக்கும் பலமஞ்சரிக்கும் இரண்டு முகம் ; ஸ்ரீராகத்துக்கும் மாளவிக்கும் முகம் ஐந்தாகும் ; பங்காளாவுக்கு இரண்டு முகமும் நாட்டைக்கு நான்கு முகமுமாம் (எ - று).

கண், காது, தோள்

115. பூபாளம் வசந்தா வுக்கும் பொருந்துநாட் டைக்கு
[மெட்டு
நாபல மஞ்ச ரிபை ரவிபங்கா ளக்கும் நான்காம் ;
பாபமில் ஸ்ரீரா கம்மா ளவிக்குப்பத் தாகு மென்பர் ;
மாபுடை சூழும் நூலின் வருத்ததண் காது தோளே.

(இ - ள்). பூபாளம், வசந்தா, நாட்டைக்குக் கண், காது, தோள்கள் எட்டு. பலமஞ்சரி பைரவி பங்களாவுக்கும் கண், காது, தோள்கள் நான்காம் ; ஸ்ரீராகம், மாளவிக்குக் கண், காது, புயங்கள் பத்தாகும் என்று சொல்வர் (எ - று).

நிறம் 4

116. ஆளும்பூ பாளம் பைர விக்குறு வெண்மை யாகும்;
நீள்பல மஞ்ச ரிஸ்ரீ நிகழுமே சிவப்பு றுப்பாய்;
மாளவி வசந்தா வுக்கு வடிவுபொன் னிறமே யாம்; பங்
காளமு நாட்டைக் காகும் கருத்தரு பங்கள் மாதோ.

(இ-ள்). பூபாளம், பைரவி வெள்ளைநிறம்; பலமஞ்சரி, ஸ்ரீராகம் சிவப்பு; வசந்தா, மாளவி பொன்னிறம்; பங்காளம், நாட்டை கருப்பு நிறமாகும் (எ-று).

வஸ்திரம்

117. புகழும்பூ பாளம் பைர விக்குவெண் புடவை யாகும்;
தகுசிவப் பாடை ஸ்ரீச்குப் பலமஞ்ச ரீகருப் பாம்;
பகுப்புள வசந்தா மாள விக்காடை பச்சை யென்றும்
அருத்துவ நீலம் பங்கா ளம்நாட்டை மஞ்ச ளாமே.

(இ-ள்) பூபாளம், பைரவிகட்கு வெள்ளை வஸ்திரம்; ஸ்ரீராகம் சிவப்பு வஸ்திரம்; பலமஞ்சரிக்குக் கருப்பு வஸ்திரம்; வசந்தா, மாளவிக்குப் பச்சை வஸ்திரம்; பங்காளம் நில வஸ்திரம்; நாட்டைக்கு மஞ்சள் வஸ்திரமாம் (எ-று).

ஆபரணம் 8

118. முத்துப்பூ பாளம்; பைர விக்குவைரம்; தாம நீலம்
வத்துஸ்ரீ ராகம்; மாணிக்கம் பலமஞ்ச ரிக்கு;
வித்தது புஷ்ப ராகம் வசந்தா; கோ மேத கப்பூண்
எத்துமே மாள விக்காம்; என்றுரை செய்வாய் மானே

119. வாகுளதாம் பங்காளம் வைடூர் யம்பதும
ராகமென வோதிடுவர் நாட்டைக்கே—பாகமதா
மென்னவட நூலி லியற்று மொழியதனில்
நன்னயஞ்சே ரிவ்விலக்க ணம்.

(இ-ள்). இவ்விரு செய்யுள்களும் ஒரு தொடர். பூபாளம் முத்தாபரணம்; பைரவிக்கு வைர ஆபரணம்; ஸ்ரீராகத்துக்கு நிலாபரணம்; பலமஞ்சரிக்கு மாணிக்கம்; வசந்தா புஷ்பராகம்; மாளவிக்குக் கோமேதகம்; பங்காளத்துக்கு வைடூர்யம; நாட்டைக்குப் பதுமராகாபரணம் (எ-று).

கந்தம் 8

120. கோரோச னேபூ பாளம்; பைரவி கற்பூ ரம்; கூர்
சீராகம் ஸ்ரீகந் தம்; கஸ் தூரிபல மஞ்ச ரிக்கு;
ஆருமே வசந்தா கந்தம்; கிலதாம் மாள விக்கு
வாருகுங் குமமாய்க் கந்தம் வகுத்தனர் நூல்வல்
[லோரே.

121. கதம்ப மாகுங் கனபங் காளம்;
இதம்பெறு சுகந்தத் தியல்பாம் நாட்டை;
உதவு மெனவே யுற்றநூல் வல்லோர்
மதிநேர் முகத்தாய் வகுத்ததிவ் வாறே.

(இ-ள்). பூபாளத்துக்குக் கோரோசனே; பைரவிக்குக் கற்பூரம்; ஸ்ரீராகத்திற்கு ஸ்ரீகந்தம்; பலமஞ்சரிக்குக் கஸ்தூரி; வசந்தாவுக்கு அகில்; மாளவிக்குக் குங்குமம; பங்காளத்துக்குக் கதம்பம்; நாட்டைக்குச் சுகந்தம் (எ-று).

புஷ்பம் 8

122. பிச்சிபூ பாளம்; பைர விக்குமல் லிகையாய்ப் பேசும்;
மெச்சுஸ்ரீ மகிழாம்; முல்லை பல்மஞ்ச ரிக்கா வுள்ளும்;
புச்சமில் வசந்தா வுக்குப் பொருந்துமே சண்ப கப்பூ
நிச்சய மறிந்து வல்லோர் நிகழ்த்தினர் கமல மாதே.

123. மாளவிக்குத் தாழை; வளருந் துரோணம்பங்
காளந் தனக்குப்பூக் காட்டுமே;—நீளமதாம்
பாரிஜா தப்பூ பகருமே நாட்டைக்கு
சீராகு நூலிற் றெரிந்து

(இ-ள்). பூபாளம் பிச்சிப்பூ; பைரவிக்கு மல்லிகைப்பூ, ஸ்ரீராகம் மகிழம்பூ; பலமஞ்சரிக்கு முல்லைப்பூ; வசந்தா சண்பகப்பூ; மாளவி தாழம்பூ; பங்காளா துரோணம்; நாட்டைக்குப் பாரிஜாதம் (எ-று).

ஆகாரம் 8

124. பணியாரம் பூபா ளத்தூண் ;
　　பைரவி கொழுக்கட் டை ; ஸ்ரீ
உணுஞ்சித்தி ரான்ன மே ; பல
　　மஞ்சரி தயிர்ச்சோ றுண்ணும் ;
திணுவசந் தாபபல் ஹுணுய
　　திதித்தபா யசாத் தூணே
அணுகுமா ளவிக்கே தென்றே
　　யறைந்தனர் நூல்வல் லோரே.

125. சுத்தான் னமாகச் சொல்லும் பங்காளம் ;
தித்திக் கும்பலன் செப்பு நாட்டைக்கு ;
வைத்தி டும்நூலி லறையு மெனவே
மத்த வாரண நடையுள மாதே.

(இ - ள்). பூபாளத்துக்குப் பணியாரம் ; பைரவிக்குக் கொழுக் கட்டை ; ஸ்ரீராகத்திற்குச் சித்திரான்னம் புலமஞ்சரிக்குத் ததி யோன்னம் ; வசந்தாவுக்குப் பலஹுண் ; மாளவிக்குப் பாயசம் ; பங் காளம் சுத்தான்னம் ; நாட்டைக்குத் தித்திப்புப் பழங்கள் ஆகாரங் களாம் (எ - று).

வாகனம் 8

126. சிகிவாக னம்பூ பாளம் ; அன்னம் பயிரவிக்குச்
[செப்பும் ;
பகையிலாப் பகடு ஸ்ரீக்கு ; பலமஞ் சரிக்கெண் காற்புள் ;
மகிழ்குயில் வசந்தா வுக்கு ; மாளவி கிளி ; பங் காளம்
திகைசக்கிர வாகம் ; நாட்டை தனக்குச்ச கோர மாமே

(இ - ள்). பூபாளத்துக்கு மயூரவாகனம் ; பைரவிக்கு அன்னம் ; ஸ்ரீராகத்துக்குக் கடா ; பலமஞ்சரிக்கு எண்காற்புள் ; வசந்தாவுக்குக் கோகிலம் ; மாளவிக்குக் கிளி ; பங்காளம் சக்கரவாகம் ; நாட்டைக்குச் சகோரம் வாகனங்களாம்.

இரசங்கள் 8

127. சிங்கார ரசம்பூ பாளம்; பைரவி ரவுத்தி ரம்சீர்
தங்குஸ்ரீ ராகம் பீபச் சம்பல மஞ்ச ரிக்குப்
பொங்கிய கருணை; ஆசியம் புகலுமே வசந்தா வுக்கு;
பங்குமே பயர சம்மா ளவிக்கெனப் பகரு மின்னும்;

128. பங்காள ராகம் பகருமற் புதரசம்;
இங்கிதம் சேரும் நாட்டைக் கியம்பும்
புங்கவ வீர ரசமெனப் புகலும்;
சங்கைதீர்ந் திடநூல் சாற்றிய திதுவே.

(இ - ள்). பூபாள ராகத்திற்குச் சிங்காரரசம்; பைரவிக்கு ரௌத்திராசம்; ஸ்ரீராகத்துக்குப் பீபச்ச சரம்; பலமஞ்சரிக்குக் கருண ரசம்; வசந்தாவுக்கு ஹாஸ்யரஸம்; மாளவிக்குப் பயரசம்; பங்காளத் துக்கு அற்புதரசம்; நாட்டைக்கு வீரரசமாம் (எ - று).

கிழமை 6

129. பூபாளம் பைர விக்குப் பொன்னாகும்; சவும்மிய வாரம்
ஸ்ரீபல மஞ்ச ரிக்கு; செப்புமே வசந்தா பானு;
தாபமில் மாள விக்குச் சனி; பங்கா ளமதாந் திங்கள்;
சோபமில் நாட்டைக் குச்செவ் வாய்வாரந் துலங்கு
[மாதோ.

(இ - ள்). பூபாளம், பைரவிக்கு வியாழன்; ஸ்ரீராகத்துக்கும் பலமஞ்சரிக்கும் புதன்; வசந்தாவுக்கு ஞாயிறு; மாளவிக்குச் சனி; பங்காளத்துக்குத் திங்கள்; நாட்டைக்குச் செவ்வாய் வாரங்களாம் (எ - று).

நக்ஷத்திரங்கள் 7

130. பூபாளம் பைர விக்குப் பூராட நாளே யாகும்;
ஸ்ரீபல மஞ்ச ரிக்குத் திரட்டாதி செப்பும் உத்திரம்
தாபமில் வசந்தா விற்குச் சகடுமா ளவிம கம்சொல்
நீபபங் காளம் மூலம்; நாட்டைமித் திரனும் நேரே

(இ - ள்). பூபாள ராகத்திற்கும் பைரவிக்கும் பூராட நக்ஷத் திரம்; ஸ்ரீராகத்துக்கு உத்திரட்டாதி; பலமஞ்சரிக்கு உத்திரம்; வசந்தாவுக்கு ரோகிணி; மாளவிக்கு மகம்; பங்காளம் மூலம்; நாட் டைக்கு அநுஷ நக்ஷத்திரமாம் (எ - று).

லக்கினம் 7

131. பூபாளம் பைர விக்குப் புகல்சாபம் ; மீனங் கன்னி
ஸ்ரீபல மஞ்ச ரிக்காம் ; வசந்தாமா ளவிக்குச் சிங்கம் ;
பாபமில் மேடம் தேளே பங்காளம் நாட்டைக் கென்பர்
கோபமி லாதாய் ராசி கூறின ரிராகத் திற்கே.

(இ - ள்). பூபாள ராகத்திற்கும் பைரவிக்கும் தனுசு. ஸ்ரீராகத்துக்கு மீனம் ; பலமஞ்சரிக்குக் கன்னி ; வசந்தாவுக்கு ரிஷபம் ; மாளவிக்குச் சிங்கம் ; பங்காளம் மேஷம் ; நாட்டைக்கு விருச்சிகம் லக்கினங்களாம் (எ - று).

விருக்ஷங்கள் 8

132. பூபாளம் பைர விக்குப் புகல்பலாத் திராட்சை யாகும் ;
ஸ்ரீபல மஞ்ச ரிக்குப் பேரீந்து விளாவே செப்பும் ;
சாபம லவ சந்தா மாளவிக்கு மாதுளைச்சீர்
கூபபங் காள நாட்டைத் தெங்குடன் கதலி கூறும்.

(இ - ள்). பூபாளம் பைரவிக்குப் பலா, திராக்ஷை ; ஸ்ரீராகத்துக்குப் பேரீந்து ; பலமஞ்சரிக்கு விளா ; வசந்தாவுக்கு மாமரம் ; மாளவிக்கு மாதுளை ; பங்காளத்துக்குத் தெங்கு ; நாட்டைக்கு வாழை விருக்ஷங்களாம் (எ - று).

சாபமலை (?)

அதிதேவர்கள் 8

133. அரிபூபா ளத்தின் றெய்வம் ; அரன்பைர விக்குத் [தெய்வம் ;
ஸரஸ்வதி ஸ்ரீரா கம்த கும்பல மஞ்ச ரிக்கு
நிரையிலக் குமி ; வ சந்தா நேருமா தித்தன் ; தெய்வம்
தகுமாள விக்கு நார தன் ; தெய்வ மாகச் சாற்றே.

134. சாற்றுபங் காளந் தனக்கு விநாயகன் ;
போற்றிய நாட்டை தும்புரு வென்றே,
ஆற்ற லுடைய வதிதே வதைகளாய்
வேற்றுமை யின்றி விளம்பிடு நூலே.

(இ - ள்). பூபாளத்துக்கு விஷ்ணு. பைரவிக்கு ஈசுவரன் ; ஸ்ரீராகத்துக்குச் சரஸ்வதி ; பலமஞ்சரிக்கு இலக்குமி ; வசந்தாவுக்கு ஆதித்தன் ; மாளவிக்கு நாரதன் ; பங்காளாவுக்கு விநாயகன் ; நாட்டைக்குத் தும்புரு அதிதேவர்கள் (எ - று).

ஆயுதங்கள் 8

135. பூபாளம் பைர விக்குக் கத்தியுங் கதையும் புல்லும்;
ஸ்ரீபல மஞ்ச ரிக்குச் சங்குடன் குந்தம் செப்பும்;
சோபமில் வசந்தா மாள விக்கு விற் கலப்பை சூட்டும்;
நீபபங் காளம் நாட்டை பரசுடன் பிண்டி நேரே.

(இ - ள்). பூபாள ராகத்துக்குக் கட்காயுதம்; பைரவிக்குக் கதாயுதமும்; ஸ்ரீராகத்துக்குச் சங்காயுதமும்; பலமஞ்சரிக்குக் குந்தாயுதமும்; வசந்தாவுக்குத் தனுசும்; மாளவிக்கு அலாயுதமும்; பங்காளத்துக்குப் பரசு, அதாவது, மழுவாயுதமும், நாட்டைக்குப் பிண்டியாயுதமும் (எ - று).

புருஷராகங்கள் 8, பெண் ராகங்கள் 24

136. பூபாள மனைவியர்கள் மலஹரியும்
பிலஹரியும் பாடி புல்லும்;
பூபைர விக்குத்தே வக்ரியா மேகரஞ்சி
குறிஞ்சி யதாப் போற்றும்;
தாபமில்ஸ்ரீக் காந்தோளி பல்லாதி
ஜுஜுஹுளித் தலைவி சாற்றும்;
தீபபல மஞ்சரிக்குத் தேசிமுகா
ரியும்லலிதாச் செப்பு நாலே.

137. வசந்தாவின் மனைகளிரா மக்கிரியா
வோடுசேரும் வராளி கௌள
நிசமாள விக்குக்குண்டக் கிரியை
கூர்ஜரிபௌளி நிலைபங் காளத்
திசைமனைவி கல்யாணி ஆஹிரி சா
வேரியென்ப ரினிதாம் நாட்டைக்
கசைவிலாச் சங்கரா பரணம் காம்
போஜிகண்டா ரவமாச் சூட்டே.

(இ - ள்). பூபாள மனைவியர்: மலஹரி, பிலஹரி, பாடி.
பைரவி மனைவியர்: தேவக்ரியா, மேகரஞ்சி, குறிஞ்சி.
ஸ்ரீராக மனைவியர்: ஆந்தோளி, பல்லாதி,
[ஜுஜுஹுளி.

பலமஞ்சரி ராக மனைவியர்கள் : தேசி, முகாரி, லலிதா.
வசந்தா ராக மனைவியர்கள் : இராமக்கிரியை, வராளி, கௌள.
மாளவி ராக மனைவியர்கள் : குண்டக்கிரியா, கூர்ஜரி, பௌளி.
பங்காள ராக மனைவியர்கள் : கல்யாணி, ஆஹிரி, சாவேரி.
நாட்டை ராக மனைவியர்கள் : சங்கராபரணம், காம்போஜி, கண்டாரவம்.

ஆக புருஷராகங்களின் 8-க்கும் மனைவி ராகங்கள் 24-ம் ஆகும் (எ - று).

தூதிராகம்

வசனம்

138. பைரவிக்கு—கன்னடா ;
பூபாளத்துக்கு—தேசாக்ஷி ; தேவகாந்தாரி ;
ஸ்ரீராகத்துக்கு—தேசி ;
பலமஞ்சரிக்கு—ஆசாவேரி ;
வசந்தாவுக்கு—மோகனம் ;
மாளவிக்கு—இந்தோளம் ;
பங்காளத்துக்கு—ஆபோகி ;
நாட்டைக்கு—வேளா வளியாம்.

புத்திரராகம்

வசனம்

139. பைரவிக்குக்—காபி, ரேகுப்தி (ரேவகுப்தி)
பூபாளத்துக்கு—நீலாம்பரி
ஸ்ரீராகத்துக்கு—மாருவ ; ராமக்ரியா
பலமஞ்சரிக்கு—ஸாரங்கா, மந்தாரி, சௌராஷ்டிர, கேதாரம்
வசந்தாவுக்கு—முகாரி, லலித, தோடி, தன்யாசி, நாராயணி, கௌளி
மாளவிக்கு—பந்துவராளி, வராளி, கௌள,
பங்காளத்துக்கு—பூர்வி, சாவேரி, பேகட, பௌளி
நாட்டைக்கு—மனோகரி, யமுனா

இவை புத்திர ராகங்களாம்.

III. பிரகரணம்

சுத்த மத்திம மேளகர்த்தா 36

140. இசையாக வேயோது மேளகர்த் தாராக
மெழுபத் திரண்டி னுக்கு
மெண்ணுமுப் பத்தாறு சுத்தமத் திமராக
மென்பரவ் விதிகேண் மீனே

ஸ்ரீ வெங்கடமகியவர்கள் காலத்திலிருந்து, அதாவது ஏறக்குறைய 350 ஆண்டுகளாகக் கருநாடகச் சங்கீதத்தில் அநுபவமாய் வருகிற சுத்த மத்திம மேளங்கள் 36, பிரதி மத்திம மேளங்கள் 36, ஆகிய 72 மேளங்களின் பெயர்களையும் இந்தப் பிரகரணத்தின் முதல் இரண்டு விருத்தங்களும் முறைப்படுத்திக் கூறுகின்றன. ஆனால், ஜன்னிய இராகங்களின் பெயர்களைக் கூறுமிடத்து இந்நூலில் வெங்கடமகியைப் பின்பற்றாமல், இன்றைக்கு ஏறக்குறைய 200 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தவரெனக் கருதப் படுகிற ஸ்ரீகோவிந்தர் என்பவரால் இயற்றப்பட்ட தென விளங்கும், 'ஸங்கிரஹ சூடாமணி' என்ற நூலை அனுசரித்தே, அதனைத் தமிழில் மொழிபெயர்த்ததுபோல் அமைந்துள்ளது. இந்த 'ஸங்கிரஹ சூடாமணி' யைப் போன்று, 'ஸங்கீத ஸார ஸங்கிரஹம்' என்ற தெலுங்கு பத்தியகாவிய நூலொன்றும் உண்டு. இவற்றுள் எது முந்தியது என்று நிச்சயமாகக் கூறக்கூடவில்லை. இவற்றுளொன்றே இப்பிரகரணத்துக்கு மூல நூல்ஆகும்.

வேங்கடமகி மேளங்களுக்கு அளித்த பெயர்களையே முதலில் கனகாம்பரி, பேநத்யுதி என்ற மாதிரி இந்நூல் தானும் கொடுத்து, ஸ்வரங்களின் இலக்ஷணங்கள், கிரகம், அம்சம் முதலியவற்றையும் அம்மூல நூலில் சொல்லியபடியே முதலில் கூறிப் பிறகு மேளங்களின் பெயர்களை 'கனகாங்கி, ரத்னங்கி' என்று மாற்றி அமைத்துக்கொண்டதுமன்றி, எல்லா மேளங்களையும் ஸம்பூர்ணமென்றும் கூறுகிறது. அந்நூல் பிறகு ஒவ்வொரு மேளத்திலுமுள்ள ஜன்னிய ராகங்களைச் சொல்லி, அந்த ஜன்னிய ராகங்களின் இலக்ஷணங்களை எடுத்துக் கூறுகிறது. ஆனால் இத்தமிழ் நூல் மேளகர்த்தாக்களை ஒன்றன்பின் ஒன்ருக எடுத்துக்கொண்டு, அதன் கிரமங்களைக் கூறி அதனின்று பிறக்கும் ஜன்யராகம் ஒவ்வொன்றின் ஆரோக அவரோகங்களை எடுத்துக் கூறுகிறது. அல்லது மேலே சொன்ன ஸங்கீதஸார ஸங்கிரஹம் அல்லது ஸங்கிரஹ சூடாமணி என்ற நூல்களுள் ஒன்றின், சிறு வேற்றுமைகளுடன், மொழிபெயர்ப்பே என்று இதனைக் கூறலாம். இந்தப் பிரகரணம் மிகவும் பயன்படக்கூடியதாக அமைந்துள்ளது.

இச்சைகொள் கனகாங்கி ரத்நாங்கி கான
மூர்த்தியும் வனஸ்பதியு மிதனெ
டேதமில் மானவிதி தான ரூபியும் வளர்ந்
தேறுசே னவதியுடன்
கசிவிலா அநுமத் தோடிதே னுகா
நாடகப் பிரியா கோகிலப்
பிரியா கனமான ரூபவதி காயகப்
பிரியா காணும்வகு ளாபரணமாம்
கருதுமா யாமாளவ கௌள சக்ர
வாகஞ் சூரிய காந்தம்
ஹாடகாம் பரிஜங் காரத்வனி நடன
பைரவி வேலைதீர் கீர்வாணி
அசைவிலாக் கரஹரப் பிரிய கௌரீ
மனோகரி வருணப் பிரியா
அன்பான மாரரஞ் சனி சாரு
கேசிமே லான சரசாங்கி
மேளமமையும் ஹரிகாம் போதியுடனே
தீரச்சங்கரா பரண நாகா
நந்தினி யாகப் பிரியாவுடன் ராக
வர்த்தினியெனவு மருமையாவோதுகின்ற
திசைமேவு காங்கெய பூஷணி யுடன்வாக்
தீசுவரி யாகமற்றுஞ்
சிந்தைமகிழ் சூலினி மேளமொடு சலசாட்டை
சேர்ந்த முப்பத் தாறுஞ்
சித்தமதி லுதித்துக் கடபயா திகளாய்ச்
சிறக்குங் கணக்கு வைத்துச்
செப்புவாய் வானமின் றன்னைப் பழித்துச்
சிறந்தமெய் யுடைய மானே.

(இ-ள்). எழுபத்திரண்டெனக் கூறும் மேளகர்த்தாக்களில் முப்பத்தாறு சுத்தமத்திமராகங்கள் எனப்படும். அவை கனகாங்கி முதல் சலசாட்டை ஈருக உள்ளன. (இவற்றின் விரிவு பின்னே கொடுக்கப்பெற்றுள்ளது). இவற்றைக் கடபயாதிக் கணக்கு வைத்துக் கண்டுகொள்க.

பிரதிமத்திம மேளகர்த்தா 36.

141\. ஆன பிரதிமத்தி மத்தின் மேளமுப்
பத்தா றென்ப வவ்வகை
கேண்மி னேவருளு ஸாலக ஜலார்ணவம்
ஜால வராளி நவநீத
மேளமரி தான பவானி ரகுப்பிரியை
கவாம் போதி பவப்பிரியை
அமையுஞ் சுபபந்து வராளி ஷட்வித
மார்க்கிணி ஸுவர் ணங்கியுடனே
நானமில் திவ்யமணி தவளாம்பரி
நாமநா ராயணியு மிகுந்த
நயகாம வர்த்தனிரா மப்பிரியா
கமனச்ரம விசுவம்பரி
நவில்சாம ளாங்கி ஷண்முகப் பிரியை
சிம்மேந்திர மத்திம ஹேமவதி
நாடுதர்மவதி நீதிமதி மேளமுட
னன்மைசேர் காந்தா மணி
பானுவென லாகுரிஷபப் பிரியை, தன்னுடன்
பகரு லதாங்கி, வாசஸ்பதி
மேசகல் யாணி சித்ராம் பரியெனப்
பற்றுஞ் சுசரித்ர, பாவனஞ்
செய்கின்ற சோதிசொரூ பிணி
பருதா துவர்த்தனி யெனும், பசுமைசேர்
நாசிகா பூஷணி கோசல, பண்பான
ரசிகப் பிரியா
ஆனவிம் முப்பத் தாறுமே பிரதி
மத்திம மாகு மேள
கர்த்தா மன்னிய விராகங்க ளெழுபத்
திரண்டென வகுத்தனர் நூலறிந்து

மகிமைபெறு ஜன்னியத் தாரோகவவரோக
வர்ஜ்ஜிய மறிந்துய்யவே
மதகரியின் மத்தகமும் வடகுவடும்நித்தமு
மகிழ்ந்த தனமுடைய மாதே.

(இ - ள்). இனி, பிரதிமத்திம மேளங்கள் முப்பத்தாறும். இவை ஸாலக முதல், ரசிகப்ரியா ஈறாக உள்ளவை. இவற்றின் இலக்கணங்களும், ஜன்யங்களின் ஆரோக அவரோகங்களும் பின்னர் கூறப்பெறும்.

இச்செய்யுள்கள் இரண்டிலும் சுத்த மத்திம மேளகர்த்தா 36-ம் பிரதிமத்திம மேளகர்த்தா 36-ம் முறையே அடங்கியிருக்கின்றன. அவை பன்னிரண்டு சக்கரங்கள் மூலம் விபரப்படும்.

சுத்த மத்திம மேளம்

1-ஆவது சக்கரம்

		ச	ரி	க	ம	ப	த	நி
கனகாங்கி	...	0	சு	சு	சு	0	சு	சு
ரத்நாங்கி	...	0	சு	சு	சு	0	சு	கை
கானமூர்த்தி	...	0	சு	சு	சு	0	சு	கா
வநஸ்பதி	...	0	சு	சு	சு	0	ச	கை
மானவதி	...	0	சு	சு	சு	0	ச	கா
தானரூபி	...	0	சு	சு	சு	0	ஷ	கா

2-ஆவது சக்கரம்		ச	ரி	க	ம	ப	த	நி
ஸேனாவதி	...	0	ச	சா	சு	0	சு	சு
ஹநுமத்தோடி	...	0	சு	சா	சு	0	சு	கை
தேனுகா	...	0	சு	சா	சு	0	சு	கா
நாடகப்ரிய	...	0	சு	சா	சு	0	ச	கை
கோகிலப்ரிய		0	சு	சா	சு	0	ச	கா
ரூபாவ்தி	...	0	சு	சா	சு	0	ஷ	கா

3-ஆவது சக்கரம்		ச	ரி	க	ம	ப	த	நி
காயகப்ரிய	...	0	சு	அ/0	சு	0	சு	சு
வகுளாபரணம்	...	0	சு	அ/0	சு	0	சு	கை
மாயாமாளவகௌள	...	0	சு	அ/0	சு	0	சு	கா
சக்கரவாகம்	...	0	சு	அ/0	சு	0	ச	கை
சூரியகாந்தம்	...	0	சு	அ/0	சு	0	ச	கா
ஹாடகாம்பரி	...	0	சு	அ/0	சு	0	ஷ	கா

4-ஆவது சக்கரம்		ச	ரி	க	ம	ப	த	நி
ஜங்காரத்வனி	...	0	ச	சா	சு	0	சு	சு
நடபைரவி	...	0	ச	சா	சு	0	சு	கை
கீரவாணி	...	0	ச	சா	சு	0	சு	கா
கரஹரப்ரியா	...	0	ச	சா	சு	0	ச	கை
கௌரிமனோஹரி	...	0	ச	சா	சு	0	ச	கா
வருணப்ரியா	...	0	ச	சா	சு	0	ஷ	கா

5-ஆவது சக்கரம்		ச	ரி	க	ம	ப	த	நி
மாரரஞ்சனி	...	0	ச	அ0	சு	0	சு	சு
சாருகேசி	...	0	ச	அ0	சு	0	சு	கை
ஸரசாங்கி	...	0	ச	அ0	சு	0	சு	கா
ஹரிகாம்போதி	...	0	ச	அ0	சு	0	ச	கை
தீரசங்கராபரணம்	...	0	ச	அ0	சு	0	ச	கா
நாகாநந்தினி	...	0	ச	அ0	சு	0	ஷ	கா

6-ஆவது சக்கரம்	ச	ரி	க	ம	ப	த	நி
யாகப்ரிய ...	o	ஷ	அ/o	சு	o	சு	சு
இராகவர்த்தினி ...	o	ஷ	அ/o	சு	o	சு	கை
காங்கேய பூஷணி ...	o	ஷ	அ/o	சு	o	சு	கா
வாக்தீஸ்வரி ...	o	ஷ	அ/o	சு	o	ச	கை
சூலினி ...	o	ஷ	அ/o	சு	o	ச	கா
சலநாட ...	o	ஷ	அ/o	சு	o	ஷ	கா

பிரதிமத்திம மேளகர்த்தா 36

7-ஆவது சக்கரம்	ச	ரி	க	ம	ப	த	நி
ஸாலக ...	o	சு	சு	பி	o	சு	சு
ஜலார்ணவம் ...	o	சு	சு	பி	o	சு	கை
ஜாலவராளி ...	o	சு	சு	பி	o	சு	கா
நவநீதம் ...	o	சு	சு	பி	o	ச	கை
பாவநி ...	o	சு	சு	பி	o	ச	கா
ரகுப்ரிய ...	o	சு	சு	பி	o	ஷ	கா

8-ஆவது சக்கரம்		ச	ரி	க	ம	ப	த	நி
கவாம்போதி	...	0	சு	சா	பி	0	சு	சு
பவப்ரிய	...	0	சு	சா	பி	0	சு	கை
சுபபந்துவராளி	...	0	சு	சா	பி	0	சு	கா
ஷட்விதமார்க்கிணி	...	0	சு	சா	பி	0	ச	கை
ஸ்வர்ணாங்கி	...	0	சு	சா	பி	0	ச	கா
திவ்யமணி	...	0	சு	சா	பி	0	ஷ	கா

9-ஆவது சக்கரம்		ச	ரி	க	ம	ப	த	நி
தவளாம்பரி	...	0	சு	அ	பி	0	சு	சு
நாமநாராயணி	...	0	சு	அ	பி	0	சு	கை
காமவர்த்தினி	...	0	சு	அ	பி	0	சு	கா
ராமப்ரிய	...	0	சு	அ	பி	0	ச	கை
கமனச்ரம	...	0	சு	அ	பி	0	ச	கா
விசுவம்பரி	...	0	சு	அ	பி	0	ஷ	கா

10-ஆவது சக்கரம்		ச	ரி	க	ம	ப	த	நி
சியாமளாங்கி	...	0	ச	சா	பி	0	சு	சு
ஷண்முகப்ரியா	...	0	ச	சா	பி	0	சு	கை
சிம்மேந்திரமத்திமம்	...	0	ச	சா	பி	0	சு	கா
ஹேமவதி (ஏமவசந்தா ஏமவதி)	...	0	ச	சா	பி	0	ச	கை
தர்மவதி	...	0	ச	சா	பி	0	ச	கா
நீதிமதி	...	0	ச	சா	பி	0	ஷ	கா

11-ஆவது சக்கரம்		ச	ரி	க	ம	ப	த	நி
காந்தாமணி	...	0	ச	அ/0	பி	0	சு	சு
ரிஷபப் பிரியா	...	0	ச	அ/0	பி	0	சு	கை
லதாங்கி	...	0	ச	அ/0	பி	0	சு	கா
வாசஸ்பதி	...	0	ச	அ/0	பி	0	ச	கை
மேசகல்யாணி	...	0	ச	அ/0	பி	0	ச	கா
சித்ராம்பரி	...	0	ச	அ/0	பி	0	ஷ	கா

12-ஆவது சக்கரம்		ச	ரி	க	ம	ப	த	நி
ஸுசரித்ர	...	0	ஷ	அ/0	பி	0	சு	சு
ஜ்யோதிஸ்வரூபிணி	...	0	ஷ	அ/0	பி	0	சு	கை
தாதுவர்த்தனி	...	0	ஷ	அ/0	பி	0	சு	கா
நாஸிகாபூஷணி	...	0	ஷ	அ/0	பி	0	ச	கை
கோஸல	...	0	ஷ	அ/0	பி	0	ச	கா
ரஸிகப்ரியா	...	0	ஷ	அ/0	பி	0	ஷ	கா

சுத்தமத்திம மேளகர்த்தா **36**

கனகாங்கி	காயகப்ரியா	மாரரஞ்சனி
ரத்நாங்கி	வகுளாபரண	சாருகேசி
கானமூர்த்தி	மாயாமாளவகௌள	சரசாங்கி
வனஸ்பதி	சக்கரவாகம்	ஹரிகாம்போதி
மானவதி	சூரியகாந்தம்	தீரசங்கராபரணம்
தானரூபி	ஹாடகாம்பரி	நாகாநந்தினி
சேனவதி	ஜங்காரத்வனி	யாகப்ரிய
ஹநுமத்தோடி	நடபைரவி	இராகவர்த்தினி
தேனுகா	கீரவாணி	காங்கேய பூஷணி
நாடகப்ரியா	கரஹரப்ரியா	வாக்தீச்வரி
கோகிலப்ரியா	கௌரீமனோகரி	சூலினி
ரூபவதி	வருணப்ரியா	சலநாட்ட

ஆக சுத்தமத்திம மேளகர்த்தா **36**-ம் சரி.

பிரதிமத்திம மேளகர்த்தா 36

ஸாலக	தவளாம்பரி	காந்தாமணி
ஜலார்ணவம்	நாமநாராயணி	ரிஷபப்ரியா
ஜாலவராளி	காமவர்த்தினி	லதரங்கி
நவநீதம்	ராமப்ரிய	வர்சஸ்பதி
பாவனி	கமனச்ரம	மேசகல்யாணி
ரகுப்ரிய	விசுவம்பரி	சித்ராம்பரி
கவாம்போதி	சியாமளாங்கி	ஸுசரித்ர
பவப்ரிய	ஷண்முகப்ரிய	ஜோதிரூபிணி
சுபபந்துவராளி	சிம்மேந்திரமத்திமம்	தாதுவர்த்தனி
ஷட்வித மார்க்கிணி	ஹேமவதி	நாசிகாபூஷணி
ஸ்வர்ணாங்கி	தர்மவதி	கோஸல
திவ்யமணி	நீதிமதி	ரசிகப்ரிய

ஆக, பிரதிமத்திம மேளகர்த்தா **36**-ம் சரி.

இராகமேளகர்த்தா **72**-ம் சரி.

மேளகர்த்தா ஜன்யங்கள்

1. கனகாங்கி மேள ஜன்யங்கள்

142. அரிதாள கனகாங்கி மேளகர்த்தா ஆரோகம்
அவரோகம் பூரண மாகும்;
மருவுமதிற் சனித்த கன காம்பரிக்கு வளராரோகம்
பூரண மாம்அவ ரோகத்
துருநிடதம் வர்ச்சியம் அதன் கூட வந்த சுத்த
முகாரிக் காரோகம் மாவர்ச்சியம்
பெருகும் அவ ரோகணம் தைவத நிஷாதம்
பேசுமே வர்ச்சியமென வாதிமேளம்.

(இ-ள்). கனகாங்கி மேள இலக்ஷணம. ஆரோகம், அவரோகம் பூர்ணமாகும்.

இதன் ஜன்யங்கள் :

(1) கனகாம்பரி (ஆரோகணம்) பூரணம். (அவரோகணம்) நி வர்ஜ்யம்.

(2) சுத்தமுகாரி (ஆ). ம வர்ஜ்யம் (அ). த நி. வர்ஜ்யம்.

இது முதல் மேளம்

2. இரத்நாங்கி மேள ஜன்யங்கள்

143. கனமதாம் ரத்நாங்கி யின்மேளத் திற்குக்
கைசிக நிஷாத மற்றவை
காணுமே சுத்தம் ; அதில்வரும் இராகங்கள்
பேனத்துயுதியின் ஆரோகம்
வினவுகாந் தார மிலை ; அவ ரோகம்
பஞ்சம மில்லை ; ஸ்ரீமதிக்கு
விளங்கும் ஆரோகம் ம. நி. குறை ; அவரோகணம்
வில்லு மத்திமங் குறையாம் ;
நினைவுள கண்டார வத்திற் காரோக
நி ச க ம ப நி ச ; அவரோகம்
நேர் ச நி த ப ம க ரி ச நி த ப நி சா
நி ; கள புஷ்ப வசந்தத்
தனதின் ஆரோகம், ந ம நிடதம் வர்ச்சிய
மதாகும் அவரோக மேகாந்
தாரவர்ச்ச மதாம் ; இது இரண்டா மேளச்
சார்பென வுரைத்திடும் நூலே.

---

1. கனகாங்கி

142. கநகாம்பரி : இதில் ஆரோகணத்தில் ஸப்த ஸ்வரங்களும் வருவதால் பூரணம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனல் ஸங்கிரக சூடாமணியிலும் (ஸ. சூ.) ஸங்கீத ஸார ஸங்கிரகத்திலும் (ஸ, ஸா. ஸ.) ஆரோகணம் ஸகரிகமபதநிதஸ என்றும், அவரோகணம் ஸநிதபமகரிஸ என்றும் காட்டப் பெற்றுள்ளன.

(2) சுத்தமுகாரி

ஸ. ஸா. ஸ. ஆரோகணம், அவரோகணம் பூரணம்

ஸ. சூ. ஸரிகமபதநிஸ ஸநிதமகரிஸ

ரா. ல. ஸரிகமபதநிஸ ஸநிதமகரிஸ.

குறிப்பு :

ஸ. ஸா. ஸ. — ஸங்கீத ஸாரஸங்கிரகம்

ஸ. சூ. — ஸங்கிரக சூடாமணி

ரா. ல. — ராகலக்ஷணம்

(இ - ள்). இரத்னங்கி மேள இலக்ஷணம்: கைசிகநிஷாதம்; மற்றவை சுத்தம்.

இதன் ஜன்னியங்கள் :—

(1) பேனத்யுதி (ஆ). கா. வர்ஜ்யம் (அ). ப. வர்ஜயம்

(2) ஸ்ரீமதி (ஆ). ம. நி. வர்ஜயம் (அ). ம. வர்ஜ்யம்

(3) கண்டாரவம் (ஆ). நிசகமபாநிச (அ). சநிதபமகரிச நிதபநிசா.

(4) புஷ்பவசந்தா (ஆ). நி. வர்ஜ்யம் (அ) கா. வர்ஜ்யம்

இது, இரண்டாம் மேளம்

---

2. இரத்நாங்கி

143. பொதுவாக, இந்நூலில், ஸ்வரக்ரமங்கள் முறையோடு நேரிடப் போகாமல் வக்ரமாகப் போகும் இராகங்கள் சிலவற்றில்,—ஏற்றத்திலும் இறக்கத்திலும் ஸ்வரக்ரமங்கள் வக்ரமாய்ப் போகும்பொழுது—வக்ரத்தில் அந்த ஸ்வரம் இருந்தபோதிலும், நேரிடப் போகும்பொழுது அது விடப் பட்டிருப்பதால், அதை இங்கு வர்ஜ்யமாகக் கருதிச் சொல்லப்படுகிறது. உதாரணமாக, இச்செய்யுளில் "பேனத்யுதி ஆரோகத்தில் காந்தாரம் இலை, அவரோகத்தில் பஞ்சமமில்லை" என்று கூறப்பட்டிருக்கிறது.

(1) பேனத்யுதி

ஸ. சு. (ஆ). ஸரிமபதநிஸ
ஸநிதமகரிஸ

ஸ. ஸா. ஸ. (ஆ). ஸரிமபதநிஸ
ஸநிதமகரிஸ

இங்கு ஸ. ஸா. ஸ. (ஆ). நூலே பின்பற்றப்பட்டுள்ளது.

(2) ஸ்ரீமதி : இது ஸ்ரீமணி என்று ஸ. சு. விலும், ரா. ல. த்திலும் கூறப்படுகிறது. ஸ. ஸா. ஸ. த்தில் ஸ்ரீமதி என்றே இருக்கிறது. மற்ற க்ரமங்கள் சரியே.

(3) கண்டாரவம்

ஸ. சு. (ஆ). ஸரிஸகமபநிஸ
(அ). ஸநிதபமகரிஸ

(4) புஷ்பவஸந்தா இந்த ராகம் ஸ. சு. இலும், ஸ. ஸா. ஸ. த்திலும் கூறப்படவில்லை; இந்நூலில் இது கூறப்படுகிறது. இதன் ஆரோகண அவரோகணங்கள் பிற தமிழ்ப் புத்தகங்களில் ஸரிசபமதநிஸ; ஸநிதப மகரிஸ என்று காணப்படுகிறது.

3. கானமூர்த்தி மேள ஜன்யங்கள்

144. கானமூர்த்திக்குக் காகலி நிஷாதம்
காணமற்றச் சுரங்கள் சுத்தமதாம்
கருதிய விதனில் தோன்றும் இராகங்கள்
சொலும் சாம வராளிக்
கினமில் ஆரோக ணத்திற் காந்தார
மிலேஅவ ரோகம் பூரணமாம் ;
இனிதெனும் பின்ன பஞ்சமத்திற்கு
இலகும் ஆரோகம் ப ரீ இல்லே ;
மானெரும் அவரோ கணத்திற் காந்தாரம்
வர்ச்ச மாம் ; என மூன்ரு
மேளம் வகுத்தனர் பெரியோர் சாஸ்திர
விதியாய் மாநிலத்தோ ரறிந்திடவே
வானவில் லொத்த புருவமு நுதலும்
மதிதனே நிகருமா முகமும்
வஞ்சிநே ரிடையுங் கஞ்சநேர் கரமும்
மருவிய மெய்யுடை மாதே.

(இ - ள்.) கானமூர்த்தி மேள இலக்ஷணம் :—காகலி நிஷாதம் ; மற்றைய சுரங்கள் சுத்தம்.

இதன் ஜன்யங்கள் :—

(1) சாமவராளி ; (ஆ). கா. வர்ஜ்யம் ; (அ). பூர்ணம்

(2) பின்னபஞ்சமம் (ஆ). ப. ரி. வர்ஜ்யம் ; (அ). கா. வர்ஜ்யம்.

இவை மூன்ருவது மேளத்திற்கென்று சாஸ்திர விதியில் உலகமறியச் சொன்னர் பெரியோர்.

விற்போன்ற நெற்றியினேயும், புருவத்தினேயும், சந்திரன் போன்ற முகத்தினேயும், வஞ்சிக்கொடி போன்ற இடையினேயும், தாமரைப்பூப் போன்ற கைகளேயுமுடையமாதே ! மகடூஉ முன்னிலே.

---

3. கானமூர்த்தி

(1) ஸாம வராளி ஸ. கு ; ஸ. ஸா. ஸ. இவற்றில் உள்ளபடியே.

(2) பின்ன பஞ்சமம் ஸ. கு ; ஸ. ஸா. ஸ.
(ஆ) : ஸகமபதநிஸ
(அ) : ஸநிதபமகரிஸ

4. வனஸ்பதி மேள ஜன்யங்கள்

145. வனஸ்பதி மேளங் கைசிக நிஷாத
மாம், சதுச் சுருதி தைவதமாம்,
மற்றது சுத்தம் : அதில் வந்த ராக
மாகிய பானும திக்குச்
சினமில்ஆ ரோகம் ஸ ரி க ரி ம ப ஸ
சேர்ந்தஅவ ரோகணத் திற்குச்
செப்பிய நிடதம் வர்ச்சமாம் ; இன்னும்
திரம்பெறு ரசவ ராளிக்குப்
புனையுமா ரோகம் காந்தாரம் வர்ச்சம்,
புனிதமா மதன்அவ ரோகம்
பொருந்துமே ஸ ப ம க ரி ஸ வெனவே
புகலலா மென்பர் பெரியோர்
மனமகிழ்ந் துரைத்த நான்கதா மேள
மாமென்பர் வானத்தின் மின்னை
மலரவன் தெளிவாய் வகுத்துநல் லுருவ
மாக்கிய பூங்குழன் மாதே.

(இ - ள்). வனஸ்பதி மேள இலக்ஷணம் ; கைசிக நிஷாதம் ; சதுச்சுருதி தைவதம் ; மற்றவை சுத்தமாகும்.

இதன் ஜன்யங்கள் :—

(1) பானுமதி : (ஆ) : ஸரிகரிமபஸ (அ) : நி. வர்ஜ்யம்.

(2) ரசவராளி (ரஸாளி) (ஆ). கா. வர்ஜ்யம (அ). ஸபமகரிஸா.

என்று பெரியோர்கள் சொல்லுவர்.

பிரமன் வானமின்னை உருவமாக வகுத்தனைய பூங்குழல் மாதே!

இது நான்காவது மேளம்

---

4 வனஸ்பதி

(1) பானுமதி :	ஸ. சு.	(ஆ). ஸரிகரிமபஸ
		(அ). ஸநிதபமகரிஸ
	ஸ. ஸா. வி.	(ஆ). ஸரிகமபஸ
		(அ). ஸதபமரிஸ
(2) ரஸாளி :	ஸ. சு. ஸ. ஸர. ஸ. ரா. க.	(ஆ). ஸரிமபதநிஸ (அ). ஸதபமரிஸ

5. மானவதி மேளம் ஜன்யங்கள்

146. கருது மானவதி மேளம தாகும்
காகலி நிஷாதத் துடனே
கணக்கிடுஞ் சதுச்சுருதி தைவத மதாய்க்
கண்டிரு மிதரமே சுத்தம் ;
மருவிய இதனில் உதித்தரா கங்கள்
மனோரஞ் சனிக்கு ஆரோக
மாகிய சுரத்திற் காந்தாரம் வர்ச்சியம் ;
விளங்கிய அதன் அவ ரோகம்
நிரைகொளுஞ் ச நி த ப த ம க ரி ச ச
நேர்ந்திடும் அதனுடன் தோன்றி
நிலைகொளுங் கனசியா மளாங் கிக்கு
நிகழ்த்தும் ஆரோகணச் சுரங்கள்
பெரு ச க ம ப த நி ப ச சா வென்னப்
பேசுமே ; அதன் அவ ரோகம்
பிதற்றுமே சம்பூ ரணமதாய் இவற்றின்
பேரைந்தா மேளமாப் பேசே.

இ - ள்). மானவதி மேள இலக்ஷணம் காகலி நிஷாதம் சதுச்ருதி தைவதமாம் ; மற்றவை சுத்தமாம்.

இதன் ஜன்யங்கள் :—

(1) மனோரஞ்சனி (ஆ). கா. வர்ஜ்யம் (அ). சநிதபமகரிசா

(2) கனசியாமளாங்கி (ஆ). சகமபதநிபசசா ஆகும் ; (அ). சம்பூரணமாகும்,

இவை ஐந்தாம் மேளத்திற்கென்ப. (எ - று).

6. தானரூபி மேள ஜன்யங்கள்

147. தானரூபிக்குக் காகலி நிஷாதம்,
ஷட்சுருதி தைவதம், மற்றதுநேர் ;
சாற்றிய இதனில் உதித்தரா கங்கள்
தனுகீர்த்திக் குரைக்கும் ஆரோகம்

---

5. மானவதி

கனச்யாமள : ஸ. ஶு. ஸ. ஸா. ஸ.	}	(ஆ). ஸகமபதஸ (அ). ஸநிதபமகரிஸ

ஈனமில் ச ரி ம ப நி ச சா வென்னும்
இதன்அவ ரோகணச் சுரங்கள்
இன்பமாஞ் ச நி த நி ப ம க ம ரி சா
வெனுமதனுடன் பிறப் பான
தானநேர் சிருங்கா ரிணிக்கு ஆரோகம்
ச ரி க ம ப நி ச சா வென்னச்
சாற்றிய அவற்றி னவரோகம் பேசும்
ச நி த ப ம க ரி சா வெனவே
நாநனி யிதுவா ரூவது மேளம்
துலங்குமென் றுரைப்பர்மே லாகச்
சொல்லுநூ லறிந்தோர் வகையுடன் முகிலைத்
தோய்த்தபூங் குழலுடை மாதே.

(இ - ள்). தானரூபி மேள இலக்ஷணம் :— காகலி நிஷாதம் ; ஷட்சுதி தைவதமாகும்.

இதன் ஜன்யங்கள் :—

(1) தனுகீர்த்தி ; (ஆ). சரிம்பநிசா (அ). சநிதநிபமகமரிசா.

(2) சிருங்காரணி ; (ஆ). சரிகம்பநிசா (அ). சநிதபமகரிசா

இவ்வாறு ஆருவது மேளத்துக்கு, மேலான பெரியோர் சொல்வர் ; மேகத்தைக் கலந்தன்ன பூங்குழல் மாதே ! (எ - று).

7. சேனுபதி மேளம் ஜன்யங்கள்

148. ஓதிய சேனு பதியா மேளத்தி
னுருச்சா தாரண காந்தாரம்
உதித்திடு மிதரம் சுத்தமாம் ; இதனு
ளூற்பவ மாமிரா கங்கள்
தாதுடைச் சேனுக் கிரிணிஆ ரோகம்,
சரிகரி மகமத நிசசா
தகும்அவ ரோக ணச்சுரம் விளங்கும்
சநிதப மகரி சா வென்ன

---

6. நானரூபி

(2) சிருங்காரிணி ஸ. ஞ. (ஆ) ஸகரிபமபஸ
(அ) ஸநிதபமகரிஸ

திதிலாப் போகி ராகம்ஆ ரோகம்
செலும் சக ரிமபத நிசசா சேர்ந்
திடும்அவ ரோகணஞ் சம்பூ ரணமாய்ச்
சிறந்திடும்; இதனைவல் லோர்கள்
கோதிலா வேழா மேளகர்த் தாவாக்
குறித்தனர் இதன்முறை தெரிந்து
குவலயத் தோருக் குரைசெய்வாய் குயில்போற்
கூவுநற் குரலுடை மானே.

(இ - ள்). சேனாபதியாம் மேள இலக்ஷணம் :—சாதாரண காந்தாரம், மற்றவை சுத்தம்.

இதன் ஜன்யங்கள் :—

(1) சேனாக்கிரிணி (ஆ). சரிகரிமகமதநிச; (அ)- சநிதபமகரிசா.

(2) போகி ராகம்: (ஆ). சகரிமபதநிச; (அ). சம்பூரணமாகும்.

இதனைக் கீத வல்லவர்கள் ஏழாவது மேளகர்த்தாவாகக் குறித்தனர்; குயில்போலும் இனிய சொல்லையுடைய மாதே! இதன் கிரமம் தெரிந்து உலகத்தார் அறியச் சொல்வாயாக (எ - று).

8. ஹநுமத்தோடி மேள ஜன்யங்கள்

149. விள்ளு மேமேளம் ஹநுமதோ டிக்கு
விளங்கிய கைசிக நிஷாதம்;
மீதுறும் சாதா ரணகாந் தாரம்;
விதித்திடு மற்றது சுத்தம்;
வள்ளிதா மிதனுட் டோன்றிய தோடி
மருவும் ஆரோக அவரோகம்
வர்ச்சம்பா வில்லை; பூபாளந்திற்கு
வளருமா ரோகத்தில் மநியும்

---

7. சேனாபதி

போகி ஸ. சு. (ஆ). ஸகமபதநிதஸ
(அ). ஸநிதபமகஸ

பல புத்தகங்களில் இப்படியே காணப்படுகிறது. இங்கு ஸ. சு. இல் சிந்தாமணி என்ற இராகம் அதிகமாக இருக்கிறது.

கள்ளமில் அவரோ கணத்திலாம் ச த ப
கரிச சா ; நாகவ ராளி
காணுநி சகரி கமபத பபம
கரிசநி யெனும் ; அவரோகம்
உள்ளதாம் சநிச கரிகம பதப
மகரிச நிச வென வோதும்
உலகினை யளந்த மாலென நீண்ட
வுரோமவா ரிலகிய மாதே.

150. பின்னுமவ் அனுமதோடிமே ளத்திற்
பிறந்திடுஞ் சுத்தசாமந்தம்
பேசுமா ரோகம் தசரிம பதத
பமகரி சாவெனப் பிதற்றும் ;
பன்னிய அவரோகம் சரிமக மபதப
மகரிச சா வென்னும் ; பார அஸாவே
ரியாரோ கம்சரி மபத
ச சா வென்னும் ; அவரோகம்
துன்னிய சநித பமகரி சாவாம் ;
துலங்கு புன்னுக வராளி
தொடுத்த வாரோகம் சரிகம பதநி ;
சொல்லவ ரோகணச் சுரங்கள்
மன்னுமே நிதபம கரிசநி யென்ன ;
மருவுமே சுத்த சீமந்நினி
வளருமா ரோகம், நிவர்ச்சியம் ; அவரோகணம்
சதபம கரிச வெனுமே.

151. அடுத்திடு மனும தோடிமே ளத்தி
லாகிய ஆகிரி தனக்கு
ஆரோகம் சரிச கமபத நிநிசா ;
அவரோகணம் பூரண மாகும் ;
தடையிலாத் தனியாசிக்கு ஆரோகம்,
சகமப நிச ; அவரோகம்,
சநிதப மகரி சாவெனும் ; புன்னுகத்
தோடிஆ ரோகம் ஷாடவம்

கடுநித நிசரி கமப ; அவரோகம்
தபமக ரிசநித நிசசா ;
கருதுவ ரிதனை யெட்டதா மேள
கர்த்தாவின் கூறெனநூலில்
வடிவுள வம்பின் புதைதனைப் பழித்து
வளம்பெறு கெண்டையிற் றிகழ்ந்து
வள்ளிதாம் பசும்பொன் றாணெனப் புகழ்வளர்
கணைக்கா லுடைய மாதே.

(இ - ள்). அநுமதோடி மேள இலக்ஷணம் :—கைசிக நிஷாதம் ; சாதாரண காந்தாரம் ; மற்றவை சுத்தம்.

இந்த அநுமதோடி மேளத்தில் தோன்றிய இராகங்கள் பத்து அவை :—(1) தோடி (2) பூபாளம் (3) நாகவராளி (4) சுத்த சாமந்தம் (5) அசாவேரி (6) புன்னாகவராளி (7) சுத்தசிமந்திநி (8) ஆகிரி, (9) தன்னியாசி (10) புன்னாகதோடியாம்.

(1) தோடி : (ஆ). அ. ப. வர்ச்சியம்.

(2) பூபாளம் : (ஆ). ம நி வர்ச்சியம் (அ). சதபகரிசா.

(3) நாகவராளி : (ஆ). அ. நிசரிகமப தபபமகரிசநி; சநிசகரிகமப தபமகரிசநிச.

(4) சுத்தசாமந்தா : (ஆ). அ. தஸரிமப ததபமகரிஸ (அ). சரிம கமப தபமகரிச.

(5) அசாவேரி : (ஆ). சரிமபதசா ; (அ). சநித பமக ரிசா வாம்.

(6) புன்னாகவராளி : (ஆ). நிஸரிகமப்தநி (அ). நிதபமகரிசநி.

(7) சுத்த சிமந்திநி. ஸரிகமபதஸ : நி. வர்ச்சியம் ; (அ). சதப மகரிச.

(8) ஆகிரி : (ஆ). சரிசகமபதநிநிசா. (அ). பூரணமாகும்.

(9) தன்னியாசி : (ஆ). சகமபநிச, (அ). சநிதபமகரிசா.

(10) புன்னாகதோடி : (ஆ). நிதநிசரிகமப (அ). தபமகரிசநிதநிச.

இவை எட்டாவது மேளகர்த்தாவின் பகுப்பென்று நூலிற் சொல்லப்படும். ஆவம் (அம்புப் புட்டில்) பழித்துக் கெண்டை மீனெனப் பிரகாசிக்கும் கணைக்கால்களையுடைய மாதே! (எ - று).

இம்மூன்று கவிகளும் ஒரு தொடர்.

---

8. ஹநுமத்தோடி

புன்னாகதோடி. இந்த இராகம் ஆதார நூல்களில் இல்லை.

9. தேனுகா மேள ஜன்யங்கள்

152. தேனுகா மேளங் காகலி நிஷாதம்
செலும்சா தாரண காந்தாரம்
செப்பிய மேளத் துறு பின்ன ஷட்ஜம்
திறத்தஆ ரோகணச் சுரங்கள்
மானமாம் சரிகரி பமப நிசசா
மருவுஅவ ரோகணம் சதப
மகரிசா வென்னும்; சோகவ ராளி
வளருமா ரோகணச் சுரங்கள்
கானமாம் சகம நிதப மகரி
மகரிசா அவரோகணச் சுரங்கள்
கருதுமே சகரி மகமப நிதப
மகரிசா டக்கரா கத்தின்
ஈனமில் ஆரோ கணத்தில்நீ வர்ச்சியம்;
இனிதவ ரோகணம் பூர்ணம்;
எனுமிதை ஒன்பதா மேள கர்த்தா
வென்றனர் நூலுணர்ந் தோரே.

(இ - ள்). ஒன்பதாவது தேனுகா மேள இலக்ஷணம்! காகலி நிஷாதமும் சரதாரண காந்தாரமுமாம்.

இதன் ஜன்யங்கள் :

(1) பின்னஷட்ஜம்: (ஆ). சரிகரிபமபநிசசா (அ). சதபம கரிசா.

(2) சோகவராளி: (ஆ). சகமரிதபமகரிமகரிசா; (அ). சகரிமகம பநிதபமகரிசா.

(3) டக்கா: (ஆ). ரி. வர்ச்சியம் (அ). பூர்ணம்.

இவை ஒன்பதாவது மேளகர்த்தாவுக்குரிய என்பர் (எ - று).

---

9. தேனுகா

(2) சோகவராளியில் அவரோகணச் சுரங்கள் என்று மறுபடி கொடுத்திருப்பது மதாந்தரமாகும்.

(3) டக்க ஸ. சு. (ஆ) ஸகபமதநிஸ
(அ) ஸநிதபமகரிஸ
ரா. ல. (ஆ) ஸகமபமதநிஸ
ஸரிதபமகரிஸ

ஸ. ஸா. ஸ இல் இந்த இராகம் கூறப்படவில்லே.

டக்கா என்பது இப்பொழுது மாளவ கௌளராகத்தில் ஜந்யமுள்ள ஒரு இராகமாகும்.

10. நாடகப்ரியா மேள ஜன்யங்கள்

153. காணுமே நாட்கப் பிரியை மேளம்
கைசிகை நிடதம், சாதாரண
காந்தாரம், சதுச்சுருதி யின்தெய் வமதாகக்
கருதுமே மற்றது சுத்தம் ;
சேணுறு மிதனுட் சனித்தில கியமா
தீபர ராகம்ஆ ரோகம்
செப்புபூ ரணமாம் ; அவரோகம் ச நி த
நிதபம மகரிசா செல்லும் ;
வாழ்நா டா பரணம் ஆரோகம், ச ரி க ம
பதப நிச ; அவரோகம்,
வளர் சநி தபம கமரிசா வென்பர் ;
மகிமைசேர் மாகத ஸ்ரீக்குத்
தோணும்ா ரோகம், சகரிக மபநி
தநிச வாய்ச் சொலும்அவ ரோகம்
துலங்குபூ ரணமாம் ; பத்தாகு மேளச்
சொரூபமென் றுரைத்திடு நாலே.

(இ - ள்). நாடகப்ரியை மேள இலக்ஷணம் :—கைசிகை நிஷாதம், சாதாரண காந்தாரம், சதுச்சுருதி தைவதம் ; மற்றவை சுத்தமாம் ;

இதன் ஜன்யங்கள் :—

(1) தீபரம் : (ஆ). பூரணம் ; (அ). சநிதநிதபமமகரிசா.
(2) நர்டாபரணம் : (ஆ). சரிகம்பதநிச ; (அ) சநிதபமகமரிசா.
(3) மாகதஸ்ரீ : (ஆ). சகரிகம்பநிதநிச ; (அ). பூரணமாகும்.
இது பத்தாம் மேள மாகும்.

---

10. நாடகப்ரியா

மாகத ஸ்ரீ என்ற இராகம் அதிகப்படியாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

ஸகரிமபதஸ அல்லது ஸகமபநிதநிஸ ஸநிதநிபமகரிஸ அல்லது ஸநிதபமகஸ.

என்பன மதாந்தரமாகும்

தீபகம் என்று எட்டில் உள்ளது. தீபரம் என்பதே நேரான பெயர். 51 ஆவது மேளத்தில் தீபகம் என்ற ஒரு ஜன்யராகம் உண்டு.

11. கோகிலப்ரியா மேள ஜன்யங்கள்

154. கோகிலப் பிரிய மேளந் தனக்குக்
கூறுவர் காகலி நிஷாதம்,
குலவுசா தாரண காந்தா ரமதாய்க்
கொளுஞ்சது சுருதிதை வதமீ
தாகிய விதர சுத்தமாம்; அதனிற்
சனித்திடு மிராகம் வர்த் தனிக்குச்
சகமப மபத நிசவதா ரோகம்;
சேர்ந்திடு மேயவ ரோகம்
தேகமாம் சநிப தபமக சா; சந்
தேகமில் கோகிலா ரவத்திற்
செப்புமா ரோகம் சரிகரி மபத
நிச; அவரோக ணச்சீராம்
வாகுள சநித பமகரி சவென
வழுத்துபன் னென்றதா மேள
மாமிது வெனவே நான்முறை தெரிந்தோர்
வழுத்தினர் மடமைசேர் மாதே.

(இ- ள்). கோகிலப்ரியா மேள இலக்ஷணம்:—காகலி நிஷாதம்; சாதாரண காந்தாரம்; சதுச்சுருதி தைவதம்; மற்றவை சுத்தமாம்.

இதன் ஜன்யங்கள்:—

(1) வர்த்தனி: (ஆ). சகமபமபதநிச; (அ). சநிபதபமகசா.

(2) கோகிலாரவம்: (ஆ). சரிகரிமபதநிச; (அ). சநிதபமகரிச.

இது பதினோராவது மேளம்.

12. ரூபாவதி மேள ஜன்யங்கள்

155. விள்ளு ரூபாவதியின் மேளத்திற் குமேவு
காகலிநி சாதா ரணகாந் தாரம்,
மள்ளுஷட் சுருதிதை வதம் இதரஞ் சுத்தம்;
மருவு ரேளப்யத்தின் ஆரோக மாகும்,
தள்ளும் ரிக வர்ச்சியம்; அவரோ கணச்சீர்
சதநிப மகநிச வெனச்சாற் றுமீது
கள்ளமிலாப் பன்னிரண் டதாகு மேள
கர்த்தாவா யோதினர் கவிவல் லோரே.

(இ - ள்). ரூபாவதி மேள இலக்ஷணம் :—காகலி நிஷாதம் ; சாதாரண காந்தாரம் ; ஷட்சுருதி தைவதம் ; மற்றவை சுத்தமாம்.

இதன் ஜன்யம் :—

(1) ரௌப்யாககம் : (ஆ) ரி க வர்ஜ்யம் (அ). சதநிபமகரிச.

இது, பன்னிரண்டாம் மேளமாகும்.

13. காயகப்ரியா மேள ஜன்யங்கள்

156. கருது காயகப் பிரியைக்கவ் வந்தரமாங்
காந்தார மற்றது சுத்தம் ;
காணதி லுதித்த ஹெஜுஜியாம் ராகா
ரோகம் நிடதம்வர்ச் சியமாம் ;
விருதவ ரோகம் சதநித பமகரிச
வென்பர் ; மேகரா கத்தில்
விளங்குமா ரோக சரிமப நிதப
சாவென, அவரோக மேவும்
மருவுகாந் தாரம் வர்ச்சியம் ; ஜுஜாஹுலி
ஆரோக ணச்சுரம் வளர்சம
கமபத நிச ; அவ ரோகமாம் சதநித
பமகச வேவா காய
பருகல கண்டி யாரோகம் கவே
வர்ச்சிய மாய்ப் பகர்அவ
ரோகம் பகருவர் மாவர்ச்சிய மெனநூலின்
பகுப்பறிந் தோதும்வல் லோரே.

வேறு

157. காணுமே மேளங் காயகப் பிரியையிலே தோன்றும்
தோணுங் கல்க்கட வாரோகஞ் சரிகபதநி சரூட்டும்
ஆணவா ரோகமாம் சநிதநிப கரிசா வென்னப்
பூணுமே பதின்மூன் றானமேளமும் புகலு நூலே.

---

12. ரூபாவதி

ரௌப்யாககம் என்பதே நேரான பெயர்.

(இ - ள்). காயகப்ரியா மேள இலக்ஷணம் :—அந்தரகாந்தார மாகும் ; மற்றவை சுத்தம்.

இதன் ஜன்யங்கள் :—

(1) ஹெஜ்ஜஜ்ஜி : (ஆ). நி. வர்ஜ்யம் ; (அ). சதநிதபமகரிச.
(2) மேகராகம் : (ஆ). சரிமபநிதபசா ; (அ). கா. வர்ஜ்யம்.
(3) ஜுஜாஹுளி : (ஆ). சமகமபதநிச. (அ). சதநிதபமகச.
(4) கலகண்டி : (ஆ). க. வர்ஜ்யம் ; (அ). ம. வர்ஜ்யம்.
(5) கல்கட : (ஆ). சரிகபதநிச (அ). சநிதநிபகரிசா.

இது பதிமூன்ருவது மேளம்.

14. வகுளாபரண மேள ஜன்யங்கள்

158. அழகிய வகுளா பரணமே ளத்திற்
கந்தர காந்தார மெனவும்,
ஆகிய கைசிகை நிஷாத மற்றது
சுத்தம் ; பூரண மர்கும் ;
வழியென விதனிற் ரேன்றுமி ராகம்
வசந்தபை ரவியி னுரோகம்
மருவுபா வில்லை ; அவரோ கணத்தில்
விளங்கு சுரங்கள் வர்ச்சியமிலை ;
பிழையிலாச் சோம ராகமா ரோகம்
பேர்சரி மபமத நிசசா
பினும்அவ ரோகம் பாவர்ச்சிய மாகும் ;
பெருகு வசந்த முகாரி
விழையுமா ரோகம் சமகம பதநிசா
வெனுமி குமவ ரோகம்
விரிசநி தநித பமகரி சசாவென
விள்ளுமென் றுரைப்பரே மற்றும்.

---

13. காயகப்ரிய

(1) ஹெஜ்ஜஜ்ஜீ : அவரோகணம் மற்ற இரு நூல்களிலும் ஸநிதபமகரிஸ.

(4) கலகண்டி ஸ. சு. (ஆ). ஸரிமபதநிஸ (அ) ஸநிதபமரிஸ.
ரா. ல. (ஆ). ஸ. ஸாஸ.—ஸரிமபதநிஸ (அ) ஸநிதபகரிஸ.

(5) கல்கட் மற்ற நூல்களில் (ஆ) ஸரிகபதநிஸ ; ஸநிதபகரிஸ.

159. காண வகுளா கமலாம னோஹரிக்கு
பூண சகமபநிசா வாரோகமே—பூணும்
அவரோகம் ரிவர்ச்சிய மாகுமே யென்பர்
விவரமதாய்ப் பன்னுன்கு மே.

---

14. வகுளாபரணம்

இச்செய்யுளுக்கு உரை ஏட்டில் எழுதப்பெறவில்லை :

வகுளாபரணத்தின் இலக்ஷணம் :—அந்தரகாந்தாரம் ; கைசிக நிஷாதம் ; மற்றவை சுத்தம்.

ஜன்யங்கள் :—

(1) வசந்தபைரவி : (ஆ). ப இல்லை ; (அ) பூரணம்.

(2) சோமராகம் : (ஆ). சரிமபமதநிச.
(அ). ப. வர்ச்சியம்.

(3) வசந்தமுகாரி : (ஆ). சமகமபதநிசா.
(அ). சநிதநிதபமகரிச.

(4) கமலாமனோஹரி : (ஆ). சகமபநிசா.
(அ). ரி வர்ச்சியம்.

(1) வசந்த பைரவி : அவரோகணம் ஸ. ஞ. வி லும் ரா. ல. த்திலும் ஸநிதமபமகரிஸ. ஆனல், ஸ. ஸா. ஸபத்தில் ஸநிதபமகரிஸ என்றிருக்கிறது. ஸ்ரீ தியாகய்யர் கிருதியில் அவரோகணம் ஸநிதமபமகரிஸ என்றே உள்ளது.

(2) வஸந்தமுகாரி அவரோகணம் மற்ற 3 கிரந்தங்களிலும் ஸநிதபமகரிஸ என்றே உள்ளது.

(3) கமலாமனோஹரி :

இந்த இராகம் கிரமங்கள் சரியாயிருந்தாலும் இது பிற நூல்களில் 27வது ஸரஸாங்கி மேளத்தில் ஜன்யம் என்றும், ஸ்ரீ வெங்கடமகியின் மதப்படியும் ஸ்ரீஸுப்பராம தீக்ஷிதரவர்கள், ஸ்ரீமுத்துஸ்வாமி தீக்ஷிதரவர்கள் (கஞ்ச தளாய தாக்ஷி) இவர்களின் கீர்த்தனங்களிலும், இது 33 வது மேளமாகிற காங்கேய பூஷணியில் ஜன்யமாகவும் காட்டப்பட்டுள்ளது. ஆக 27 அல்லது 33 மேளத்தில் இது ஜன்யமாக இருக்கப் பொருந்தும். இந்நூலில் காட்டியபடி வகுளாபரணத்தின் ஜன்யமாக அமைக்க இதற்குப் பொருத்தமில்லை. ஏனெனில் காகலி நிஷாதம் இருக்கவேண்டிய இது வகுளாபரண ஜன்யமானல் கைசிக நிஷாதமே பெறவேண்டும் ; ஆகவே இதனை

15. மாயாமாளவ கௌள மேள ஜன்யங்கள்

160. அருளு மாயா மாளவக் கவுள
மேளத்திற் கந்தரக் காந்தார
மீதாகு காகலி நிஷாதமற் றசுத்தம்;
பிறப்பாம் நாதநா மக்கிரியா
ஆரோக ணஞ்சரிம கமபத நிசா
வெனுமவ ரோக நிதபம
கரிசா வமையுமே; மேசபவுளியி
னாரோகம் மநி யதாம் வர்ச்சிய
மவரோகண மான சம்பூ ரணமாம்;
கும் மகாம் போதிதனக் காரோகம்
மவர்ச்சியமா மவரோக சம்பூரண
மாம்; லலித பஞ்சமத் தாரோகம்
பவர்ச்சியமாமவ ரோகணம் சநிதம
பமகரிசா; ரேவகுப்திக் காரோக
வவரோகணம் அணியு மநியில்லை;
மலஹரியி, னாரோகணத்தானக நிவர்ச்சியமாகும்.
மருவுமவ ரோகணம் நியில்லை; மாருவா
ஆரோகணச் சுரங்கள் மகிழ்சகமப
தநிதபச அவரோகம் சநிதபமத மபம
கரிசாசா; மன்னு சுத்தக்கிரியா
ஆரோகண சரிபம பதச மற்றுமவ
ரோகணம் வர்ச்சியம்நி; சாவேரி
ஆரோகணம் கநிவர்ச்சியம்; அவரோகணம்
பூர்ணம்; வளர் ஜகன்மோகினிக்
காரோகம் ரிசகமப நிச வென்னு
மவரோகணம் வர்ச்சியம் தா,வதாம்;

இங்கே குறித்தது பிழையாகும். இந்நூலில் 27 ஆவது ஸாஸாங்கி மேளத்திலும் மனோஹரி என்ற இராகம் காணப்படுகிறது. அதுவே சரியான சமலா மனோஹரியாகும்; அங்கும் சிறிது திருத்தம் வேண்டியிருக்கிறது.

ஸ. ஶு. யில் இராகவஸந்தகம் என்று இதே வகுளாபரண மேளத்தில் ஜன்யமாக இருப்பது இந்நூலில் காணப்படவில்லை.

கௌள வாரோகணம் சரிகம ரிமபநிச ;
வடிவுள வவரோகணம் சநிபம
கமரிச வெனவரும் ; பவுளியா ரோகணம்
ம நிவர்ச்சிய மவரோகம் ம வர்ச்சிய
மாயச்சுரம் வளரு சாரங்க நாட்டைத்
தருமா ரோகணம் கநிவர்ச்சிய மவரோக
சநிசத பமகரி சாவாம்
தக்கதுர்ச் சரிராக மாரோக சரிகமபத
நிசவெனு மவரோகணம் சதசநித
பமககரி சாவெனும் ; அவற்றுடன் சாளங்க
நாட்டை பேசுஞ் சரிசம பதச வென்பர் ;
ஆரோக மவரோக சதபச நிசதப
மகரிசா சாற்று மே ; மேகாஞ்சிக்
காரோகணஞ் சரிகம நிசா, அவரோகம்
சநிமக ரிசவெனும் ; பாடி
யாரோகணஞ் சரிமப நிசா வவரோகம்
சநிபத பமரிசவாம் ; பூர்ணபஞ்சமம்
ஸரிகமபத தபமகரிஸ

161. சுரசிந்து வாரோகம் சமகம பதநிசா
சூட்டுமவ ரோகணந் தான்தூய
சநிதப மரிகரி சவென்ப ரிதனடுத்துத்
தேசிய கௌள மேற் றம்துயில்
சரிசப தநிசா வவரோகம் சநிதப
சரிச வெனச்சூட்டு மேலேசொல்
கௌரியா ரோகம் கதவில்லை, அவரோகம்
சூழ்சம் பூர்ண மாமே ;
துலை சிந்து ராமக் கிரியையின் ஆரோகணம்
ரிஇலை சொல்லவ ரோகணம்
சுழல்சநி பதபம கசாவெனும் ; மாருந்ர
தேசியா ரோகணம் தொலைவிலாப்
பூரண மவரோக நிஇலை ; துன்னு
கன்னட பங்காளம் தொடரு
மாரோக சரிமக மபதச வவரோகம்
நியில் லையெனச் சொல்லே.

162. இந்தமா யாமாள வக்கவுள மேளம
தீன்றதுண் டக்ரியைக் கிலகுமா
ரோகணம் கதவர்ச் சியமவ ரோக
நிசநி பதபம கரிசா
வென்னுமே ; மார்க்கதே சிங்காரோ கணமில்லை
மநி ; அவ ரோகண மதற்கு
சதமப கரிசா ; டக்கா ராகத்தினிற்
கிலகுமா ரோகண மதாம்
சந்தியாச் சரிசக மகபம தனிசா
வெனச்சாற் றுமவரோ கணந்தான்
சநிதம கபமரி கசா ; பரு ஜுராகத்
திற்குச் சம்பூர்ண மாரோகணம்
சமையுமவ ரோகணம் சநித மதப
மகரிச ; தகுபூர்வி யாரோகணம்
சரிகமபத நீப சாவவ ரோக சம்பூர்ணம் ;
தழையு மங்கள கைசிகம்
விந்தைகொளு மாரோகம் சமகபம மதநிஸா
வாகுமவ ரோகணந்தான்
விசைகொள் சநிதப மகரிசா ; லலித
மேவுமா ரோகணந் தான்மிகு
சரிசம தநிச வவரோ கணம்சநி
தமகரி ஸாவாமே ; வசந்தா
மேவு மாரோ கணம்சக மதநிசா
மவ்ரோ கணமதே யாகும்.
பந்தமாம் பாவர்ச்சியம் போகவசந் தாவைப்
பகரு மாரோ கணந்தான்
பாழிலா நிவர்ச்சிய மவரோ கணந்தனிற்
பற்றுதப வர்ச்சிய மாக
பழுதற்ற விம்மேள கர்த்தாவை வல்லவர்கள்
பதினெந் தாகு மெனவே
பகர்தரு நான்முறை தெரிந்து சாத் திரமதிற்
பாடினர் கனகமலி மாதே.

(இ - ள்). பதினைந்தாவது மாயாமாளவகௌள மேள இலக்ஷணம் :—அந்தர காந்தாரம், காகலி நிஷாதம், மற்றவை சுத்தமாகும்.

இந்த மேளத்தில் உதித்த இராகங்கள் 33.

1. நாதநாமக்கிரியா : சரிமகமபதநிசா ; (அ), நிதபமகரிசா.
2. மேசபவுளி : (ஆ). ம. நி. வர்ச்சியம் ; (அ). சம்பூர்ணமாகும்.
3. கும்மகாம்போதி: (ஆ). ம. வர்ச்சியம்; (அ). சம்பூர்ணமாகும்.
4. லலித பஞ்சமம் : (ஆ). ப. வர்ச்சியம்; (அ). சநிதமபமகரிசா.
5. ரேவகுப்தி : (ஆ ; அ) ; ம. நி. இல்லை.
6. மலகிரி : (ஆ) ; க. நி. வர்ச்சியம் ; (அ), நி இல்லை.
7. மாருவ : (ஆ). சகமபதநிதபசா; (அ). சநிதபமதமபமகரிசா.
8. சுத்தக்கிரியா : (ஆ). சரிபமபதச ; (அ). நி. வர்ச்சியம்.
9. சாவேரி : (ஆ). க. நி. வர்ச்சியம் ; (அ). பூர்ணம்.
10. ஜகன்மோகினி (ஆ). ரிசகமபநிச ; (அ). த. வர்ச்சியம்.
11. கௌளராகம் : (ஆ). சரிகமரிமபநிசா ; (அ). சநிபமகமரிச.
12. பவுளிராகம் : (ஆ). ம. நி. வர்ச்சியம் ; (அ). ம. வர்ச்சியம்.
13. சாரங்க நாட : (ஆ). க. நி. வர்ச்சியம் ; (அ). சநிசதபமகரிச.
14. குர்ச்சரி ராகம் : (ஆ). சரிகமபதநிச ; (அ). சதசநிதபமகரிசா.
15. ஸாளங்க நாட : (ஆ). சரிசமபதச ; (அ). சதபசநிசதபமகரிசா.
16. மேகாஞ்சி : (ஆ). சரிகமநிசா ; (அ). சநிமகரிச.
17. பாடி ராகம் : (ஆ). சரிமபநிசா ; (அ). சநிபதபமரிஸ.
18. பூர்ண பஞ்சமம் : (ஆ). சரிகமத ; (அ). தபமகரிஸ.
19. சுரசிந்து : (ஆ). சமகமபதநிசா ; (அ). சநிதபமரிகரிச.
20. தேசிய கௌள : (ஆ). கரிசபதநிசா ; (அ). சநிதபசரிச.
21. கௌரி (ஆ). க. த. வர்ச்சியம் ; (அ). சம்பூர்ணம்.
22. சிந்துராமக்ரியை : (ஆ). ரி. வர்ச்சியம் ; (அ). சநிபதபமகசா
23. மாருத்ரதேசி : (ஆ). பூரணம் ; (அ). நி. வர்ச்சியம்.
24. கன்னடபங்காள: (ஆ). சரிமகமதபதச ; (அ). நி. வர்ச்சியம்.

25. குண்டக்ரியை : (ஆ). க. த. வர்ச்சியம் ; (அ). ஸநிபத பமகரிசா.

26. மார்க்கதேசி : (ஆ). ம. நி. வர்ச்சியம் ; (அ). சதமபகரிசா.

27. டக்கா : (ஆ). சரிசகமகபமதநிசா ; (அ). சநிதமகபமரிகசா.

28. பருஜு : (ஆ). சம்பூரணம் ; (அ). சநிதமதபமகரிச.

29. பூர்வி : (ஆ). சரிகமபதநிபசா ; (அ). சம்பூர்ணம்.

30. மங்கள கைசிகம் : (ஆ). சமகமபமதநிசா ; (அ). சநிதபம கரிசா.

31. லலிதா : (ஆ). சரிசமதநிச ; (அ). சநிதமகரிச.

32. வசந்தா : (ஆ). சகமதநிசா ; (அ). ப. வர்ச்சியம்.

33. போகவசந்தா : (ஆ). நி. வர்ச்சியம் ; (அ). த. ப. வர்ச்சியம்.

---

15. மாயாமாளகௌள.

ஸ. சு. இல் 31 ஜன்யங்களும் ஸ. ஸா. ஸ. த்தில் 34 ஜன்யங்களும், ரா. ல. த்தில் 36 ஜன்யங்களும் கூறப்பட்டுள்ளன. இங்குக் கூறப் பெற்றவை 33.

1. நாதநாமக்ரியா : பிற நூல்களில் (ஆ). ஸரிகமபதநி (அ). நிதபம கரிஸநி.

3. கும்மகாம்போஜி : பிற நூல்களில் (ஆ). ஸரிகபதநிதஸ (அ). ஸநிதபமகரிஸ.

7. மாருவ : ஸ. ஸா. ஸ ; ரா. ல. இவ்விரு நூல்களிலும் உள்ள படியே உள்ளன.

14. குர்ஜரி : ஸ. ஸா. ஸ. த்தில் இந்நூலில் உள்ளபடியே இருக் கிறது ; ஸ. சு ; ரா. ல. என்ற இரண்டு நூல்களிலும் அவரோகணம் ஸதநிபமகரிஸ என்று கூறப்பட்டிருக்கிறது.

15. ஸாளங்கநாட வென்றும் ஸாரங்கநாட (13) என்றும் இரண்டு இராகங்கள் இந்த நூலில் உள்ளனபோலவே மற்ற நூல்களிலும் கூறப்படு கின்றன. இவற்றின் பெயர்களோடு கிரமங்களும் வேறுபட்டே காணப் படுகின்றன. இவை இரண்டு தனித்தனி இராகங்களா என்பது ஆராய் வதற்குரியது.

17. பாடி : மற்ற நூல்களில் (ஆ). ஸரிமபநிஸ (அ). ஸநிபதபமரிஸ என்றிருப்பவை இந்நூலில் சிறிது மாறுபாட்டுடன் எழுதப்பட்டிருந்ததை, எழுதியவர் பிழையாயிருக்கு மென்று மாற்றியிருக்கிறோம்.

18. பூர்ணபஞ்சமம்: இந்நூலில் இங்குச் செய்யுளில் ஒரு பகுதி எழுதப்படவில்லை. இதன் (ஆ). ஸரிகமபத ; (அ). தபமகரிஸ என்பதைச் சேர்த்துச் செய்யுள் முடிக்கப்பெற்றுள்ளது.

19. ஸாரவஸிந்து: இங்கு அவரோகணத்தில் ஸநிதபமரிகரிஸ என்பதில், மரி என்பதில் கைத்தவறுதலால் ரி. விடப்பட்டிருக்கிறது. அதைச் சேர்த்து எழுதப்பட்டது.

23. மாருத்ரதேசி: மார்க்கதேசி என்பதே சரியான பெயர். ஆர்த்ரதேசீ என்றும் சொல்வர். இங்குக் குறிக்கப்பட்டுள்ள கிரமம் ஸ. சு. இல் உள்ளபடி இருக்கிறது. ஸ. ஸா. ஸ. த்தில் (ஆ). ஸரிகமபதநிஸ (அ). ஸதமபகரிஸ என்றுள்ளன. ஸ. ஸா. ஸ. வில் உள்ளது பிழையாகும்.

27. டக்கா: இந்த இராகமானது 9-ஆவது மேளமாகிற தேனுகாவில் ஜன்யமாகவும் (ஆ). ஸகபமதநிஸ; (அ). ஸநிதபமகரிஸ என்ற கிரமங்களுடன் சில நூல்களில் காணப்படுகிறது. ஸ. ஸா. ஸ. த்தில் 15-வது மாளவகௌள ஜன்யமாகவும் (ஆ) ஸரிஸகமகபமதநிஸ ; (அ). ஸநிதமகபமரிகஸ என்றும் இத்தமிழ் நூலில் உள்ளபடியே இருக்கிறது. ஸ. சு. இல் இந்த இராகம் இல்லை. ஸ்ரீ வேங்கட மகியின் லக்ஷண சுலோகப் பிரகாரமும் ஸ்ரீ சுப்பராம தீக்ஷதருடைய ஸம்ப்ரதாய ப்ரதர்சனி பிரகாரமும் 15-வது மாளவ கௌள மேளத்தின் ஜன்யமென்றும் உபாங்க ராகமென்றும் (ஆ). இருவிதமாகவும் (அ). இருவிதமாகவும் நிகழுமென்றும் கூறப்பட்டுள்ளது. அவை வருமாறு :—

ஆரோ : ஸகமததநிதஸா.
ஸகமபமகமதநிஸா.
அவ : ஸதமகரிகஸ.
ஸநிதமபமகமரிகஸ.

28. பரஜு: இந்த இராகம் இந்நூலின் மூல கிரந்தங்களான ஸ. சு ; ஸ. ஸா. ஸ. என்ற இரண்டிலுள்ளவை இங்குள்ளவாறே கூறப்பட்டுள்ளது. ஆனால் பிராசீனமாயும், பல நூற்றாண்டுகளாயும், பழைய நூல்களில் காட்டப்பட்டதாயும், இப்பொழுது அநுபவத்தில் உள்ளதாயும் உள்ள கிரமம் (ஆ). ஸகாமபதநீஸ (அ) ஸநிதபமகாரிஸ என்றாகும். இதுவே சரியானதுமாகும் ; ஆரோகணத்தில் ரிஷப வர்ஜ்யமாம்.

29. பூர்வி: இது இந்நூலின் மூலகிரந்தத்தை ஒட்டி லக்ஷணம் சொல்லப்பட்டிருக்கிறது. இது பாஷாங்க ராகமானதால் சாயை தெரிந்து பாடவேண்டும். சில புத்தகங்களில் இதன் கிரமம் ஸரிகமபதநிதஸ அல்லது ஸரிகமதநிஸ என்றும், ஸநிதபமகரிஸ அல்லது ஸநிதபமதமகரிஸ என்றும் காணப்படுகிறது.

16. சக்கிரவாக மேள ஜன்யங்கள்

163. சக்கிர வாகமேள மந்தர
காந்தாரம் சதுச்சுருதி தைவம்
சமையநேர் கைசிக நிஷாத
மிதிற்சனித்த களாவதி யேற்றம்
ஒக்குமே சரிம பதசா
வென்னுரை; அவரோகணச் சுரங்கள்
உறு, சத பமக சரிச வாம்;
வேகவாகினி யாரோக முரைக்கும்
பக்குவச் சரிகம பதநிதச;
அவரோ கணப்பனுவலாம் சநித
பமகரி கரிச வாம்; புஜங்கிணிக்குப்
பன்னுமா ரோகணச் சுரங்கள்
முக்கியச் சரிசமகம நிதநிசா;
மூளவ ரோகணச் சுரங்கள்
முந்து பா. வர்ச்சியம் சநிதமகரி
சாமுழங்கு மெனவுரைக்கு மின்னும்.

164. சக்கரவா கத்திற் சனித்தபிந்து மாலினிக்குப்
பக்கமேற் றம் சரிம பமதநிசா—மிக்க
அவரோ கணம்சதநிப மகரிசா வாகும்
குவிபதினொ ருமேளக் கூறு.

---

31. லலித: இது ஸ. ஸா. ஸ. வின்படி இருக்கிறது. மற்ற முன், பின் நூல்களில் ஸரிகமதநிஸ ஸநிதமகரிஸ என்று உள்ளது. பின்னுள்ளதே சரியான இலக்ஷணம்.

33. போகவஸந்தா: இந்த. இராகம் இந்த மேளத்துக்கு உரியதன்று; கிரமங்களும் சரியாக இல்லை; இப்பெயருள்ள இராகம் 51-ஆவது மேளமாகிற காமவர்த்தநியின் ஜன்யமாகவும், எற்றத்திலும் இறக்கத்திலும் பஞ்சமம் மாத்திரம் வர்ஜ்யமுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இம் மாளவ கௌள மேளத்தில், சில பிரஸித்தமான இராகங்களான ஸௌராஷ்டிரம், கௌளி பந்து, இவற்றின் லக்ஷணங்கள் சொல்லப்படவில்லை என்பதை அறிக.

(இ - ள்). சக்கரவாக மேள இலக்ஷணம் :—அந்தரகாந்தாரம் ; சதுச்சுருதி தைவதம் ; கைசிகை நிஷாதம் ஆகும்.

இதன் ஜன்யங்கள் :—

1. களாவதி : (ஆ). சரிமபதசா ; (அ). சதபமகசரிச.

2. வேகவாகினி : (ஆ). சரிகமபதநிதச ; (அ). சநிதபமகரிகரிச.

3. புஜங்கினி : (ஆ). சரிசமகமநிதநிசா ; (அ). ப. வர்ச்சியம் சநிதமகரிசா.

4. பிந்துமாலினி : (ஆ). சரிமபமதநிசா ; (அ). சதநிபமகரிசா

17. சூரியகாந்த மேள ஜன்யங்கள்

165. சூரிய காந்த மேள மந்தர
காந்தாரம் சதுச்சுருதி தைவம்
சொல்லுகா கலிநி யிதரமாம்
சுத்தம் ; தோன்றிய சுப்பிர தீபம்
ஆரோகம் கா. வே யில்லை ; அவரோ
கமாம்ச நிதபம கமரிசா
ஆம் சிந்து வேற்றம் சமமப
மதசா ; அவரோ கணத்தின் சுரங்கள்
ஊரிய சநிதம பமகரிச
வுற்ற பைர வத் தினு ரோகம்
உற்றது பூர்ண மவரோக ணத்திற்
கோதுமே சதபம கரிசா

---

16. சக்ரவாகம்.

4. பிந்துமாலினி : இந்நூலின் ஆதாரகிரந்தங்களில் இந்த ராகம் காணப்படவில்லை. இங்குச் சொல்லியிருக்கும் கிரமமும் சரியில்லை ; இதன் சரியான கிரமமாவது :—ஸகரிமபதநிபநிஸ ; ஸபநிதபகரிஸ ஆகும். இதைப் பிற்காலத்தில் சிலர் 15-வது மேளத்தின் ஜன்யமென்றும், கிரமங்கள் ஸகரிகமபநிஸ ஸநிஸதபகரிஸ என்றும் தமிழ்ப் புத்தகங்களில் சொல்லியிருக்கிறார்கள். இது ஒப்புக்கொள்ளத் தக்கதாயில்லை.

இதில் முக்கியமான மலயமாருத ராகம் சொல்லப்படவில்லை.

பேரதா மிதனைப் பதினே ழாமேளப்
பெருமையா மெனவ ளமாகப்
பேசுவர் நூலோர் மன்மதன் மலரம்பி
னிறகுநேர் விழியுள மாதே.

(இ - ள்). பதினேழாவது சூரியகாந்தமேள இலக்ஷணம்; அந்தர காந்தாரம், சதுச்ருதி தைவதம், காகலி நிஷாதம் ; இதரம் சுத்தமாகும்.

இதன் ஜன்யங்கள் :—

1. சுப்பிரதீபராகத்திற்கு : (ஆ). க. இல்லை ; (அ). சநிதபமகம ரிசா.

2. சிந்து ராகத்திற்கு : ஏற்றம் சமமபமதசா ; (அ). சநிதமப மகரிசா.

3. பைரவத்திற்கு : (ஆ) பூரணம்; (அ). சதபமகரிசா. இதனைப் பதினேழாவது மேளம் என்பர் (எ - று).

18. ஆடகாம்பரி மேள ஜன்யங்கள்

166. ஆடகாம் பரிமே ளம்தனக் கந்தர
காந்தா ரம்மதன் மீதான
ஷட்சுதி தைவத காகலி
நிஷாத மதில்வரு சுத்தமா ளவிக்குந்
தேடுமா ரோகம் சகரிக மபத
நிச ; அவ ரோகணஞ் செப்பும்
தீர்த்தபூ ரணமாம் ; சிம்மளா ரோகம்
சேருமே பூரண மாக
நீடவ ரோகம் சநிதநி பமகரி
ச. நிகழுங் கல்லோல மாரோகம்
கொடிது ரி. வர்ச்சியம் ; அவரோகஞ்
சநித நிபம கசா வென்பர் மேலே

---

17. சூரியகாந்தம்

2. ஸிந்து ராகம் : இது ஸ. சூ. இல் இல்லை ; ஸ. ஸா. ஸ. த்தில் இருக்கிறது. ஜயஸிந்து அல்லது ஸிந்துரத்ன என்று மற்றொன்று 29-ஆவது சங்கராபரணத்தில் ஜன்யமுள்ளது ஒன்றுண்டு. அது வேறாகும்.

மேடநேர் திவ்ய காந்தாரி
யேற்றம் மிகுந்தகா விலை; அவரோகம்
விள்ளுமே சநிதப மதப
மகசா பதினெட் டதாமேளம்.

(இ - ள்). ஆடகாமபரி மேள இலக்ஷணம், அந்தர காந்தாரம், ஷட்சுதிதைவதம், காகலி நிஷாதமாகும்.

இதன் ஜன்யங்கள் :—

1. சுத்த மாளவி ராகத்திற்கு : (ஆ). சகரிகம்பதநிச ; (அ). பூர்ணம்.

2. சிம்மளா ராகத்திற்கு : (ஆ) பூர்ணம் ; (அ) சநிதநிபமகரிச.

3. கல்லோலம் : (ஆ). ரி. வர்ஜ்யம் ; (அ). சநிதநிபமகச.

4. திவ்யகாந்தாரி : (ஆ). க. இல்லை ; (அ). சநிதபமதபமகச.

19. ஜங்காரத்தொனி மேள ஜன்யங்கள்

167. சங்காரத் துவனிக்குச் சதுச்சுருதி ரிஷபம்
சாதா ரணமதாங் காந்தாரம்
தவிர்ந்தது சுத்த மதின்பிறப் பானஜங்
காரப் பிரியா ரோகம்
தங்கிய சகரிக மபதநி தசா ; அவ
ரோகம் தநிதப மகரி
சாற்றுமே பூர்ண லலிதாவா ரோகம்
சசரிக ரிமபச ; இறக்கம்

---

18. ஹாடகாம்பரி

2. இங்கு ஸிம்ஹளா ராகத்தின் அவரோகணத்தை ஸநிதநிபமகரிஸ என்று திருத்தப்பட்டிருக்கிறது.

3. கல்லோலத்தில் ஆரோகணம் ஸ. சு. வில் ஸபதநிஸ என்றுமட்டும் மாறுதலாகவுள்ளது. மற்ற நூல்களில் இந்நூலில் உள்ளபடியே இருக்கிறது.

4. திவ்யகாந்தாரம் என்றிருக்க வேண்டும். இதன் கிரமம் சில தமிழ்ப் புத்தகங்களில் ஸமரிபதநிஸ ; ஸதநிபமகஸரிஸ என்று காணப்படுகிறது. திவ்யகாந்தாரி என்று மற்றொரு ராகம் நடனபைரவி ஜன்யமாகத் தமிழ்ப் புத்தகங்களிற் காணப்படுகிறது. இந்நூலிலுள்ள கிரமங்கள் வேறாயிருக்கின்றன. திவ்யகாந்தாரம் என்ற இராகம் ஸ. சு ; ஸ. ஸா. ஸ ; ரா. ல. இவைகளில் இல்லை.

பொங்கு பூரணமாம் ; சித்திராஞ் சநிக்குப்
பொருந்துமா ரோகணச் சுரங்கள்
புகழ்ந்திடும் பாவே வர்ச்சிய
மிறக்கம் புகலும் சபாம கரிசசா
வங்கிலா விதைப்பத் தொன்பதாம் மேளமா
மென்பர் நூல்முறை தெரிந்தோர்
வனத்துறும் கிளியைப் பழித்திடு மொழிகள்
வழுத்திடும் கமலமின் னரசே.

(இ - ள்). ஜங்காரத்தொனி மேள இலக்ஷணம் :—சதுச்ருதி ரிஷபம், சாதாரண காந்தாரம், மற்றவை சுத்தம்.

1. ஜங்காரப்பிரியா ராகத்திற்கு, சகரிகமபதநிசா ; (அ). நிதப மகரி.

2. பூரணலலிதா : (ஆ). சசரிகரிமபசா ; (அ). பூர்ணம்.

3. சித்தரஞ்ஜனி : (ஆ). ப. வர்ஜ்யம் ; (அ). சபமகரிச.

இவைகளைப் பத்தொன்பதாவது மேள மென்பர்.

20. நட்பைரவி மேள ஜன்யங்கள்

168. தசைகொள் நடபைரவி சதுச்சுருதி ரிஷபமே
சாற்று சாதாரண காந்தாரம்
சாற்று கைசிகி நிஷதமற் றசுத்த
மிதிற் சனித்த பயிரவியி
னேற்றம் சகரிகம பதநிசா அவரோ
கணத்தியல்பு சம்பூரணம் ; ரீதி
கௌளம் சகரிக மநிதநிசா வேற்ற
மிறக்கம் சநிதம கமப

---

19. ஜங்காரத்தொனி

1. ஜங்காரப்ரமரி : ஸ. சு. (ஆ). ஸகரிகமபதநிதஸ (அ). ஸநி தபமகரிஸ.

ஸ. ஸா. ஸ. (ஆ). ஸரிகமபதநிஸ (அ). தநிதப மகரிஸ.

2. சித்த ரஞ்ஜனி : இதன் சரியான கிரமம் (ஆ). ஸரிகமபத (அ). நிதபமரிகரிஸ அல்லது (ஆ). ஸரிகரிகமபத (அ). நிதபமரிகரிஸ என்றே சில புத்தகங்களிற் காணப்படுகிறது. முதலில்சொல்லப்பட்டதே சரியாகு

கரிசா ; தனி தேவகாந்தாரி யேற்றம்
ரிதவர்ச்சியமாம் சநிதப தபமகரிசா,
தாழுமவ ரோகம் ; ஜயந்தஸ்ரீ யேற்றமது
சகமத நிசா அவரோகம்
சநிதம பமகசசா ; சுத்தந் தனியா
சிக்கு மேற்றம், ரித வர்ச்சியமாம்
சருவுமவ ரோகணம் சநிபம கசாவெனத்
தழையும் ; ஹிந்தோள மேற்றம்
வசையிலா சமகம தநிசசா அவரோகணம்
வளரு பரிவர்ச்சிய மாகும் ;
மகிழு மாபேரி சகாம பநிசா ஏற்றம்
அவரோகம் பூரண மதாம் ;
மாசிலா வுதயரவி சந்திரிகை யேற்றமாய்
வந்த ரித இலெ இறக்கம்
மங்களத் தரிவர்ச்சியம் ஆனந்த பைரவியி
னேற்றஞ் சகம பதபசா
மட்டிலா வவரோகம் பூரணம தாகும் ;
தேவக்ரியை ஆரோகணம் மன்னு
சசரி சககமநி அவரோகணம் வரும்பத
மகரிச வெனவே வளரிந்து
கண்டாவி னேற்றம் ஸகமத பநித
பமகரிசா வவரோகம் ; வசந்த
வராளி ஸரிமப தநி ஆரோகம்
அவரோகம் தபகரி ஸாவாம்.
பசைகொளு நாக காந்தாரி யேற்றம்
சரிகம பதநி அவரோ
கணம்பன்னு நிதபம கரிசா ; மாஞ்சி
யேற்றம் சரிகம நிதநி பதநிசாவெனப்
பங்கு மவரோகம் சநிதப மகம
பகரிச ; பகர்சுத்த தேசி
யேற்றம் பண்பு காவர்ச்சியமாமவ
ரோகம் பூரணம் ; பருமார்க்க
ஹிந்தோளி மேற்பற்றுப் பூரணம தாம்வ
ரோகணத்தின் பருப்பும் பூரணமதாகும் ;

பாகு கனக வசந்த வாரோகம் சககம
பதச அவரோ கணம்
பூரணம் ; பனே கோபிகா வசந்தா
வேற்ற மாக சமபநி தநிதசா
அவரோகம் பதிவு மதாம் ; சாபகண்டார
வம் சகமபநியவரோகணம்
திசைகொளுந் தமகரி நிசா ; ஹிந்தோள
வசந்த செல்லுமே யாரோ
கணச்சீர் சகமப தநிசா வவரோகம்
சநிதப மதமக சாதிகழும் ;
மேலே திரளமிர்த வாகினியி னேற்றமே
காவர்ச்சியக் தேரு மவம்ப
வர்ச்சிய மாய்ச்செப்பும் ; ஜிங்கள
வேற்றஞ் சரிகம பதநித
பசாசெலு மிறக்கம் பூரணம் ; திரளு
மக்கினி கோப மாரோக
மவரோகஞ் சேர் த இல்லே ; மேலே
திகழுங் கமல வசந்தா
வேற்றம் ரித இல்லே திடசநித மகசரிசா
சிறக்கு மவரோகணஞ் சார
மதியி னேற்றஞ் சேர்ந்த பூரணம
தென்பர் செப்பு மவரோகணம்
சதபம கரிச வெனச்செ
யலறிந் துரைமாதே.

169. பங்க மிலாநட பைரவி யின்மேளம்
பகருமே யாதி பைரவியி னேற்றம்
பொங்கு சமகம பதசவ வரோகச்சீர்
புகழு மவர்ச்சியம் ஆஹோரி யேற்றம்
தங்கு சரிகம மநிசா அவரோகந்
தான்சாற் றுமவர்ச்சிய மென்பரி தனே நூலோர்
இங்கி தஞ்சே ரிருபதுவாம் மேளகர்த்தா
ஏற்குமென மூதறிவா லிசைத்தார் மானே.

(இ - ள்). இச்செய்யுள் முதல் பின்வருவனவற்றிற்கெல்லாம் ஏட்டில் உரை எழுதப்பெறவில்லை.

நடபைரவி மேள இலக்ஷணம் :—சதுச்சுருதி ரிஷபம் ; சாதாரண காந்தாரம் ; கைசிகி நிஷாதம் ; மற்றவை சுத்தம்.

ஜன்யங்கள் :—

1. பைரவி : (ஆ). சகரிகமபதநிசா ; (அ). பூர்ணம்.

2. ரீதிகௌள : (ஆ). சகரிகமநிதநிசா ; (அ). சநிதமகபமகரிச.

3. தேவகாந்தாரி : (ஆ). ரி.த. வர்ச்சியம்; (அ). சநிதபதபமகரிச.

4. ஜயந்தஸ்ரீ : (ஆ). சகமதநிசா ; (அ). சநிதமபமகசசா.

5. சுத்ததந்யாஸி : (ஆ). ரி.த. வர்ச்சியம் ; (அ). சநிபமகசா.

6. ஹிந்தோளம் : (ஆ). சமகமதநிசசா; (அ). ப.ரி. வர்ச்சியம்.

7. ஆபேரி : (ஆ). சகாமபநிசா ; (அ). பூரணம்.

8. உதயரவிசந்திரிகை : (ஆ). ரி.த. வர்ச்சியம் ; (அ). த.ரி. வர்ச்சியம்.

9. ஆலாந்தபைரவி : (ஆ). சகமபதபசா ; (அ). பூரணம்.

10. தேவக்ரியை : (ஆ). சரிசககமநி ; (அ). பதமகரிச.

11. இந்துகண்டா(ரவம்) : (ஆ). சகமபதபநித ; (அ). பமகரிச.

12. வசந்தவராளி : (ஆ). சரிமபதநி ; (அ). தபகரிச.

13. நாககாந்தாரி : (ஆ). சரிகமபதநி ; (அ). நிதபமகரிச.

14. மாஞ்சி : (ஆ). சரிகமநிதநிபதநிசா ; (அ). சநிதபமகமபகரிச.

15. சுத்ததேசி : (ஆ). கா. வர்ச்சியம் ; (அ). பூரணம்.

16. மார்க்கஹிந்தோளி : (ஆ). பூரணம் ; (அ). பூரணம்.

17. கனகவசந்த : (ஆ). சககமபதச ; (அ). பூரணம்.

18. கோபிகாவசந்த : (ஆ). சமபநிதநிதச ; (அ). பூரணம்.

19. சாபகண்டாரவம் : (ஆ). சகமபநி (அ). தமகரிநிச.

20. ஹிந்தோளவசந்தா : (ஆ). சகமபதநிச ; (அ). சநிதபமதமகச.

21. அமிர்தவாகினி : (ஆ). கா. வர்ச்சியம் ; (அ). ப. வர்ச்சியம்.

22. ஜிங்கள : (ஆ). சரிகமபதநிதபச ; (அ). பூரணம்.

23. அக்கினிகோபம் : (ஆ). த. வர்ச்சியம் ; (அ). த். வர்ச்சியம்.

24. கமலவசந்தா : (ஆ). ரி. த. இல்லை ; (அ). சநிதமகசரிச.

25. ஸாரமதி : (ஆ). பூரணம் ; (அ). சதபமகரிச.

26. ஆதிபைரவி : (ஆ). சமகமபதசவ ; (அ). ம. வர்ச்சியம்.

27. ஆஹோரி : (ஆ). சரிகமமநிசா ; (அ). ம. வர்ச்சியம்.

---

20. நடபைரவி

நரபைரவி என்றும் கூறுவர்.

1. பைரவி : ஸ. சு ; ஸ. ஸா. ஸ : (ஆ). ஸரிகமநிதநிஸ ; (அ). ஸநிதமகரிஸ :

2. ரீதிகௌள : இந்நூலில் உள்ளதே சரியாயிருக்கிறது. ஆனால் ஸகரிகமநிநிஸ என்றிருப்பது உசிதம். இதன் ஆதார நூல்களில் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு விதமாயுள்ளது. அவை சரியாயில்லை.

3. தேவகாந்தாரி : இது தேவகாந்தாரம் என்று சொல்லப்பட வேண்டும். இந்த ராகம் மிகப் பழமையானது. இதில் வேங்கடமகி கீதம், புரந்தரவிடலதாஸருடைய ஸூளாதிகள், பெத்ததாஸர் கீர்த்தனம் முதலியன இருக்கின்றன. இதை 22-வது மேளமாகிற காஹரப்ராயாவின் ஜன்யமாக—அதாவது ஸ்ரீவேங்கடமகியின் ஸ்ரீராகமேளத்தின் ஜன்யமாகச் சொல்லியிருக்கிறார்.

இராகலக்ஷணம் என்ற புத்தகத்தில் மாத்திரந்தான் நடபைரவி ஜன்யமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதன் ஏற்ற இறக்க ஸ்வரங்கள் இந்நூலில் கூறப்பெற்றவை சரியே. பிறகு சங்கராபரணத்தில் ஜன்யமாகவே ஒரு தேவகாந்தாரி வேறு கிரமத்துடனும், சுமார் 2 நூற்றாண்டுகட்கு உட்பட்டு ஏற்பட்டும், இக்காலத்தில் பிரசித்தமாயும் விளங்குகிறது. அதைத் தேசிய தேவ காந்தாரி எனலாம்.

5. சுத்ததந்யாஸி : இதுவும், உதயரவிசந்திரிகா என்ற ராகமும், ஸ. ஸா. ஸ. த்தில் நடபைரவியின் ஜன்யமாக, இங்குக் கூறப்பட்ட ஸ்வரக்ரமங்களோடு காட்டப்பட்டுள்ளன. ஸ. சுவில் சுத்ததந்யாஸியை கரகரப்ரியா 22-வது மேளத்தில் ஜன்யமாகப் போடப்பட்டிருக்கிறது. உதயரவிசந்திரிகா நடபைரவியில் போடப்பட்டிருக்கிறது. ஸ்வரக்ரமங்கள் ஒன்றே. இது பொருத்தமாகவும் சரியாகவும் இல்லை. சுத்த தந்யாஸி ராகம் கரகரப்பிரியா மேளத்தின் ஜன்யமாக இருப்பது உசிதமே. உதயரவிசந்திரிகாவின் ஆரோகண அவரோகணங்கள் ஸகமபநிஸ—ஸநிபமகஸ

என்றிருந்தபோதிலும், இதை ஸ்ரீவேங்கடமகி 9-வது மேளமாகிய இப்போதைய தேனுகாவில் ஜன்யமாக அமைத்திருக்கிறார்; கீதமும் இருக்கிறது. ஸ்ரீமுத்துஸாமிதீக்ஷிதர் கிருதியும் உள்ளது. இதற்குக் காகலி நிஷாதமாகும். கிரமங்கள் இரண்டுக்கும் ஒருவாறு ஒன்றாயிருப்பதனால், லக்ஷ்யத்தில் நாளடைவில் இரண்டும் கைசிக நிஷாதம் ஏற்பட்டு, பைரவி, கரஹரப்ரியா, இவ்விரண்டிற்குள் ஒன்றில் அவரவர் மனம்போல் ஜன்யமாக, வேங்கடமகிக்குப் பிற்காலத்தில் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆகையினால் சுத்ததந்யாஸி 22-வது அல்லது 20-வது மேளத்திலும், உதயரவி சந்திரிகா 9-வது மேளத்திலும் இருப்பதே நியாயமாகும்.

9. ஆனந்தபைரவி: ஸ. சு. இல் ஸரிகமபதபஸ என்றும், ஸகமபதபஸ என்று ஸ. ஸா ஸ த்திலும் ஆரோகணம் சொல்லப்பட்டுள்ளது.

10. தேவக்ரியா: ரா. ல. த்தில் (ஆ). ஸரிகமநிதநி; (அ). பதமகரிஸநி. ஸ. ஸ்மு. இல் (ஆ). ஸரிகமநிதநித; (அ). பதமகரிஸ.

குறிப்பு:—

இந்த ராகத்தின் (ஆ). ஸரிமபநிஸ; (அ). ஸநிதநிபமகரிஸ. 20-வது மேளம் நடபைரவி ஜன்யமென்றும், சதுஸ்ருதி தைவத பிரயோகமும் ரிகம, பதநி என்ற விசேஷப் பிரயோகமும் உண்டென்றும் சென்னை ஸங்கீத வித்வத் சபையில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

11. இந்து கண்டாரவம்: ஸ. சு. வில் (ஆ). ஸகமபதபநிஸ; (அ). நிதபமகரிஸ.

14. மாஞ்ஜி: பிற நூல்களிற் காணும் கிரமங்கள்:—(ஆ). ஸரிகமபதநிஸ; (அ). ஸநிதபமகரிஸ. இந்நூலில் உள்ளதே விசேஷமாக இருக்கிறது.

16. மார்க்கஹிந்தோளம்: ஸ. சு; ரா. ல. இவற்றில் அவரோகணத்தில் ரி. வர்ஜியம் என்று கூறப்பட்டுள்ளன. ஸ. ஸா. ஸ. த்தில், ஏற்றம் இறக்கம் ஸம்பூர்ணம் என்றுள்ளது. ரி. அவரோகத்தில் வர்ச்சியமேயாகும்.

17. கனகவஸந்தா: ஸ. சு; ரா. ல; இவற்றில் (ஆ). ஸகமபநிதஸ; (அ). ஸநிதபமகரிஸ.

18. கோபிகாவஸந்தா: மற்ற மூன்று நூல்களிலும் அவரோகணத்தில் ரி வர்ஜியம்.

20. ஹிந்தோளவஸந்தா: மற்ற மூன்று நூல்களிலும் ஆரோகணத்தில், ஸகமபதநிதஸ என்றுள்ளன.

23. அக்னிகோபம்: (ஆ). ஸரிகமபநிஸ; (அ). ஸநிபமகஸ என்று இறக்கத்தில் ரி வர்ஜியமாகவும் கூறுவது மதாந்தரம். இந்த இராகம்

21. கீரவாணிமேளம் ஜன்யங்கள்

170. இதம்பெறு கீர வாணி மேளத்திற்
கினிசதுச் சுருதி ரிஷபம்
ஏற்றிடும் சாதா ரணகாந் தாரமா
யியம்பிடுங் காகலி நிடாதம்;
கதிகொள விதனுட் டோன்றும் ஜயஸ்ரீ
கானஆ ரோகம், நேருசரி
கமபத நிதச; அவரோகம் பூரண
ம்;கனி கிரனுவலி ஏற்றம்
திதிபூ ரணமாகும்; அவரோகம் நிதவர்ச்
சியமதாம்; மாதவி தனக்குச்
செப்புமேற் றம்ச மகம பதநிசா
செலுமவ ரோகணச் சுரங்கள்
பதவி யாம்சநி தபம சமகரிசா;
பகுத்த கல்யாணி வசந்தா
பனுவ லேற்றத்தில் ரிபஇலே; அவரோ
கணம்பூர் ணமாமெனப் பற்றே.

இந்நூலின் ஆதாரகிரந்தத்தில் இல்லை. ஸநிபமகரிஸ என்று இறக்கம் இருந்தால் புஷ்பலதிக என்ற இராகமாகி விடும்.

24. கமலவஸந்தா: வஸந்தா என்று இறுதியில் வரக்கூடிய இரா கங்கள் ஏறக்குறைய 15 இருக்கின்றன. அவற்றுள் இந்த இராகம் 37-வது மேளம் ஸாலகத்தில் ஜன்யமாகவும், கிரமங்கள் வேருகவும் சில புத்தகங்களில் காணப்படுகிறது. ஸ. சூ; ஸ. ஸா. ஸ. இவற்றில் இது இல்லை. இந்நூலில் இது புதிதாய்ச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

25. ஸாரமதி: இதில் அவரோகணம் ஸநிதமகஸரிஸ என்பதே பிழையற்றதாகும்,

26. ஆதிபைரவி: என்பதும் ஓர் அபூர்வ இராகமே. இதன் கிர மங்கள் (ஆ). ஸகமதநிதஸ; (அ). ஸநிதபமகரிஸ என்று சில புத்தகங் களிற் காணப்படுகிறது. இந்த இராகம் அநேகம் நூல்களில் இல்லை.

27. ஆஹோரி: இதுவும் ஓர் அபூர்வ இராகம். இதன் ஏற்றம் இறக்கம் ஸரிகமபதஸ; ஸநிதபமகரிஸ என்பவை. மற்ருெரு நூலில் இவை ஸரிகரிமபதநிதஸ; ஸநிதமகரிஸ என்றிருக்கின்றன. இதனை ஹாஹோரி என்பதும் உண்டு.

171. கலைகீர வாணிக்குள் கர்னுடகத் தேவ
காந்தாரிக்கு
நிலையேற்றம் நிசகம பா;அவ ரோகம்
தபமகரி சநியென் றோதும் ;
குலைசஞ் சீவினி யேற்றம் சரிமப
நிதநிபசா கொளுமி றக்கம்
மலைசதா மபம கரிசா யிருபத்
தோர்மேள வகையி தாமே.

(இ - ள்). கீரவாணி மேள இலக்கணம் : சதுச்சுருதி ரிஷபம் ; சாதாரண காந்தாரம் ; காகலி நிஷதம் ; மற்றவை சுத்தம்.

இதன் ஜன்யங்கள் :

1. ஜயஸ்ரீ : (ஆ). சரிகமபதநிதச ; (அ). பூர்ணம்.
2. கிரணுவளி : (ஆ). பூரணம் ; (அ). நி.த. வர்ஜியம்.
3. மாதவி : (ஆ). சமகமபதநிசா ; (அ). சநிதபமசமகரிச.
4. கல்யாணவசந்தா : (ஆ). ரி.ப. வர்ஜியம் ; (அ). பூர்ணம்.
5. கர்னுடகதேவகாந்தாரி : (ஆ). நிசகமப ; (அ). தபமகரிசநி.
6. சஞ்சீவினி : (ஆ). சரிமபநிதநிபசா ; (அ). சதமபமகரிசா.

இது, இருபத்தோராம் மேளம்.

22. கரஹரப்ரிய மேள ஜன்யங்கள்

172. கரகரப் பிரிய மேளமது சதுச்ருதி
ரிஷப காந்தாரம் சாதாரண
கனசதுச் சுருதிதைவதங் கைசிகை
நிஷாத மாய்க்காணு மிதிலே
யுதித்துக் கதிகொள் ஸ்ரீராக மேற்றம்
கதஇலை இறக்கத்தின் சுரங்களாகக்

---

21. கீரவாணி

6. ஸஞ்ஜீவினி : இதன் ஸ்வரக்ரமங்கள் (ஆ). ஸரிஸசமபநிஸ ; (அ). ஸநிதநிபமகரிஸ என்று விசேஷமாய்ச் சில புத்தகங்களிற் காணப்படுகின்றன. மற்ெருரு புத்தகத்தில் இது நடபைரவி மேளத்தில் ஜன்யமாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆனல், பெரும்பாலும் காணப்படுவது கீரவாணியின் ஜன்யமாகவேதான்.

காணுச நிபத நிபமரி கரிசா என்னுமேல்
காதல்கொளு மாளவஸ்ரீ கவரு
மேற்றம் சமகம பநிதநி பதநிசா
கையிறக்கம் பரிகுறையதாம்
காணு சயந்த சேனு வேற்றம் ரிநிகுறை
கமழிறக்கம் ரிகுறை ; கன்யா
மந்திமா வதியேற்றம் கதகுறை : கழறி றக்கம்தக
குறைகா மிசைந்தவி யேற்றம் நிதநி சரிகம
பதநிசா வென்ப ரவரோகணம்,
சுருள்சநி தபம கரிச நிதநிசா
வாகுமே ; சுத்த பைரவியி
னேற்றந் தோணு சகமநிதசா
அவரோகம் பாவர்ச்சியந்தூய
மாருவ தன்யாசி தூங்கு மேற்றம்
ரிநிவர்ச்சிய மவரோகணந்
தொல்சநிதப மதம கரிசா ; சுத்தவா
போகியா ரோகணம் பநி இலை
சூழும் நிபஇறக்கம் துன்னு சாளக
பைரவியி னேற்றம் கநி
வர்ச்சியம் துலையிலவ ரோகம்பூரணம் ;
துள்ளுமணி யரங்கி னேற்றம்
சரிமக மபநிசா தோயிறக்கந் தஇலை
துய்ய ஜய நாராயணியி
னேற்றம் நிஇலைத் துதியிறக்கம்பூரணம்
தொகையான பல மஞ்சரியி னேற்றம்
ரிபநிஇலை சோதியாமவரோகணம்,
நிருசநி தபமக மரிசா செல்லுமே
களாநிதியி னுரோகணந்தான்
நேர்சரி கமசப மதநிச வதாமவ
ரோக நீங்கிடாப் பூரணமதாம்
நிணசிந்து தன்யாசி யாரோகம் ரிதஇலை
கீழிறக்கம் தரிஇலை நேசமாகிய
மனோகரியி னேற்றம் சகரிகமபதச
நேரிறக்கம் நிஇல்லை பஞ்சம

ராக மாரோக மாய்நிகழ் சரிததபநி
　　சாசாநிலை பூரண மவரோகம்
சித்தசே னுவேற்ற நி இல்லை யவரோ
　　கணம் நின்ற சநிதம
பமரிக ரிசவாம் சுத்தபங் காளங்
　　கநி இலை நில்லாத வவரோகம்
சதபம ரிகரிச வாம்நீதி
　　மஞ்சரியி னேற்றம்,
வருச கரிகம பநித நிசவ
　　வரோகணம் வாகுபூ ரணம தாகும்
மகிழ்வு சாவீமு னேற்றம் சரிகம
　　பநித நிசாவவ ரோகணச்
சுரங்கள் வாள சநிதப மபமா
　　கரிச ; காபியி னேற்றம்
மன்னுபூ ரணமதாக வஞ்சிகே ளவரோகம்
　　சநிதப மரிகம ரிசஆன
ஸ்ரீரஞ்சனிக்கு வர்த்திக்கு மாரோக
　　மவரோக பஇல்லை வளர்மு
காரியி னேற்றமே மருசரி மபதநி
　　தசவவரோகணம் வரையுமே
பூரண மெனவவ் திடுங்தேவ மனேகரியி
　　னேற்றமேல் வளைசரி மபதநி
வாம்வாசியா மவரோகம் சநிதநி
　　பமரிசவாயமருவுமிது கமலமாதே.

173. கன்னட கவுளவேற் றந்தா வில்லை ; இறக்கம் ரீயே
முன்னிலை ; நாதரங் கினியி னேற்ற மதாயி லமோகம்
பன்னவ வரோகம் பூர்ணம் ; பகர் தர்ப் பார்கஇலை
[யேற்றம்
மன்னவம் சசநி தாமம பதப காரி சாவே.

174. ஆங்கரக ரப்பிரிய பிர்ந்தாவனசா ரங்க ஏற்றம்
பூங்குழலீர் காதவர்ச்சியம் புல்லுமே ;—தாங்குமவ
ரோகணம்ச நிபமரி காமரிசா ரூபமிது
வாகுமிரு பத்திருமே ளம்,

(இ - ள்). கரஹரப்ரியா மேள இலக்ஷணம் சதுச்ருதி ரிஷபம்; சாதாரண காந்தாரம்; சதுச்ருதி தைவதம்; கைசிகை நிஷாதம்.

இதன் ஜன்யங்கள் :—

1. ஸ்ரீராகம் : (ஆ). க. த. வர்ஜ்யம் ; (அ). சநிபதநிபமரிகரிசா

2. மாளவஸ்ரீ : (ஆ). சமகமபநிதநிபதநிசா ; (அ). ப. ரி. வர்ஜ்யம்.

3. ஜயந்த சேனை : (ஆ). ரி. நி. வர்ஜ்யம் ; (அ). ரி. வர்ஜ்யம்.

4. மத்திமாவதி : (ஆ). க. த. வர்ஜ்யம் ; (அ). த. க. வர்ஜ்யம்.

5. சைந்தவி : (ஆ). நிதநிசரிகமபதநிச ; (அ) சநிதபமகரிச நிதநிச.

6. சுத்தபைரவி : (ஆ). சகமநிதசா ; (அ). ப. வர்ஜ்யம்.

7. மாருவதன்யாஸி : (ஆ). ரி. நி. வர்ஜ்யம் ; (அ) சநிதபமதம கரிசா.

8. ஆபோகி : (ஆ). ப. நி. வர்ஜ்யம் ; (அ). நி. ப. வர்ஜ்யம்.

9. சாளகபைரவி : (ஆ) . க. நி. வர்ஜ்யம் ; (அ). பூரணம்.

10. மணிரங்கு : (ஆ). சரிமகமநிசா ; (அ). த. வர்ஜ்யம்.

11. ஜய நாராயணி : (ஆ). நி. வர்ஜ்யம் ; (அ). பூர்ணம்.

12. பலமஞ்சரி : (ஆ). ரி. ப. நி. வர்ஜ்யம் ; (அ). சநிதபமக மரிசா.

13. களாநிதி : (ஆ). சரிகமசபமதநிச ; (அ) பூர்ணம்

14. சிந்து தன்யாசி : (ஆ). ரி. த. வர்ஜ்யம்; (அ). த. ரி. இல்லை.

15. மனோஹரி : (ஆ). சகரிகமபதச ; (அ). நி. வர்ஜ்யம்.

16. பஞ்சமராகம் : (ஆ). சரிததபநிசச ; (அ). பூர்ணம்.

17. ரித்தசேனை : (ஆ). நி. வர்ஜ்யம் ; (அ). சநிதமமபரிகரிச

18. சுத்த பங்காளா : (ஆ). க. நி. வர்ஜ்யம் ; (அ) சதபமரிகரிச

19. மஞ்சரி : (ஆ). சகரிகமபநிதநிச ; (அ). பூர்ணம்.

20. உசானி : (ஆ). சரிகமபநிதநிச ; (அ). சநிதபமபமாகரிச

21. காபி : (ஆ). பூர்ணம் ; (அ). சநிதபமரிகமரிச.

22. ஸ்ரீரஞ்சனி : (ஆ). ப. வர்ஜ்யம் ; (அ). ப. வர்ஜ்யம்.

23. முகாரி : (ஆ). சரிமபதநிதச ; (அ). பூர்ணம்.

24. தேவமனோகரி : (ஆ). சரிமபதநிச ; (அ). சநிதநிபமரிச.

25. கன்னடகவுள (ஆ). த. வர்ஜ்யம் ; (அ). ரி. வர்ஜ்யம்.

26. நாததரங்கிணி : (ஆ). த. வர்ஜ்யம் (அ). பூர்ணம்.

27. தா்பார்: (ஆ). க. வா்ஜ்யம; (அ). சநிதமமபதப்பகரிச.

28. பிருந்தவனசாரங்கா (ஆ). க. த. வா்ஜ்யம்; (அ). சநிபமரிகமரிச.

இவை இருபத்திரண்டாம் மேளமாகும்.

---

22. கரஹரப்ரிய

5. ஸைந்தவி: இதற்கு (ஆ): நிதநிஸரிகமபதநி (அ). நிதபமகரிஸநிதநிஸ என்றும் கிரமம் உண்டு. நிஷாதாந்த்ய இராகமாகவும் இதைக் கருதுவதுண்டு.

7. மாருவதன்யாஸி: ஸகமபதநிதபநிஸ என்றும் ஏற்றம் உண்டாம்.

10. மணிரங்கு: இதில் உள்ளபடியே கிரமம் ஸ. ஸா. ஸ. த்திலும் ஸ. சூ. இலும் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனல், இக்காலத்தில் அநுபவத்தில் (ஆ). ஸரிமபநிஸ (அ) ஸநிபமகரிஸா என்றே உள்ளது. இதுவே சரியானதுமாகும்.

14. ஸிந்துதன்யாஸி: இந்நூலில் இந்த இராகத்தின் கிரமத்தைச் சுத்ததன்யாஸிக்கு உள்ளவாறே கூறப்பட்டிருக்கிறது. சுத்த தன்யாஸி 20-ஆம் மேளத்தில் சொல்லப்பட்டாகி விட்டது. ஆகையால் இந்த ஸிந்துதன்யாஸியின் ஏற்றம் இறக்கம் ஸகமபநிஸ; ஸநிதபமரிகஸ என்று பிற நூல்களில் உள்ளவாறு கொள்ளவேண்டும்.

21. காபி: இதற்குப் பல புத்தகங்களில் பல மாதிரியாக ஏற்றமிறக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. சென்னை ஸங்கீத வித்வத்சபையில் தீர்மானித்திருப்பது ஸரிகமபதநிஸ; ஸநிதபமகரிஸ; இது கர்ணடக காபி. ஸரிமபநிஸ; ஸநிதநிபமகரிஸ இது ஹிந்துஸ்தான்காபி. இவற்றோடு, அந்தரகாந்தார காகலி நிஷாத ப்ரயோகங்களும் உண்டு. ஸரிகமபதநிஸ; ஸநிதபமகமரிஸரிகமா; இதுவும் கர்ணடக காபி; மதாந்தாம்; இதற்கு மத்யமத்தில் மூர்ச்சனை.

26. நாததரங்கிணி: இதன் அவரோகணம் ஸநிதபமகரிகஸ என்றுமுண்டு.

27. தர்பார்: ஸ. சூ. இல் இறக்கம் ஸநிதபமககாரிஸ என்றிருக்கிறது. இக்காலம் அநுபவத்தில் ஸநிதபமரிகாரிஸ என்றுள்ளது.

28. பிருந்தாவன ஸாரங்கா: அவரோகணம் ஸநிபமரிகஸ என்றிருக்கவேண்டும்.

குறிப்பு: இந்த மேளத்தில் பிரஸித்தமாயுள்ள நாயகி, தேவாம்ருதவர்ஷணி முதலிய சில இராக லக்ஷணங்கள் சொல்லப்படவில்லை.

23. கௌரிமனோஹரி மேள ஜன்யங்கள்

175. கவுரி மனோகரிச் சதுச்ருதி ரிஷபம்,
காந்தாரம் சாதாரணமதாம்;
சவுரி சதுச்ருதி தைவதமிதிற் றழையுமே
கா கலிநி டாதம்;
புவியிற் பிறக்கும் வேளா வளிக்கு
நிஇலா தேற்றமாய்ப் புல்லும்
செவியு ளிறக்கம் பூரணமா மேளம்
செப்பிரு பத்துமூன் றெனவே.

(இ - ள்). கவுரிமனோகரி மேளத்தின் இலக்ஷணம்: சதுச்ருதி ரிஷபம்; சாதாரண காந்தாரம்; சதுச்ருதி தைவதம். காகலி நிஷாதம். இதன் ஜன்யங்கள்:—

1. வேளாவளி: (ஆ). நி. வர்ஜியம்: (அ). பூர்ணம்

இது, இருபத்து மூன்றும் மேளமாகும்.

24. வருணப்பிரிய மேள ஜன்யம்.

176. வருணப் பிரியைச் சதுச்சுருதி ரிஷபம்
ஷட்சுதி தைவதம் காந்தாரம்
பெருகு சாதா ரணங்கா கலிநி வீரவ
சந்தம் பேசு மேற்றம்
நிரைச கரிமப சாவா மவரோகம்
பூரண மாய்நிற் குமிதை
இருபத் துநான் காகு மேளமென
உலகறிய வியம்பு மிந்நூலே.

(இ - ள்). வருணப்பிரியை மேள இலக்ஷணம்: சதுச்சுருதி ரிஷபம்; ஷட்சுதி தைவதம்; சாதாரண காந்தாரம்; காகலி நிஷாதம். இதன் ஜன்யம்:—

1. வீரவசந்தம்: (ஆ). சகரிமபஸ; (அ). பூரணம்.

இது, இருபத்து நான்காம் மேளமாகும்.

---

23. கௌரிமனோஹரி

1. வேளாவளி: ஸ. ஸா. ஸ. த்தில் (ஆ) ஸரிகமபதஸ (அ). ஸநிதபமகஸ என்றிருக்கிறது. பிற பல நூல்களில் பெரும்பாலும் ஸரிமபதஸ; ஸநிதபமகரிஸ என்றுள்ளது. இதுவே சரியானது.

25. மாரஞ்சனி மேள ஜன்யங்கள்

177. மாரஞ் சனிக்குச் சதுச்ருதி ரிஷபம்,
மகிழந்தர காந்தார மதாகும்;
மற்றது சுத்த மதிற்ரேன் றும்சாத்
விதியி னுரோக மாஞ்சுரங்கள்
கூறுமே சரிகம பதநித சவாய்க்
கொளுமவ ரோகணம் பூரணம்
குளிருமே தேசமுகாரிக் கியாரோகங்
குறுஞ் சரிகம பதநிதசா
சேரவ ரோக நிஇலே; இதன்மேற்
செப்பிய கேஸரி யேற்றம்
செழுஞ் சரிகம பமதப சவாய்ச்
செலுமவ ரோகணச் சுரங்கள்
சீருறும் சதநித பமகரி சசாசேரு
மென்றுரை செய்த நூலோர்
செப்பின ரிதனை யிருபத் தைந்தா
மேளமா யிசைமுறை தெரிந்தே.

(இ - ள்). மாரஞ்சனி மேள இலக்ஷணம்: சதுச்ருதி ரிஷபம்; அந்தர காந்தாரம்; மற்றவை சுத்தம்.

இதன் ஜன்யங்கள்:

1. சாத்விதி: (ஆ). சரிகமபதநிதஸ; (அ). பூர்ணம்.
2. தேசமுகாரி: (ஆ). சரிகமபதநிதஸ; (அ). நி. வர்ஜ்யம்.
3. கேஸரி: (ஆ). சரிகமபமதபஸா; (அ). சதநிதபமகரிச.

இது இருபத்தைந்தாம் மேளம்.

---

25. மாரரஞ்ஜனி

2. தேசமுகாரி: மற்ற நூல்களில் இறக்கம் ஸதநிதபமகரிஸ ஆகும்.

26. சாருகேசி மேள ஜன்யங்கள்

178. சாருகே சிக்குச் சதுச்ருதி ரிஷபம்
சாற்று மந்தர கா, கை, நிடதம்
தாரதி லுதித்த தரங்கிணி யேற்றம்
சரிம கரிம பதநிதசா
தூரவ ரோகம் பூரணம்; சுக்ர
ஜோதியி னேற்றமாஞ் சுரங்கள்
பேர்சரி மபதப மதநிசாவாம் பெறு
பூர்ண மிருபத் தாறே.

(இ-ள்). சாருகேசி மேள இலக்ஷணம்: சதுச்ருதி ரிஷபம்; அந்தர காந்தாரம்; கைசிக நிடதம்; மற்றவைசுத்தம்.

இதன் ஜன்யங்கள்:

1. தரங்கிணி: (ஆ). சரிமகரிமபதநிதஸா; (அ). பூர்ணம்.
2. சுக்ரஜோதி: (ஆ). சரிமபதபமதநிஸா; (அ). பூர்ணம்.

இது இருபத்தாறும் மேளம்.

27. சரசாங்கி மேள ஜன்யங்கள்

179. அமை சரசாங்கி சதுச்சுதி ரிஷபம்
அந்தர காந்தார மீதில்
ஆகவே யுணருங் காகலி நிடதமதில்
வருஞ்சுர சேனு வேற்றம்,
கநி வர்ச்சிய மிறக்கம் பூரணமாம்
கனதிவ்ய பஞ்சமத் தேற்றம்
காண சரிகரிம பதப நிதநிசா
கருதவ ரோகணம் பூர்ணம்,

---

26. சாருகேசி

1. தரங்கிணி: இந்நூலில் உள்ளனவே மற்ற நூல்களிலும்; ஆனல் வேங்கடமகியின் இலக்ஷணப்படியும், ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதருடைய "மாயேத்வம்யாஹி" என்ற கீர்த்தன பிரகாரமும் கிரமங்கள் ஸரிகபதநி தபதஸ; ஸாதபகரிஸரிகமகரீஸ என்ருகும்.

2. சுக்ரஜ்யோதி: ஸரிகமபதநிஸ—ஸநிபதமகரிஸ என்றும், ஸரிம பதஸ அல்லது ஸகமபதநிதபஸ—ஸநிதபமகரிஸ என்றும் பலவாருக இதர நூல்களில் இருக்கின்றன.

சுமையிலா கமலா மனேகரி யேற்றத்
துறை ரித வர்ச்சிய மாமிறக்கம்
தோன்று பூரணமாம் போக லீலைக்குத்
துலநாகு மாரோகம் ரிவர்ச்சியம்,
நிமைய வரோகம் ம ரி வர்ச்சியமாக
நேர்ந்திடு மீதிரு பத்தேழ்
நிலைத்திடு மேளமெனச் சொலும் நூலே
நிறைந்திடும் பெருமைசேர் மாதே.

(இ-ள்). சரசாங்கி மேள இலக்ஷணம்: சதுச்ருதி ரிஷபம்; அந்தர காந்தாரம்; காகலி நிஷாதம்; மற்றவை சுத்த ஸ்வரங்கள்.

இதன் ஜன்யங்கள்:

1. சுரசேனு: (ஆ). க. நி. வர்ஜ்யம்; (அ). பூர்ணம்.
2. திவ்ய பஞ்சமம்: (ஆ). சரிகரிமபதபநிதசா (அ) பூர்ணம்.
3. கமலாமனேகரி: (ஆ). ரி த வர்ஜ்யம்; (அ). பூர்ணம்.
4. போகலீலை: (ஆ). ரி. வர்ஜ்யம். (அ). ம. ரி. வர்ஜ்யம்.

இது, இருபத்தேழாம் மேளமாகும்.

28. ஹரிகாம்போதி மேள ஜன்யம்

180. அழகிய ஹரிகாம் போதி மேளத்திற்
கமையுமே சதுச்சுதி ரிஷபம்
அந்தர காந்தாரம் சதுதைவத
மாகிய கைசிகி நிஷாதம்,

---

27. ஸரஸாங்கி.

2. திவ்யபஞ்சமம் ஸ. சு; ஸ. ஸா. ஸ; ராகலக்ஷணம், இவைகளில் வக்ரமன்றி, ஸம்பூர்ணமாகக் காண்கிறது. இன்று, சில நூல்களில் ஆரோகணம் ஸரிகமபநிஸா வென்றும், ஸரிகமஸபமதநிஸ என்றும் காணப்படுகிறது. முழுவதும் ஸம்பூர்ணமாக விருந்தால் கர்த்தாவுக்கும் ஜன்யராகத்திற்கும் சாதாரணமாய் வேற்றுமையில்லாமலிருக்கும். ஆகை யினல், இந்நூலில் உள்ளதே ஒருவேளை சரியாயிருக்கக்கூடும்.

3. கமலா மனேஹரி: அவரோகணம் ரி. வர்ஜ்யம் என்றிருக்க வேண்டும். கிரமங்கள் ஸகமபநிஸ; ஸநிதபமகஸ என்பனவே சரியான வையாகும்.

4. போகலீல: இதர நூல்களில் பெரும்பாலும் கிரமம் (ஆ). ஸகமப தநிஸ (அ). ஸநிதபகரிஸ என்றே காணப்படுகிறது.

விழையுமே யிதரம் சுத்தம் அதனுள்
விளங்கிய காம்போதி யேற்றம்
வில்ளுநி வர்ச்சியம் இறக்கமாம் பூரணம்
மின்னிய கேதார கவுளம்,
பழகிய வேற்றங் கதஇலே இறக்கம்
பகருஞ் சம்பூர்ண மாகும்
பழுதிலா நாராய ணியிஞ ரோகம்
பற்றிய கநி வர்ச்சியமாம்,
தழுவிய காவே வர்ச்சிய மாம்இதின்
மேற்றழையு நாராயண கவுளத்
தாரோ கங்கா வேவர்ச்சிய
மாமிறக்கம் சம்பூரணமெனச்சாற்றே.

181. சாற்றிய வரிகாம் போதி மேளத்திற்
சனித்திடு மாளவி யேற்றம்
சரிகம பநிமத நிச இறக்கம்
சநிதநி பமகம ரிசசா
ஏற்றம தாஞ்சாயா தரங்கிணி சரிம
கமப நிசஇறக்கம்
இலங்குபூ ரணமாம் பலஹம்சவேற்ற
மேலுமே கநி வர்ச்சியமிறக்கம்
பற்றிய சநிதப மரிமக சவா
பன்னும் பிரதாப வராளி
பழகிய வேற்றம் கதநியே வர்ச்சியம்
பகரவ ரோக நிவர்ச்சியம்
சிற்றிடை குந்தல வராளி யேற்றம்
செலுஞ்சம பதநித சாவே
திறத்தவி றக்கம் ரிக இல்லே யென்றே
செப்புணர்நூல் முறை தெரிந்தே.

182. அரிகாம் போதி யிலலரும் நீலாம் புரிக்கு
ஆரோகஞ் சரிகம சகமப நிசா
விரியிறக்கஞ் சநிதபம கமரி காச
வில்ளுமே சாம ராகந் தாரோகம்

சரிமபதசா விறக்கம் நீயே வர்ச்சியம்
சாற்று மந்த கோகிலத்தி னேற்ற மாகும்
சரிதப நிசா விறக்கம் தபச ரீச
தகுமென வேமுறை யாய்ச்சாற்று நூலே.

183. சொன்ன வரிகாம் போதி மேளத்தில்
வந்த ஜெஞ்சோ டிக்கு
யாரோ கமாய்ச்சூழ் தசரி
கமப தநி ; அவரோகம்
தபம கரிச நிதப தசா
துலங்கும் துதிகொளு மிராக
பஞ்சர ஏற்றம் க. நி. வர்ச்சியம்
தோணுமே யவரோகணம்
துலையிலா சநித மகரி ச ; வதாம் ரவிசந் திரிகை
யேற்றமாம் சுரங்கள்,
மன்னு சரிகம தநிதசா இறக்கமது
பா. வர்ச்சிய மேவு
ஸரஸ்வதி மனோகரியி னேற்றம்
சரிகமதச வவரோ கமாம்
சதநிப மகரிச வாம் ; வாசிஆந்
தாளி யேற் றமதனிற்
க. த. வர்ச் சியமவரோகணச்
சுரங்கள் வளருமே
சநிபம ரிகமரிச வாமுடன்
கௌரி பந்து,
துன்னு மாரோகணம் சரிகரி
மபதப நி ச ; தொழு மிறக்கம்
பூரணம் ; தொந்த பங்காள
வேற்றம் சரிகம
பமரிபசா விறக்கச் சுரங்கள்
தொடரு சநிபம ரிக
ரிசா வெனும் சவு ராஷ்ட்ர
தொந்த மேற்றச்

சுரங்கள் துங்க சரிமக மபதநி சவாவ
ரோகணத் துணையான நி. வர்ச்சியம்.
சன்னையிடு கோகிலத்வனி யேற்றம்
சரிகமா தநிதச விறக்க மோதும்
சநிதநி பமகரிசா ; நவரசக்
கன்னடா தகுமேற்றம்
ரிதநி வர்ச்சியம் ; சருவு
மவரோகணம் ப. இலை ; ஸ்வரா
வலிக்குச் சாற்றுமா ரோகணந்தான்
சகமப நிதநிச
வவரோகணம் சநிபத மகரிச
வாய்ச் சாற்று நாலே.

184. விந்தையுள வரிகாம் போதிபின் றன்மேளம்
மேவு நாகச் சுவரா ளியினேற்றத்தும்
சிந்திடா விறக்கத்தும் ரிநியே வர்ச்சியம் ;
சேர்ந்த பகுதாரி யையினேற் றமாகும்
முந்து சக மதபத நிசா விறக்கம்
முள்ள ரித வர்ச்சியம் எதுகுல காம்போதி
அந்தமுள க. நி. வர்ச்சிய மிறக்கம் பூர்ண
மாகுமென விள்ளுமிசை நாலிற் றுனே.

185. மெச்சுமரி காம்போதி மேளத்தி லாம்சுருட்டி
மிஞ்சுமேற் றச்சுரங்கள் வீணிலாச்
சரிமப நிநீசா வவரோகம் விளங்குமே
பூரண மதாய் ; மீதாம்
நாட்டக் குறிஞ்சி யேற்றம் சரிகம
நிதநிப தநிச விறக்கம்
மேவும் ப.ரியிலை ; மோகனத் தேற்றம்
நி.யில்லை வீழிறக்க நீ.ம.இலை ;
இச்சை ஈசமனோகரியி னேற்றம்
பூர்ண மிறக்கத்தி லாம்சுரங்கள்
இசை சநிதப மரிம கரிச ;
த்விசர வந்திக்கு யேற்றமே பூரணமதாம்

இறகககத்தில் நீயில்லை ; நாயகிக் காரோக
மிலைகா, இறக்கம் பூரணம்
இதமா மடானுவி னேற்றமது கா. இலை
இறக்கத் திலாஞ்சுரங்கள்,
உச்சம சதபம பகாரிச வென்னவே
யோதும் ; கமாஸ் ஏற்றமுள்ள
ரிஇலை, இறக்கம் ரிசநித பமகச
வுற்றதாம் ; கர்நா டகபியாக்
கினேற்றத் தோதுமே பூரண மிறக்கமது
சநிதநி பதம கரிகச ;
உமாபரணம் ஒக்குமது பூரண மிறக்க
மதுசநிபம ரிகமரிசா வுறுப்பாம்,
கச்சமாம் சஞ்சுகாம் போதி யேற்றம்
சகரிகரிப மநிதநி பதச
காணுமவ ரோகணம் சதநிபதநி தபமா
கரிக ரிமக ரிசவாகும் ;
கலைஸரஸ் வதீயேற்றம் சரிகரி மபநி
தநிச கடப விறக்கம் பூர்ணம் ;
கருதுமிதை யிருபத் தெட்டாம்
மேளகர்த்தா வெனச்சொல் மாதே.

(இ - ள்). ஹரிகாம்போதி மேள இலக்ஷணம் :—சதுச்ருதி நிஷபம் ; அந்தர காந்தாரம் ; சதுச்ருதி தைவதம் ; கைசிகி நிஷாதம்.

இதன் ஜன்யங்கள் :—

1. காம்போதி : (ஆ). நி வர்ஜ்யம் ; (அ). பூர்ணம்.
2. கேதாரகௌளம் : (ஆ). க. த. வர்ஜ்யம (அ) பூர்ணம்.
3. நாராயணி : (ஆ). க. நி. வர்ஜ்யம் ; (அ). க. வர்ஜ்யம் ;
4. நாராயணகௌளம் : (ஆ). க. வர்ஜ்யம் ; (அ). பூர்ணம்.
5. மாளவி : (ஆ). சரிகமபநிமதநிச ; (அ). சநிதநிபமகமரிரஸ.
6. சாயாதரங்கிணி : (ஆ). சரிமகமபநிஸ ; (அ). பூர்ணம்.
7. பலஹம்ஸ : (ஆ). க. நி. வர்ஜ்யம் ; (அ). சநிதபமரிமகச ;
8. பிரதாபவராளி: (ஆ). க. த. நி. வர்ஜ்யம்: (அ). நி. வர்ஜ்யம.
9. குந்தலவராளி : (ஆ). சமபதநிதசா ; (அ). ரி. க. வர்ஜ்யம்.

10. நீலாம்பரி : (ஆ). சரிகமசகமபநிசா ; (அ). நிதபமகமரிகாச.

11. சாமா : (ஆ). சரிமபதசா ; (அ). நி. வர்ஜ்யம்.

12. மத்தகோகிலம : (ஆ). சரிதபநிசா ; (அ). தபசரீச

13. ஜெஞ்சோடி : (ஆ). தசரிகமபதநி ; (அ). தபமகரிசநித பதசா.

14. இராகபஞ்சரம் : (ஆ). க. நி. வர்ஜ்யம் : (அ). சநிதமகரிச.

15. இரவிசந்திரிகை : (ஆ). சரிகமதநிதசா ; (அ). ப. வர்ஜ்யம.

16. ஸரஸ்வதிமனோஹரி : (ஆ). சரிகமதச; (அ). சதநிபமகரிச.

17. ஆந்தாளி : (ஆ). க. த. வர்ஜ்யம் ; (அ). சநிபமரிகமரிச.

18. கௌளிபந்து : (ஆ). சரிகரிமபதநிச ; (அ). பூர்ணம்.

19. பங்காள : (ஆ). சரிகமபமரிபசா ; (அ). சநிபமரிகரிசா.

20. சௌராஷ்ட்ரம் : (ஆ). சரிபகமபதநிச ; (அ). நி. வர்ஜ்யந்.

21. கோகிலத்வனி: (ஆ). சரிகமாதநிதச; (அ). சநிதநிபமகரிசா.

22. நவரச கன்னடா (ஆ). ரி. த. நி. வர்ஜ்யம் ; (அ). ப. வர்ஜயம்.

23. ஸ்வராவளி : (ஆ). சகமபநிதநிச ; (அ). சநிபதமகரிச.

24. நாகச்சுவராளி : (ஆ). ரி. நி. வர்ஜ்யம் ; (அ). ரி. நி. வர்ஜ்யம்.

25. பகுதாரி : (ஆ). சகமதபதநிசா ; (அ). ரி. த. வர்ஜ்யம்.

26. எதுகுலகாம்போதி : (ஆ) க. நி. வர்ஜ்யம் ; (அ). பூர்ணம்.

27. சுருட்டி : (ஆ). சரிமபநிநிசா ; (அ). பூர்ணம்.

28. நாட்டக் குறிஞ்சி : (ஆ). சரிகமநிதநிபதநிச ; (அ). ப. ரி. வர்ஜ்யம்.

29. மோகனம் : (ஆ). ம. நி வர்ஜ்யம் ; (அ). நி. ம. வர்ஜ்யம்.

30. ஈசமனோஹரி : (ஆ). பூர்ணம் ; (அ). சநிதபமரிமகரிச.

31. த்விஜாவந்தி : (ஆ). பூர்ணம் ; (அ). நி. வர்ஜயம்.

32. நாயகி : (ஆ). க இல்லை ; (அ). பூரணம்.

33. அடாண : (ஆ). க. வர்ஜ்யம் ; (அ). சதபமபகாரிச.

34. கமாஸ் : (ஆ). ரி. வர்ஜ்யம் ; (அ). ரிசநிதபமகச.

35. கர்னாடக ப்யாக் : (ஆ). பூர்ணம் ; (அ). சநிதநிபதமகரிகச.

36. உமாபரணம்: (ஆ). பூர்ணம்; (அ). சநிபமரிகமரிசா.

37. சஞ்சுகாம்போதி: (ஆ). சகரிகரிபமநிதநிபதநிச; (அ). சதநிபதநிதபமாகரிகரிமகரிச.

38. ஸரஸ்வதி: (ஆ). சரிகரிமபாநிதநிஸ; (அ). பூர்ணம்.

இவை 28-ஆவது மேள ஜன்னியம்.

---

28. ஹரிகாம்போஜி.

4. நாராயண கௌள: இங்குச் செய்யுளில், ஆரோகணத்தில் கா. மாத்திரம் வர்ஜ்யம் என்று சொல்லப்பட்டு, தைவத நிஷாதம் உண்டு என்ற போதிலும் அது வக்ர ஆரோஹணமாகும். அதாவது ஆரோகணம் ஸரிமபநிதநிஸ என்பதே சரியானது.

10. நீலாம்பரி: இந்த ராகம் பிராசீனத்திலிருந்து தீர சங்கராபரணமான 29-ஆவது மேளத்தில் ஜன்யமாகவும், இப்பொழுது நடவடிக்கையிலும் அவ்வாறே கொள்ளப்பட்டும் வருகிறது. இவ்வாறிருக்க. ஸ. சூ; ஸ. ஸா. ஸ. இவைகளில் ஹரிகாம்போஜியாகிற 28-இல் ஜன்யயாகப் போடப்பட்டிருப்பதால், இந்நூல் அவற்றை அநுசரித்து வருகிறபடியால், இங்கும் அப்படியே போடப்பட்டுள்ளது. இது தீரசங்கராபரண ஜன்யமாகக் கொள்வதே நேர்மையாகும். இந்நூலிற் குறித்த எற்றமிறக்கங்கள் ஒருவாறு சரியாக இருந்தபோதிலும், ஸரிகமபநிஸ; ஸரிகமபதபநிஸா, நிதநிஸா; ஸநிபதநிபமகரிகஸ என்பதும் இலக்ஷணமாகும். இது பாஷாங்க இராகமாகும்.

14. இராக பஞ்சரம்: ஸ. ஸா. ஸ. த்தில் ஸநிதமகாரிஸ என்றிருப்பதனுல் இந்நூலிலும் அவ்வாறே உள்ளது. ஆனல் ஸ. சூ.; ராகலக்ஷணம் என்ற நூல்களிலும் மற்றவற்றிலும் கிரமம் ஸரிமபதநிதஸ—ஸநிதமரிஸ என்றுள்ளது; இதுவே சரியாகும்.

16. ஸரஸ்வதி மனோஹரி: இதை வேங்கடமகி 29-ஆவது தீர சங்கராபரண ஜன்யமென்றும் பாஷாங்கம் என்றும் சொல்லுகிருர். மற்ற நூல்களிற் பெரும்பாலும் 28-ல் தான் ஜன்யமாகவிருக்கிறது.

18. கௌளிபந்து: அல்லது கௌளிபந்து. இந்த ராகம் இந்நூலில் மாளவ கௌள மேளத்தில் சொல்லப்படாமல் விடப்பட்டிருக்கிறது. இங்குத் தவறுதலாய் வந்திருக்கிறது. இதன் லக்ஷணம் 15-ஆவது மேள ஜன்யம்; எற்றமிறக்கம்; ஸரிமபநிஸ; ஸநிதபமபதமகரிஸ. இந்நூலில் உள்ள எற்றமிறக்கம் சற்றேக்குறைய ஒருவாறு சரியாயிருந்தபோதிலும், மேலே திருத்திக் கொடுத்திருப்பதுதான் சுத்தமான கிரமமாகும்.

20. ஸௌராஷ்டிரம் : இதுவும் முன்பே 15-ஆவது மேளத்தில் இருக்கவேண்டியது விடப்பட்டிருக்கிறது ; இங்குத் தவறி எழுதப்பட்டிருக்கிறது. பூர்வத்தில் இது 15 ஆவது மாளவகௌளை ஜன்யமாகவும் பாஷாங்கராகமாகவும் இருந்திருக்கிறது. பிறகு, இக்காலத்தில், 17-வது சூரியகாந்த மேளத்தில் ஜன்யமாக ஏற்பட்டு பாஷாங்க ராகமாக பாடப்பட்டு வருகிறது. இதன் கிரமம், ஸரிகமபதநிஸ ; ஸநிதாபமகரிஸ. ஸநிஸதாப என்பதும் உண்டு.

31. த்வஜாவந்தி : வித்வத் ஸபையின் தீர்மானம் (ஆ). ஸரிமகமபதஸ ; ஸரிகமபாவும் உண்டு. (அ) ஸநிதபமகரிஸநிதநிஸ.

வேங்கடமகி, ஸ்ரீ முத்துசாமி தீக்ஷிதர் (க்ருதி) இவர்களின் சம்பிரதாயப்படி ரிகமபதஸாநிதநிஸா ; நிதபமகரிஸ, ரிமகரிஸ. இது பாஷாங்க ராகம் ; சாயாராகம்.

32. நாயகி : இந்த ராகம் ஹரிகாம்போஜியில் ஜன்யமாக இருக்க எவ்வித நியாயமுமில்லை. ஏட்டில் எழுதும்பொழுதே கைத்தவறுதலாகும். இதில் ஆ. அ. பார்க்கும்பொழுது காபி நாராயணி என்ற ராகமாக இருத்தல் வேண்டுமெனத் தோன்றுகிறது. காபி நாராயணிக்கு ஆ. ஸரிமபதநிஸ க. வர்ச்சியம் அ. பூர்ணம். நாராயணி அதாவது காபி நாராயணி என்பதை நாயகி என்று ஏட்டில் தப்பாக எழுதப்பட்டிருக்கலாம்.

33. அடாணா : இந்த இராகம் இந்நூலில் உள்ளபடி ஹரிகாம்போஜி ஜன்யமாகவே முன்னமே பல நூல்களில் கூறப்பட்டுள்ளது. இக்காலத்துச் சில நூல்களிலும், இப்பொழுது பாடப்படுவதிலும் 29-ஆவது தீரசங்கராபரண மேளத்தின் ஜன்யமாகவும், பாஷாங்க, சாயாராகமாகவும், வழங்கப்பட்டு வருகிறது. இந்நூலில் உள்ள ஸ்வர கிரமங்கள் ஒருவாறு சரியாயிருந்தாலும், வேறு ஏற்ற இறக்கங்களும் உண்டு. அவையாவன :—ஸரிமபநிஸ ; ஸநிதாபமகாமரிஸ.

37. சஞ்சுகாம்போதி : சென்னை ஸங்கீத வித்வத ஸபைத் தீர்மானமாவது. இந்த இராகத்தின் ஏற்ற இறக்கங்கள் ஸபமதநிஸ : ஸநிபமகரிஸ. இதற்குப் பல வக்ரசஞ்சாரங்கள் உண்டு. இந்நூலில் உள்ளதே, மிக முக்யமான, சரியான கிரமமாகும். மற்றொரு நூலில் காட்டப்படும் கிரமம் :—ஸகரிகமபமதநிபநிதநிஸ : ஸநிபமகரிஸ. இதுவும் விசேஷமானதே.

38. ஸரஸ்வதி : இதுவும் அபூர்வராகமே. ஆனால் 64-ஆவது வாசஸ்பதி மேளத்தில் ஜன்யமாக ஸரிமபதஸ ஸநிதபமரிஸ என்ற கிரமத்தைக் கொண்ட ஸரஸ்வதி என்ற இராகந்தான் வழக்கத்தில் உள்ளது.

29. தீர சங்கராபரண மேள ஜன்யங்கள்.

186. சாற்றுமே தீரசங் கராபர்ணம் சதுச்சுதி
ரிஷபம் அந்தர காந்தாரமாம் ;
சதுச்சுதி தெய்வதம்; காகி,
தாழ்விலா மற்றது சுத்தம்
ஏற்றவீ துதித்த கன்னடா ராகத்
தேற்ற மதாகிய சுரங்கள்,
இசைகரி சரிகம பமத நிசவாம் ;
இறக்கத் திலாகிய சுரங்கள்,
மாற்றிலாச் சதபம பகமரி ச. வேவக்,
திடும் ; பில கிரியேற் றன்னேற்றம்
வளர் ம. நி. குறையாம் ; அவரோகம்,
பூர்ணம் ; மகிழ்நவ ரோஜு
பாற்றிலாப் பதநிச ரிகம பா வாம் ;
பரு. மகரி சநித பா வென்
பார்அவ ரோகம் ; இந்திரன் வில்லைப்
பழித்தழ கியநுதல் மாதே.

187. அன்னிய தீர சங்கரா பரணத்
தாகிய பேகடை தனக்கு,
ஆரோகம் சகரிகம பதபசா அவ,
ரோகம் பூரண மதாகும் ;
தன்னிக ரில்லா நாராயண தேசாக்ஷி
யேற்றத்திற் கா. வில்லை,
தாழ்தல் பூரணமாம் ; ஜுலாவுக்குப்
பதநி சரிகம பா வேற்ற மிறக்கம்
துன்னிய மகரிச நிதபமா வாம்,
துலங்குமே குறிஞ்சியி னேற்றம்

28-ஆவது மேளத்தில் உள்ள இந்த ஸரஸ்வதி இராகம் ஒன்றும் இருப்ப தால் இதனைப் பூர்வஸரஸ்வதி என்றழைப்பதே உசிதமாகும் என்று தோன்றுகிறது. இதன் கிரமங்கள் பின்வருமாறு வேறு விதமாகவும் மற்றொரு பழைய நூலில் காணப்படுகின்றன ; ஸரிகமபநிதநிஸ ; ஸநிபத பமகரிகஸ.

தொழும் ச நி சரிகம பதா விறக்கம்
சொலுந் தப மகரிச நிநிச ;
சன்னையாங் கேதாரத்தி னுரோகம்
சமகம பநிசா அவரோகம்
சநிபம கமதம கரிச வாகச்
சாற்றுமே நான்முறை மாதே.

188. தலமகிழ் தீரசங் கராபரணத்
தாகிய வாகிரி நாட்டை
சாற்று மாரோகம் சமகம
பதநிசா ; அவரோ கணச் சுரங்கள்
சலனமில் சநிபத நிபகம
மகசா, வெனுமா ஹுஶரி யேற்றம்,
தைவதங் குறையாமி றக்க நீ யிலை ;
தங்கு கோலாகலத் தோற்றம்
பிலமதாம் சபமக மபதநி நிசா ;
பிதற்று மிறக்கம் பூரணமாய்ப்
பேசுமே ; ஜனரஞ்சரிக் காரோகம்
பெறும், சரி கமபத பநிஸ
நிலையதா மிறக்கங் க நி யிலை ; ஆரபி
யினேற்றங் க நி யிலை ; இறக்கம்
நீளும் பூரணமாய் வாளினை வடுவை
நேர்ந்திடு நேத்திர மாதே.

189. தன்னிகர் தீர சங்கராபரணங்
தருநாகத் துவனியி னேற்றம்,
சரிசம கமபநி தமபநி தநிச ; அவரோகம்
சநிதநி பமகச ; விள்ளும்
தடையிலாச் சுத்த சாவேரி யேற்றமி
றக்கந் தருகுமே க நி வர்ச்சமாய் ;
தக்க சுத்த வசந்த வேற்றத் தில்த யிலை
தாழ் சத நிபம கரிசா
மன்னும் ; விவர்த்தனிக் காரோகம்
கதநியிலை வருமிறக் கம்பூர்ணம் ;

வளர்பூர்ண சந்திரிகை யாரோகணம்
சரிகம பதபச வாமிறக்கம்
வரு சநி பதபம கமரிச வதாம்;
பூர்வ கவுளந்தி னேற்றம் வளர்க்கும்
மகிழ் சரி மகரிம பதநிச; விறக்கம்
பூர்ணம்; கவுடமலாரு வேற்றம்
கனுனு க நியிலை; இறக்கம் சநிதம
மகரிச; கண்டச கனுவி னேற்றம்
கரிசரி கமபம தநிசா; இறக்கம்
பூர்ணம்; கல்லைதீர் சம்புக்ரியா
காணு மேற்றம் சரிகம பநிதசா;
இறக்கம் சநிதப மகரிகரிசா;
கானடா வேற்றமது சரிகம பமதநி
சா. கரை யிறக்கம் பூர்ணம்;
வின்னமில் லாச்சங் கராபரண வேற்றம்
விளங்கும் பூரணம்; இறக்கம்
மேவுநி யில்லை; கருடத் துவனியி
னேற்றம் விளம்புபூ ரணமதாக
விள்ளுமி றக்கந் தனில் நி. ம. யில்லை;
என்றிதனை மேலான நூலறிந்து
வெற்றிபெற வோது மிருபத்தி யொன்பான்
மேளமென் றுரைசெய் கமலமாதே.

(இ - ள்). தீரசங்கராபரண மேள இலக்ஷணம்: சதுச்ருதி ரிஷபம்; அந்தர காந்தாரம்; சதுச்ருதி தெய்வதம்; காகலி நிஷாதம்.

இதன் ஜன்யங்கள் :—

1. கன்னடா: (ஆ). கரிசரிகம்பமதநிச; (அ). சதபமபகமரிச.
2. பிலகரி: (ஆ). ம.நி. வர்ஜ்யம்; (அ). பூர்ணம்.
3. நவரோஜு: (ஆ). பதநிசரிகமப; (அ). மகரிசநிதப.
4. பேகடை: (ஆ). சகரிகமபதபசா; (அ). பூர்ணம்.
5. நாராயண தேசாக்ஷி: (ஆ). க. வர்ஜ்யம்; (அ). பூர்ணம்.
6. ஜுலாவு: (ஆ). பதநிசரிகமப; (அ). மகரிசநிதபமா.
7. குறிஞ்சி: (ஆ). சநிசரிகமபதா; (அ). தபமகரிசநிநிச.
8. கேதாரம்: (ஆ). சமகமபநிசா; (அ). சநிபமகமதமகரிச.

9. ஆகிரிநாட்டை: (ஆ). சமகமபதநிசா ; (அ). சநிபதநிபகம ம்கசா,

10. மாஹுரி : (ஆ). த. வர்ஜ்யம் ; (அ). நி. வர்ஜ்யம்.

11. கோலாகலம் : (ஆ). சபமகமபதநிநிசா ; (அ). பூர்ணம்.

12. ஜனரஞ்சரி : (ஆ). சரிகமபதபநிஸ ; (அ). க.நி. வர்ஜ்யம்.

13. ஆரபி : (ஆ). க.நி. வர்ஜ்யம் ; (அ). பூர்ணம்.

14. நாகத்துவனி : (ஆ). சரிசமகமபநிதமபநிதநிச ; (அ). சநிதநிபம்கச.

15. சுத்தசாவேரி : (ஆ). க.நி. வர்ஜ்யம் ; (அ). க.நி. வர்ஜ்யம்.

16. சுத்தவசந்தா : (ஆ). த. வர்ஜ்யம் ; (அ). சதநிபமகரிசா.

17. விவர்த்தனி : (ஆ). க.த.நி. வர்ஜ்யம் ; (அ). பூர்ணம்.

18. பூர்ணசந்திரிகை : (ஆ). சரிகமபதபச ; (அ). சநிபதபம கமரிச.

19. பூர்வகவுள : (ஆ). சரிமகரிமபதநிச ; (அ). பூர்ணம்.

20. கவுடமலாரு : (ஆ). க.நி. வர்ஜ்யம் ; (அ). சநிதமம்கரிச.

21. சகஞ : (ஆ). கரிசரிகமபமதநிசா ; (அ). பூர்ணம்.

22. சம்புக்கிரியா : (ஆ). சரிகமபநிதசா ; (அ). சநிதபம்கரி கரிசா.

23. கானடா : (ஆ). சரிகமபமதநிசா ; (அ). பூர்ணம்.

24. சங்கராபரணம் : (ஆ). பூர்ணம் ; (அ). நி. வர்ஜ்யம்.

25. கருடத்துவனி : (ஆ). பூர்ணம் ; (அ). நி.ம. வர்ஜ்யம்.

இது, இருபத்தொன்பதாம் மேளம்.

---

29. தீரச்ங்கராபரணம்

1. கன்னடா : இந்நூலில் உள்ளதும் சரியே. அதனோடு, ஸகமப மதநிஸ ; ஸநிஸதபமகமரிஸ என்பதே நேர்சரியான கிரமமாகும். ஸரி கம, கமபகரிஸ இவை விசேஷ பிரயோகங்கள்.

6. ஜுலாவு : இந்நூலில் ஸ. ஸா. ஸ. இல் உள்ளபடியே இருக்கிறது. பிற நூல்களில் பநிஸரிகமப ; பமகரிஸநிப என்றிருக்கிறது ; இதுவே சரியான கிரமமாகும்.

8 கேதாரம். இப்பொழுது ஸமகமபநிஸ ; ஸநிபமகரிஸ என்று பொதுவாக ஏற்றமிறக்கம் இருந்தபோதிலும், பழைய நூல்களில் பெரும்

பாலும் இந்நூலில் உள்ளதுபோல்தான் உள்ளது. ஆகையினால், பதபம பதமஸரிகஸா இந்த விசேஷ ஸஞ்சாரங்கள் உண்டு.

10. மாஹூரி: ஸ. சூ; ரா. ல. இவற்றிற் காணும் கிரமங்கள் ஸரிகரிமபநி; தபமகரிஸ ஆகும். இந்நூலில் உள்ளபடியே ஸ. ஸா. ஸ. த்தில் இருக்கிறது.

16. சுத்தவசந்தா: ஸ. சூ வில் ஸரிகமபநிஸ; ஸதநிபமகரிஸ என்றுளது. இந்நூலிலுள்ளதே சரி.

19. பூர்வகௌளா: ஆரோகணம் ஸரிமகரிமபநிதநிஸ என்றும் ஒரு மதம் உண்டு.

21. சகநா அல்லது ஸஹனு: முன் ஹரிகாம்போதி மேளத்தில் ஸௌராஷ்டிரம் கௌளிபந்து இவை ஜன்யங்களென்று தவறி வந்துள்ளனபோல, இங்கு ஸஹனுவும் சங்கராபரணத்தில் ஜன்யமென்று தவறி வந்திருப்பதோடு கிரமமும் சரியாயில்லை. ஸஹனு இராகம் ஹரிகாம்போஜி மேளத்தில் ஜன்யம்; (ஆ). ஸரிகமபமதநிஸ; (அ). ஸநிதபமகாமரி கரிஸ என்றவாறு. இவ்விதமே ஸங்கீத ஸாரஸங்கிரகத்திலும் சில இராகங்களின் ஜன்யங்கள் பிழையான மேளங்களின்கீழ் அமைக்கப் பட்டுள்ளன.

22. சம்புக்கிரியா: ரா. ல. த்திலும், பிற்காலத்தில் ஏற்பட்ட சில தமிழ் ஸங்கீத புத்தகங்களிலும் (ஆ). ஸகரிமபநிஸ; (அ). ஸநிபநிமகரிஸ; (அல்லது) ஸநிபமகரிஸா என்ற கிரமங்களுடன் காணப்படுகிறது. ஸ. சூ; ஸ. ஸா. ஸ த்தில் இது இல்லை.

23. காநடா: இந்த இராகம் இந்நூலிலும், ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகட்கு முற்பட்ட சில தமிழ் ஸங்கீத நூல்களிலும் சங்கராபரண ஜன்யமாகவே ஏற்பட்டிருக்கிறது. இந்நூல் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஏற்பட்டிருக்கிற தமிழ் நூல்களுக்கு முந்தியதென்பது ஸர்வநிச்சயம். ஸ்ரீ தியாகய்யர் அவர்களும் இந்த இராகத்தில் ஸ்ரீ நாரத என்ற கீர்த்தனத்தை இயற்றியிருக்கிறார்கள். ஆகையினால் இந்த இராகம் ஏறக்குறைய 200 ஆண்டுகளாக இருந்து வருகிறது என்னலாம். ஆக, இது பூர்வத்தில் தீரசங்கராபரண ஜன்யமாகவே இருந்து வருகிறது என்பதும் நிதர்சனமாகும். இதன் காந்தாரத்தைத் தீர்க்கமாகப் பாடி வருவதன் காரணமாக, காந்தாரத்தின் ஸ்தானம் குறைந்து, இதன் காரணமாக இந்தக் காந்தாரமானது இதில் ஏற்கனவே இருந்த காகலி நிஷாதத்தை, தன்னுடைய ஸம்வாதி ஸ்வரமான கைசிகி நிஷாதமாகச் செய்து கொண்டது. அதனோடு, மகாராஷ்டிர தேசத்திலிருந்து ஹரிகதை என்பது

தஞ்சாவூருக்கு வந்து பிரசாரமானதில், அந்த மகாராஷ்டிர பாகவதர்கள் கதைகளில் தர்பாரி காநடா என்ற இராகத்தில் உருப்படிகளைப் பாடி இங்குக் கேட்டதன் காரணமாகவும், இங்குள்ள காநடாவில் சாதாரண காந்தாரமும், கைசிகி நிஷாதமும் காலக்ரமத்தில் ஏற்பட்டு விட்டன என்னலாம்.

இவைகளின் காரணமாக, இந்த இராகத்தை இப்பொழுது காஹர ப்ரியாவின் ஜன்யமென்று சொல்ல வேண்டிய அவசியம் வந்து விட்டது என்னலாம். இப்பொழுது பாடுவதில் காகலிநிஷாதமும், காந்தாரம் தீவிரமும், கோமளமும் இல்லாத நிலைமையிலும் காணப்படுவதைப் பார்க்கும்பொழுது இந்தக் காநடா முன் சங்கராபரண ஜன்யமாகவே இருந்திருக்க வேண்டுமென்று கருதவேண்டியிருக்கிறது. ஆக, சங்கராபரண ஜன்ய காநடாவுக்குக் கர்நாடகக் காநடா என்றும், கரஹரப்பிரியாவில் ஜன்யமாக ஆக்கியிருக்கிற காநடாவுக்குத் தேசியகாநடா என்றும், இனி அழைக்கப்பட வேண்டியது அவசியமாகிறது. (சங்கரகானடா என்றும் ஹரிகானடா என்றும் பெயரிடலாம்) இதன் இறக்கம் இந்நூலிலுள்ளது பிழையாகும்.

(ஆ). ஸரிகமபமதநிஸ

(அ). ஸநிபதநிதபமகாமரிஸ

வேறு :

ஸநிஸதாநிபா

தநிதபமகாமரிஸ

திருவொற்றியூர் தியாகய்யர் இயற்றிய நிந்நேகோரி வர்ணத்தில் நிஸநிதாநீதபதப என்ற பிரயோகமும் காணப்படுகிறது.

இது பாஷாங்கராகம்.

இன்னும், காநடா என்பது மிகப் பிராசீனராகமென்றும், மிகப்பிராசீன கிரந்தங்களில் கர்ணாட என்றிருப்பதுதான் நாளடைவில் காநடா என்று திரிந்ததென்றும், அது சுத்த ஸ்வரங்களையுடைய ஷட்ஜக்ராம மேளத்தைச் சேர்ந்ததென்றும், பிறகு க்ராமஸாதாரணம் என்று உண்டானதில் அந்தர காந்தார காகலி நிஷாதம் என்று இரு ஸ்வரங்கள் ஏற்பட்டு, இவை காநடா இராகத்திலும் கலந்து வந்ததன் பயனாக, இந்த இராகத்திற்குக் காகலி நிஷாதமும் அந்தர காந்தாரமும் நீடித்த காலமாகவே கலந்து வந்ததன் பயனாக, பிற்காலத்தில் இதைத் தீர சங்கராபரணத்தின் ஜன்யமாகச் சிலர் போட்டிருக்கிறார்கள் என்றும், சில சாராருடைய கொள்கையும் உண்டு.

இந்த மேளத்தில் ஜன்யங்களான தேவகாந்தாரி, பிஹாக், ஹம்ஸத்வனி முதலிய சில பிரசித்த இராகங்கள் காணப்படவில்லை.

30. நாகநந்தினி மேள ஜன்யங்கள்

190. நாகநந் தினிமேளம் சதுரிஷப
மந்தரக் கா.நவிலும் கா.நிஷாதம்
சோகமிலா ஷட்தைவ மவற்றுள்
ஸாமந்தந் துலங்கு மேற்றம்
வாகுள பூரண மாகுமவ
ரோகஞ்சநி தநிபம கரிசாவாய்
தாகமுள விதைமுப் பதாமே
ளகர்த்தா வாய்ச்சாற் றுநூலே.

(இ - ள்). நாகநந்தினி மேள இலக்ஷணம்: சதுச்ருதி ரிஷபம்; அந்தரகாந்தாரம்; காகலிநிஷாதம்; ஷட்ச்ருதி தைவதம்.

இதன் ஜன்யம்:

1. ஸாமந்தம்: (ஆ). பூர்ணம்; (அ). சநிதநிபமகரிசா.

இது, முப்பதாம் மேளம்.

31. யாகப்பிரியா மேள ஜன்யங்கள்

191. யாகப் பிரியா மேளம் ஷட்ரிஷப
மந்தரக் காவதிலே வந்த
போக கலஹம் ஸாவி ஞரோகம்
சரிமப தநிசா புல்லும்
ஏக மதாமிறக் கமது சநிதப
மகரிசவா யியம் புமிதை
தோகை யரேமுப் பத்தி யொன்று
குமேள மெனச்சொல் லுநூலே.

(இ - ள்). யாகப்பிரியா மேள இலக்ஷணம்: ஷட்சுருதி ரிஷபம் அந்தரகாந்தாரம். மற்றவை சுத்தமாம்.

---

30. நாகநந்தினி

1. ஸாமந்தம்: இதன் ஆரோகணம் ரா. ல; ஸ. சு; இவைகளிலும் இதர நூல்களிலும் ஸரிஸமகமபதநிஸ என்றிருக்கிறது.

இதன் ஜன்யம் :

1. கலஹம்ஸா : (ஆ). சரிமபதநிசா ; (அ). சநிதபமகரிச.

இது, முப்பத்தொன்றும் மேளம்

32. இராகவர்த்தனி மேள ஜன்யங்கள்

192. ராகவர்த் தனிமேளம் ஷட்ரிஷபம்
அந்தரக் காந்தாரங்கைகி ஷாதம்
ஆகுமதில் வரும்ராக சூடா மணியி
னேற்றந் தநியில் லாதாம்
மோகமதி லிறக்கத் திலாம்ச நிதம
ரிகசா மொழியு மீதைச்
சேகரமா முப்பத் திரண்டா
குமேள மெனச்செப் புநூலே.

(இ - ள்). இராகவர்த்தனி மேள இலக்ஷணம் : ஷட்சுருதி ரிஷபம் ; அந்தரகாந்தாரம் ; கைசிகநிஷாதம். மற்றவை சுத்தம்.

இதன் ஜன்யம் :

1. சூடாமணி : (ஆ). த.நி. வர்ஜ்யம் ; (அ). சநிதமரிகசா.

இது, முப்பத்திரண்டாம் மேளம்

33. காங்கேய பூஷணி மேள ஜன்யங்கள்

193. காங்கேய பூஷணிக்கு ஷட்ரிஷப மந்தர
காந்தாரம் காகலி நி.யாகும்
தாங்கிய யதிலுதித்த கங்கா தரங்கிணி
யாரோக மதில்தநியே வர்ச்சியம்
ஓங்குமி றக்கம் சநிதப மகமரி
சாவென் றேயோது மீதை
பூங்குயி லேமுப் பத்துமூன் றாகு
மேள மெனப்புகலு நூலே.

---

31. யாகப்பிரியா

1. கலஹம்ஸா : ஸ. சு ; ஸ. ஸா. ஸ. இவற்றில் இதன் எற்ற மிறக்கம் (ஆ). ஸரிமபதநிதஸ ; (அ). ஸநிதபமரிஸ என்று கூறப்பட்டிருக்கிறது.

(இ - ள்). காங்கேயபூஷணி மேளத்தின் இலக்ஷணம்: ஷட்சுருதி ரிஷபம்; அந்தரகாந்தாரம்; காகலி நிஷாதம். மற்றவை சுத்த ஸ்வரங்கள்.

இதன் ஜன்யம்:

1. கங்காதரங்கிணி: (ஆ). த.நி. வர்ஜ்யம், (அ). சநிதபமகமரிசா.

இது, முப்பத்து மூன்ரும் மேளம்

34. வாக்தீசுவரி மேள ஜன்யங்கள்

194 தரமுளவாக் தீச்வரி மேளம்
ஷட்சுதி ரிஷப மந்தரக்காந்
தாரமே சதுதை கைசிக நிஷாதம்
தருசாயா நாட்டையி னேற்றம்
நிரமுளத நியேவர்ச் சமாம்;இ றக்கம்
நீள்ச நிதநிப மரிசா
நிகழ்த்திய பானு மஞ்சரி யேற்றம்
நேரிறக்கத் தில்தா வர்ச்சம்;
மருசார தாபரணத் தினேற்றம்
சமகம பமதநி சவிறக்கம்
மன்னிய சநிதம பமமரி
ரிசாமருவு மென்றிதனை வல்லோர்கள்
பெருகு முப்பத்து நான்கதா மேளப்
பெருமையா மென்றுநா லாய்ந்து
பேசினர் நிலவை முத்தினைப் பழித்த
பெற்றியா நகையுள மாதே.

(இ - ள்). வாக்தீசுவரி மேளத்தின் இலக்ஷணம்: ஷட்சுருதி ரிஷபம்; அந்தரகாந்தாரம்; சதுச்ருதி தைவதம்; கைசிக நிஷாதம். சுத்த மத்யமம்.

இதன் ஜன்யங்கள்:

1. சாயாநாட்டை: (ஆ). த. நி. வர்ஜ்யம்; (அ). சநிதநிபமரிச.
2. பானுமஞ்சரி: (ஆ). த. வர்ஜ்யம்; (அ). த. வர்ஜ்யம்.
3. சாரதாபரணம்: (ஆ). சமகமபமதநிச; (அ). சநிதமபமமரிரிச.

இது, முப்பத்து நான்காவது மேளம்

---

34. வாக்தீசுவரி

2. பானுமஞ்சரி; மற்ற நூல்களில் (ஆ). ஸரிகமபநிஸ; (அ). ஸநிபமரிகரிஸ; இதுவே சரியானது.

35. சூலினி மேள ஜன்யங்கள்

195. சூலினி மேளம் ஷட்சுதி ரிஷபம்
துலங்கு மந்தர காந்தாரம்
சூழுமே சதுதை காகலி நிடதம்
தோன்றுதே சாட்சியி னேற்றம்
மாலுள மநியே வர்ச்சமா மிறக்கம்
மகிழ்சநி தபமக மரிசா
மன்னிய கானவா ரிதிதனக்கு
வகுத்தவா ரோகணச் சுரங்கள்
மேலதாம் சமரிக மபதநி சவாய
விரும்பிய விறக்கமாஞ் சுரங்கள்
விருதுகொள் சதநிப மரிசா வெனவே
விள்ளுவர் நூலதனை யாய்ந்தோர்
ஏலவே யிதனை முப்பத் தைந்தா
மேளமென் றியம்பினர் கடலி
லெழுந்த நல்லமுதை மகிழ்ந்து வானோர்க்
கீந்தருள் மோகினி மாதே.

(இ - ள்). சூலினி மேள இலக்ஷணம்: ஷட்சுருதி ரிஷபம்; அந்தரகாந்தாரம்; சதுச்ருதி தைவதம்; காகலிநிஷாதம். சுத்த மத்யமம்.

இதன் ஜன்யங்கள் :

1. தேசாட்சி : (ஆ). ம.நி, வர்ஜ்யம் ; (அ). சநிதபமகமரிசா.
2. கானவாரிதி : (ஆ). சமரிகமபதநிச ; (அ). சதநிபமரிசா.

இது, முப்பத்தைந்தாம் மேளம்

36. சலநாட்டை மேள ஜன்யங்கள்

196. அமைசல நாட்டை ஷட்சுதி ரிஷபம்
அந்தர காந்தாரம் ஷட்தை
யாளகாகலி நிடாத மதாகும்;
அதில்வரு நாட்டையி னேற்றம்
உமைகொளும் சரிகம பநிபத நிசா
வூதிய கதயிலெ யிறக்கம்

உதயரவி சந்திரிகை சரிசம
ரிமபச நிசவேற்ற மோதும்
கமையுமி றக்கம் கதயிலேத் துணையாம்
சுத்தகம் பிரநாட் டையேற்றம்
காணிரு விடத்தும் ரிதயிலே; சுத்த
மத்திம மேற்ற மிறக்கம்
நிமைகொள் பூரணமா மிதைமுப் பத்தாறு
மேளமா மிவ்வகை நிலேத்த
நேர்முப் பத்தாறும் சுத்தமத் திமமாய்
நிகழ்த்தி னரழகிய மாதே.

(இ - ள்). சலநாட்டை மேள இலக்ஷணம் : ஷட்சுருதி ரிஷபம்; அந்தரகாந்தாரம் ; ஷட்சுருதி தைவதம் ; காகலி நிஷாதம்.

இதில் வரும் ஜன்யங்கள் :

1. நாட்டை : (ஆ). சரிகமபநிபதநிசா ; (அ). க.த. வர்ஜ்யம்.

2. உதயரவிசந்திரிகை : (ஆ). சரிசமரிமபசநிச ; (அ). க.த. வர்ஜ்யம்.

3. கம்பீரநாட்டை : (ஆ). ரி.த. வர்ஜ்யம் ; (அ). ரி.த. வர்ஜ்யம்.

4. சுத்தமத்திமம் : (ஆ). பூர்ணம் ; (அ). பூர்ணம்

இது, முப்பத்தாறும் மேளம்

---

36. சலநாட்டை

1. நாட்ட : இதில் எற்றம் ஸரிகமபநிபதநிஸ என்றிருப்பதைக் கவனிக்க.

2. உதபரவிசந்திரிகா : இந்த ராகம் பற்றி 20-வது நடபைரவி மேளத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இப்பெயர் இங்கு மறுபடியும் வரக்காரணமில்லே ; ஆனல், எற்றமிறக்கம் வேறுவிதமாப் இருக்கிறது. ஸ. ஸா. ஸ. த்தில் மாத்திரம் இது இதே விதமாய்க் காணப்படுகிறது. வேறு கிரந்தங்களில் இம்மேளத்தில் இம்மாதிரியான எற்றமிறக்கம் இருப்பதாகத் தெரியவில்லே. ஆகையினல், புதிதாயுள்ள இந்த ஆரோகண அவரோகணமுள்ளதற்கு வேறு பெயர் கொடுக்க வேண்டியதவசிய மாகும்.

3. கம்பீரநாட : இந்த இராகத்தின் ஸ்வரக்ரமங்கள் பிற சில நூல்களிலும், இராகலக்ஷணம் என்ற நூலிலும், ஸரிகமபதநிஸ ; ஸநிதப

பிரதி மத்திம மேளகர்த்தாக்கள்

37. ஸாலக மேள ஜன்யங்கள்

197. தவறிலாப் பிரதிமத் திமஞ்சொல்
வாம்சா லகமேள மாந்தனக்கு
தனிப்பிரதி மத்ய மிதரமாம் சுத்தம் ;
சனித்திடும் சாள்வகத் தேற்றம்
புவிபுகழ் சகரிக மபதநி தசா
புகலுமே ; இறக்கத்தின் சுரங்கள்
பொங்கிய சநிதப மகரிகரிச புகழ்ந்
திடும் போகசா வேரி
நவரச மொழுகு மேற்றச் சுரங்கள்
நவிலுமே சசரிம பதநி
நண்ணிய விறக்கச் சுரங்களே வகையா
நாட்டுவை தபமக ரிசசா
குவலைய மேத்து மிதைமுப் பத்தேழா
மேளத்தின் கொள்கையா மெனவே
கூறுவர் சங்கைக் கமுகினைப் பழித்துக்
குறைபடாக் களமுள மாதே.

(இ - ள்). சாலக மேளத்தின் இலக்ஷணம் : பிரதிமத்யமம் ; இதரம் சுத்தம்.

இதன் ஜன்யங்கள் :

1. சாள்வகம் : (ஆ). சகரிகமபதநிதசா ; (அ), சநிதபமகரிகரிச.
2. போகசாவேரி : (ஆ). சரிமபதநி ; (அ). தபமகரிச.

இது, முப்பத்தேழாம் மேளம்

மகரிஸ என்றிருக்கிறது. ஆகையால் இந்த நூலில் ரி.த. இல்லை என்று சொல்வதால் இது சுத்தநாட ஆகும். சுத்த நாடைக்கு எற்றமிறக்கம் ஸகமபநிஸ ; ஸநிபமகஸா ஆம். சுத்தநாட என்று இப்பெயர் திருத்தப் பட வேண்டும்.

37. ஸாலக

இது ஸாளவி அல்லது ஸாள்வகம் என்றும் பெயர் பெறும். அவ ரோகணம் மகரிஸ என்றுமுண்டு.

38. ஜலார்ணவம் மேள ஜன்யங்கள்

198. அருமையாம் மேலோங்கும் ஜலார்ணவ
மேளமாம் பிரதிமத் திமகைநி
அதில்வரும் ஜகன்மோ கனத்தி னாரோக
மாம்சரி மபதச நிசசா
பெருமையா மிறக்கம் பூரண மாகும்;
பெருகுசு மாவளி யேற்றம்
புரளும்க வர்ச்சம்; இறக்கமே சநிதப
மகமரி சவெனப் பேசும்
திருத்தமாஞ் சந்திர ஸ்வரூபியி னேற்றம்
தெளிவதாம் தஇலே யிறக்கம்
செல்லுமே சநிதப மதமக
ரிசசீர் பெறுமிதனை வல்லோர்கள்
முறைமுறை யாக யாவரு மறிய
முப்பத் தெட்டதா மேளம்
மொழிகுவ ரானை மயங்கிடச் செய்த
மோகன வடிவுள மாதே.

(இ - ள்). ஜலார்ணவம் மேளத்தின் இலக்ஷணம்: கைசிக நிஷாதம்; ப்ரதிமத்யமம்; மற்றவை சுத்தம்.

இதன் ஜன்யங்கள்:

1. ஜகன்மோகனம்: (ஆ). சரிமபதசநிச; (அ). பூர்ணம்.
2. குசுமாவளி: (ஆ). க. வர்ஜ்யம்; (அ). சநிதபமகமரிச.
3. சந்திரஸ்வரூபி: (ஆ). த. வர்ஜ்யம்; (அ). சநிதபமதமகரிச.

இது, முப்பத்தெட்டாம் மேளம்

---

38. ஜலார்ணவம்

2. குஸுமாவளி: வேறு—ஸரிகமபதபஸ; ஸநிதபமகரிஸ.

71-வது மேளத்தில் ஜன்யமாக குஸுமாவளி என்ற இராகம் இந்நூலிலும் இருக்கிறது. அதன் கிரமம் வேறாக இருக்கிறது. 71-வது கோஸல மேள ஜன்யமாகிற குஸுமாவளிக்குக் கிரமங்கள் ஸகமபதஸ; ஸநிதபமகரிஸா என்றும் சில புத்தகங்களிற் காண்கிறது.

3. சந்திரஸ்வரூபி: இந்த இராகம், பார்த்தவரையில், பிற நூல்களில் காணப்படவில்லை.

39. ஜாலவராளி மேள ஜன்யங்கள்

199. சாலவ ராளி மேளந் தனக்குத்
தனிப்பிரதி மத்திமம் காநி
தனில்வரும் கோகிலப் பஞ்சமத்
திற்றரு மாரோகணச் சுரங்கள்
ஏ லுமே சகரிச சபதநி சசா
யிறக்கம் சநிதப பதநிசா ;
எண் ணும் பூபாள பஞ்சமம் தனக்
கேற்றம் சகரிக பமதசா
கோ லுமி றக்கம் சபதம சரிசச
கரிச ; கொள்கையாம் வராளி
கொளுமேற் றம்சகரிக மபதநி சவாக்
கூறுமே யிறக்கம் பூரணமால்
மாலதா மிதனைச் சாத்திர மோதுவகை
முப்பத் தொன்பதா மேளம்
மாங்குயில் போலத் தாங்கிய
மொழிகள் வழுத்திய கமலமின்னரசே.

(இ - ள்). ஜாலவராளி மேள இலக்ஷணம்: காகலி நிஷாதம் ; பிரதிமத்தியமம் ; மற்றது சுத்தம்.

இதன் ஜன்யங்கள் :

1. கோகில பஞ்சமம் : (ஆ). சகரிசசபதநிச ; (அ). சநிதப பதநிசா.

2. பூபாள பஞ்சமம் : (ஆ). சகரிகபமதசா ; (அ). சபதமசரிச சகரிச.

3. வராளி : (ஆ). சகரிகமபதநிச ; (அ). பூர்ணம்.

இது முப்பத்தொன்பதாம் மேளமாம்

---

39. ஜாலவராளி

1. கோகில பஞ்சமம் : வேறு—பதநிஸரிகரிஸநிதா.

